பத்ஹுர் ரப்பானி

முக்கிய விபரம்

ஹஜ்ரத் கௌதுல் அஃலம் (ரலி) அவர்கள், தங்கள் பிரசங்கங்களைத் தொடங்குமுன் முதலில் அல்ஹம்துலில்லாஹி ரப்பில் ஆலமீன் (சர்வ புகழும் சர்வலோக ரட்சகனாகிய அல்லாஹ் வுக்கே) என்று மூன்று தடவை மொழிவார்கள். ஒவ்வொரு தடவை மொழிந்த பின்னும் ஒரு நிமிஷம் மௌனமாய் இருப்பார்கள். பிறகு அல்லாஹ்வின் அஸ்மாக்களில் சிலவற்றையும், ஷஹாதத்துக் கலிமாவையும் கூறி, நாயகம்(ஸல்) அவர்கள்மீது ஸலவாத்து ஓதி, சில துஆக்களையும் ஓதுவார்கள். பின்பு கீழ்க்கண்ட கருத்தைப் பொதிந்த துஆவையும் ஓதிவருவார்கள்.

"இறைவனே, பெருமானார் முஹம்மது (ஸல்) அவர்கள் மீதும், அவர்களின் கிளையார் மீதும் நீ ஸலவாத்துச் சொல்லியருள். இமாமையும், உம்மத்தையும், அதிபதியையும், பிரஜைகளையும் நீ பாதுகாத்தருள். அவர்கள் மத்தியிலே நல்ல காரியங்களில் ஐக்கிய மனோபாவத்தை அமைத்தருள். ஒருவருக்கொருவர் செய்யும் பொல்லாங்குகளை அகற்றியருள். ஆண்டவனே, எங்கள் சர்வ அந்தரங்கங்களையும் நீயே மிகவும் அறிந்தவன். ஆகையால், அவற்றை நீயே நல்லவையாக்கியருள். எங்கள் தேவைகளை நீயே நன்கு தெரிந்தவன். ஆகையால், அவைகளை நீயே நிறைவேற்றித் தந்தருள். எங்கள் பாவதோஷங்களையெல்லாம் நீ நன்கு உணர்ந்திருக்கிறாய், எனவே, அவற்றையெல்லாம் நீ மன்னித்தருள். எங்கள் குற்றங் குறைகளை நீ மிகவும் விளங்கியிருக்கிறாய். எனவே, அவற்றையெல்லாம் மறைத்து உதவியருள். நீ விலக்கியவைகளில் நாங்கள் பிரவேசித்திடாமலும், ஏவியவைகளில் நாங்கள் அலட்சியம் செய்து இழந்திடாமலும் கண்காணித்தருள். உன் திக்று தியானத்தை நாங்கள் ஒருக்காலும் மறக்காதபடி அருள்செய். உன் ஆக்கினை பற்றி அச்சமுடையவர்களாக எங்களையிருக்கச் செய். எங்களை உன்னல்லாதவர்களிடம் தேவைப்படும்படியாய் ஆக்கி விடாதே. உன்னை மறந்தவர்களின் கூட்டத்தில் எங்களைச் சேர்த்திடாதே.

"இறைவனே, எங்களுக்கு நேர்வழியை உதிப்பாக்கித்தா! எங்கள் மனத் தீங்குகளை விட்டு எங்களை ஈடேற்றிவை, உன்னல்லாதவர்களையெல்லாம் விட்டு விலகி, உன்னளவிலேயே நாங்கள் ஈடுபட்டிருக்

கும்படி செய். உன் தொடர்பைவிட்டு எங்களைத் துண்டிக்கும் நாச சக்திகள் யாவையும் எங்களை விட்டும் இல்லாமலாக்கிவிடு. உன்னையே தியானிப்பதையும், உனக்கே நன்றி செலுத்துவதையும், உன்னை வழிபடும் இபாதத்தில் சிறந்த வணக்கத்தையும் எங்களுக்கு உதிப்பாக்கித் தந்தருள்!"

இவ்வாறான துஆவை ஓதிய பிறகு வலது பக்கம் திரும்பிக் கொண்டு "லாஇலாஹ–இல்லல்லாஹு–மாஷா அல்லாஹு–லா–ஹவ்ல–வலா–குவ்வத–லனா– இல்லா–பில்லாஹில்–அலிய்யில்–அளீம்" (அல்லாஹ்வைத் தவிர வேறு நாயன் இல்லை. அல்லாஹ் நாடியது நடக்கும், உன்னதமும் வலுப்பமும் மிக்க அல்லாஹ்வைக் கொண்டல்லாமல் நமக்கு எவ்விதச் செயலாற்றும் திறமையோ சக்தியோ கிடையாது) என்று மொழிவார்கள். பின்பு தங்கள் முன்பக்கம் நோக்கிக் கொண்டும், அதற்கப்பால் இடது பக்கம் திரும்பிக் கொண்டும் இவ்வாறே மொழிவார்கள்.

அதற்கப்பால், "எங்கள் சேமிப்புகளை இழக்கச் செய்துவிடாதே! எங்கள் மர்மங்களை வெளியாக்கி நிந்தனைக்காளாக்கிவிடாதே. எங்கள் தீய செயல்களைக் கொண்டு எங்களைக் குற்றஞ்சாட்டாதே. உன்னை மறந்த வாழ்வில் எங்களை உழலச் செய்யாதே. மருட்சியில் மதிமயங்கி யிருப்பது கொண்டு எங்களைக் குற்றஞ் சாட்டாதே!" என்ற கருத்துள்ள பிரார்த்தனை புரிந்து, "எங்கள் ரட்சகனே, நாங்கள் மறந்து விட்டாலும் அல்லது பிழை செய்துவிட்டாலும் அதற்காக எங்களை நீ குறைகூறாதே! எங்கள் ரட்சகனே, பொறுப்புச் சுமையை எங்களுக்கு முன்னுண்டானவர் களின் மீது நீ சுமத்தியதைப்போல் எங்கள் மீது சுமத்தி விடாதே! எங்கள் ரட்சகனே, எங்களால் தாங்கச் சக்தியில்லாததை எங்கள் மீது சுமத்தி விடாதே. எங்களை விட்டு எங்கள் பாவங்களைப் பொறுத்தருள். எங்கள் பாவங்களைப் பொறுத் தருள்! மேலும் எங்களுக்கு அனுக்கிரகம் புரிந் தருள்! நீ எங்கள் எஜமானன், ஆகவே, அவிசுவாசிகளுக்குப் பாதகமாயும், எங்களுக்குச் சாதகமாயும் நல்லுதவி செய்!" என்ற திருகுர்ஆன்(2:286) வசனத்தையும் ஓதிமுடித்துக் கொண்டு தங்கள் பிரசங்கத்தை நிகழ்த்த ஆரம்பிப்பார்கள்.

அவர்களின் பிரசங்கமெல்லாம் அல்லாஹ்வின் அருள் ஞான ஊற்றிலிருந்து மறைமுகமாகப் பொங்கி அவர்கள் திருநாவு வழியே வழியும் ஞான அமுதாகவே இருக்கும். குறிப்பு எழுதித் தயாரித்தோ அல்லது மற்றவர்கள் பேசியதை அடிப்படையாக வைத்து அதைத் தழுவியோ ஹஜ்ரத் அவர்கள் பேசியதில்லை. சில சந்தர்ப்பங்களில் நாயகம் (ஸல்) அவர்களின் ஹதீஸிலிருந்து ஒன்றையோ அல்லது ஞான மெய்யடியார்களான நாதாக்களின் தத்துவ ஞான மொழியிலிருந்து ஒன்றையோ பொதுவாக அருளன்பு பரக்கத்தை நாடி முதலில் பிரஸ்தாபித்துக் கொண்டு பிறகு சொற்பொழிவைத் தொடர்ந்து நிகழ்த்துவதுண்டு.

★ ★ ★

பத்ஹுர் ரப்பானி

முதலாவது பிரசங்கம்

கௌதுல் அஃலம் முஹ்யித்தீன் அப்துல் காதிர் ஜீலானி (ரலி) ஆண்டகை அவர்கள் ஹிஜ்ரி 545 ஷவ்வால் மாதம் பிறை மூன்று ஞாயிற்றுக்கிழமை காலையில் நிகழ்த்தியது:

'தக்தீர்' (விதிவசம்) பிரத்யிக்ஷமாகும்போது படைத்தவனைக் குறை காண்பது மதத்தின் மரணமாகும்; தௌஹீதின் (ஏகத்துவம்) சாவாகும்; தவக்கலி (அல்லாஹ்விடம் நம்பிக்கை வைத்தலி) னதும் உண்மை யினதும் அழிவாகும். மூமினான அடியானின் மனமோ, நிகழ்ச்சிகள் ஏன், எப்படி நடக்கின்றன என்ற ஐயங்கொள்ளாது, 'சிரம் சாய்க்கிறேன்' (ஆம், நடந்ததே சரி) என்று ஒப்புக்கொள்ளும்.

மனிதனுடைய நப்ஸானது இறை நாட்டத்தை எதிர்க்கும் தன்மை யும் முரண்படும் சுபாவமும் உடையது, ஈடேற்றம்பெற விரும்புபவன் மனத் திலுள்ள தீமைஉணர்ச்சிகள் அடங்கி அமைதியுறும்வரை சகமுயற்சி யிலும் ஆத்மப் பிரயாசையிலும் ஈடுபட வேண்டும். மனமானது ஆரம்ப நிலையில் தீமையின் உருவாய் அமைந்துகிடக்கிறது. ஆனால், நற் பிரயாசையும் சத்முயற்சியும் நிறைவுபெற்று அடக்கமும் சாந்தியும் ஏற்பட்டதும் அது முற்றும் நன்மை நிறைந்ததாகி விடுகிறது. அப்போது தான் சட்டத்துக்கு அடிபணிவதற்கும் விலக்கப்பட்டவைகளைத் தவிர்ப் பதற்கும் ஒத்ததாகவும் ஏற்றதாகவும் ஆகிறது. அந்நிலையில்தான், "அடக்கம் பெற்றுள்ள நப்ஸே, உன் இறைவனை உவந்ததாயும், அவனால் உவக்கப்பட்டதாயும் அவனிடம் திரும்பு!" என்ற விளிப்பு உண்டாகிறது. அச்சமயத்தில்தான் அடியானின் தவக்கல் எனும் தெய்வ நம்பிக்கை சீர் பெற்றதாகிறது. அவன் நப்ஸின் தீயஅம்சங்கள் அழிந்தவையாகிவிடு கின்றன; சிருஷ்டிகளின் சம்பந்தங்களும் அற்றுப்போகின்றன; இப்ராஹீம் (அலை) அவர்களின் வழியை உண்மையிலேயே பின்பற்று வதாகிறது.

இப்ராஹீம் நபி (அலை)யோ தன் நப்ஸின் ஆட்சியின் நிலைமையிலிருந்து வெளியேறியவராவார்கள்; இச்சைகள் அற்றுப்போன நிலையில் தரிபட்டிருந்தவர்களாவார்கள். அவர்கள் இதயமும் நிம்மதி, அமைதி, சாந்தி ஆகியவற்றை அடையப்பெற்றதாய் அடங்கி இருந்தது. (அக்கினிக் குண்டத்தில் இடப்பட்ட சமயம்) சிருஷ்டிப் பொருட்களில் பலவிதமானவை முன்வந்து உதவிக்குத் தயாராய் இருப்பதாகக் கூறின. ஆனால், அவர்களோ, "உங்கள் உதவியை நாடவில்லை. என் நிலைமையை அவன் அறிந்துள்ளான். நான் கேட்பதைவிட்டும்கூட என்னைத் தேவையற்றவனாக்கக் கூடியவனும் அவனே" என்று பதிலளித்து விட்டார்கள். அவர்களின் இஸ்லாமும், தெய்வ நம்பிக்கையும் (சோதனையில்) சீர்பெற்றனவாய் விளங்கிய தறுவாயில், "இப்ராஹீம் மீது குளிர்ச்சியும் சுப சாந்தியும் உடையதாய் ஆகுக!" என்று நெருப்புக்கு இறைவனிடமிருந்தே ஆணை உண்டாகிவிட்டது. எனவே, பொறுமையாளர்களுக்கு அல்லாஹ்வின் உதவி இவ்வுலகிலும் அளவற்றவையாகும்; மறுமையிலும் அவர்கள் அடையக்கூடிய பேறுகள் அளவற்றவையாகும். "நிச்சயமாகப் பொறுமையாளர்களுக்கு அவர்களுக்குரிய சன்மானங்களை அல்லாஹ் அளவற்று அளிப்பான்" என்று அல்லாஹ்த் தஆலா அருளியுள்ளான்.

ஒரு வஸ்துவும் அல்லாஹ்த்தஆலாவின் முன் மறைந்ததாய் இருக்க முடியாது. அவனை முன்னிட்டுப் பொறுத்துக் கொள்வோரின் பொறுப்புக்களெல்லாம் அவன் பார்வையிலிருந்துதான் வருகின்றன. இறைவனுடன் (அவன் நாட்டமே நடந்தேறுவதில்) ஒரு மணி நேரம் பொறுமையுடைய வர்களாய் இருந்தால் பல்லாண்டுகள் அதன் பலனாய் அவன் அருட்கொடைகளை அனுபவிக்கலாம். உண்மையான வீரம் யாதெனில் நேரமெல்லாம் பொறுமையாய் இருப்பதேயாகும். "நிச்சயமாக அல்லாஹ் (அவன் உதவியைக்கொண்டும்) பொறுமையாளர்களுடன் இருக்கிறான்." எனவே, அல்லாஹ்வுடன் பொறுமையுடையவர்களாகுங்கள். அவனை மறந்தவர்களாகிவிடாதீர்கள். விழித்தெழுவதை மரணத்துக்குப் பின்னர்ச் செய்வோமென்று விட்டுவைத்து விடாதீர்கள். உங்களை அனுசரியாமல் உங்களை விழித்தெழுந்து பார்க்கச் செய்யும் நேரம் வருமுன் நீங்களாகவே விழித்தெழுந்து கொள்ளுங்கள்.

உங்களுடைய உள்ளங்களையும் பரிசுத்தமாக்குங்கள். உங்களுடைய உள்ளம் சுத்தம் பெற்றுவிடின் எல்லா நிலைமைகளும் தாமாகவே சுத்தமடைந்துவிடும். இதற்காகவே நபி (ஸல்) அவர்கள், "ஆதமுடைய மகனது ஜடலத்தில் ஒரு சதைக் கட்டி இருக்கிறது. அது சீர்பெற்றால் ஜடலம் முழுவதும் சீரடையும். அது சீர் கெட்டால் ஜடலம் முழுவதும் சீர்கெட்டுவிடும்" என்று இதயத்தை வர்ணித்துள்ளார்கள்.

உள்ளம் சீர்பெறுவது, பயபக்தி (தக்வா) தெய்வ நம்பிக்கை (தவக்கல்), ஏகத்துவ உணர்ச்சி (தௌஹீது,) நடத்தையில் உண்மை (இக்லாஸ்) ஆகியவைகளைக் கொண்டேயாகும். இவைகளில்லாதிருப்பதே உள்ளம் சீர் கெடுவதற்குக் காரணமாகும். இதயம் என்பது தேகமெனும் கூட்டிலுள்ள பறவையாகும்; பெட்டியிலுள்ள முத்தாகும்; கஜானா அறையிலுள்ள திரவியமாகும். நாம் பற்றிப் பிடிக்க வேண்டியது பறவையையேயன்றிக் கூட்டையன்று: முத்தையேயன்றிப் பெட்டியையன்று; திரவியத்தையேயன்றிக் கஜானா அறையையன்று.

அல்லாஹ்வே, எங்கள் உறுப்புக்களையெல்லாம் உனக்குக் கீழ்ப்படியச் செய்! எங்கள் உள்ளங்களை மெய்ஞானத்தின் பக்கல் திருப்பு! அவைகளிலேயே எங்கள் ஆயுட்காலத்தையும் இரவு பகல்களையும் ஈடுபடச்செய்! நல்லடியார்களுள் எங்களுக்குமுன் சென்றவர்களுடன் எங்களையும் சேர்த்து, அவர்களுக்கு அளித்தவற்றை எங்களுக்கும் அளித்து, அவர்களுடையவனாக இருந்து வந்ததுபோல எங்களுடையவனாகவும் இருந்து வா! ஆமீன்!

ஜனங்களே, உங்களுக்கு முன்னிருந்த நல்லடியார்கள் எப்படி அல்லாஹ்வுக்குரியவர்களாகத் திகழ்ந்தனரோ அப்படியே நீங்களும் – அவர்களுக்குரியவனாக அல்லாஹ் ஆனது போல், உங்களுக்கும் உரியவனாக அவன் ஆகும் வரை மகிமையும் பெருமையுமுள்ள அல்லாஹ்வுக்கே உரியவர்களாக விளங்க முயற்சியுங்கள். மகிமையும் பெருமையும் உள்ள மெய்ப்பொருள் உங்களுக்குரியதாக வேண்டுமென்று விரும்பினால், அவனுக்குக் கீழ்ப்படியுங்கள்; அவனோடு பொறுமையுடனிருங்கள்; உங்கள் விஷயங்களிலும், மற்றோர் விஷயங்களிலும் அவன் செய்கைகளைக் கொண்டு மனப் பொருத்தமே அடையுங்கள்.

அல்லாஹ்வுக்குரிய ஜனங்களோ உலகத்தில் அடக்கத்துடன் வாழ்வார்கள்; அவர்களுக்கு உலகில் விதிக்கப்பட்டிருப்பவைகளைப் பயபக்தியுடனும் பேணுதலுடனும் பிடித்திருப்பார்கள்; மறுமையைத் தேடி அதற்குரிய முயற்சிகளிலும் ஈடுபடுவார்கள்; தங்கள் மனப்போக்குகளை எதிர்த்து இறைவனுக்கே கீழ்ப்படிந்து வருவார்கள்.

உங்கள் உள்ளங்களுக்கு முதலில் உபதேசியுங்கள்; பிறகு இதரர்களின் மனங்களுக்கு உபதேசிக்கலாம். மகனே, உன் ஆத்மா வுக்கே நப்ஸுக்கே – முதன் முதலில் போதனை செய்! பிறகே மற்றவர்களுக்குப் போதனை புரிய முற்படு! உன்னில் சீர்திருத்தம் பாக்கியாக இருக்கும் நிலையில் பிறரைத்திருத்த நினைக்க வேண்டாம். நீயே மூழ்கும்நிலையில் பிறரைக் கரை சேர்ப்பதெப்படி? நீயே கண்ணில்லாதிருக்கையில் பிறரை வழி நடத்துவதெப்படி? கண்ணுள்ளவனே மனிதரை வழி நடத்தும் அருகதையுள்ளவன். நீஞ்சத் தெரிந்தவனே சமுத்திரத்திலிருந்து மற்றவரை வெளியாக்கக்கூடியவன். அல்லாஹ்வை அறிந்தவனே மானிடரை அல்லாஹ்வின் பக்கம் அழைத்துச் செல்லக் கூடியவன். அல்லாஹ்வை அறியாதவன், அல்லாஹ்வைப் பற்றிய ஆதாரங்களை எடுத்தோதமுடியுமா? அல்லாஹுத் தஆலாவை அறியாதவரை, அவன் மீது அன்பில் பூரணம் பெறாதவரை, இதரர்களுக்காகவன்றி, அவனை முன்னிட்டே முயற்சிகளைச் செய்யாதவரை, அவனையன்றி வேறு எவ்வஸ்துவையும் கண்டு பயப்படாதவரை உனக்குப் பேச்சும் போதனையும் வேண்டாம். உண்மையான உபதேசம் உள்ளத்திலிருந்து எழுந்து பொங்க வேண்டும். தொண்டைக் குழியிலிருந்து மட்டும் வரும் வெறும் சப்தம் உபதேசமாகாது. இத்தகைய உபதேசம் தனித்த இடத்திலிருந்து உண்டாகுமேயன்றிப் பகிரங்கத்திலிருந்து சுரக்காது.

வீட்டின் வாயிலில் தௌஹீதும் (ஏகத்துவக் கொள்கையும்) வீட்டுக் குள்ளே ஷிர்க்கும் (இணை வைக்கும் மனப்பான்மையும்) இருப்பின் என்ன பயன்? நாவில் சுத்தமும் உள்ளத்தில் அசுத்தமும் இருந்தென்ன பயன்? வாய் இறைவனுக்கு (ஷுக்ரு) நன்றி செலுத்துவதாயும், மனம் இறைவன் மீது குற்றம் காணுவதாயும் இருப்பின் யாது பயன்?

அல்லாஹுத்தஆலா, "ஆதமுடைய மகனே, என் நன்மை உன்னளவில் இறங்கிக் கொண்டிருக்க உன் தீமை என்னளவில் ஏறிக் கொண்டிருக்கிறது" என்றருளியுள்ளதை நினைவுபடுத்துங்கள். அவனுக்கு அடிபணிவதாகக் கூறுகிறீர்கள். உண்மையிலோ பிறரைத் தொடர்கிறீர்கள், உண்மை யிலேயே நீங்கள் அல்லாஹ்வின் அடியார்களாக இருப்பின் உங்களுடைய விருப்பும் வெறுப்பும் அவனை முன்னிட்டவைகளாகவே இருக்க வேண்டும். திட நம்பிக்கையுள்ள மூமின் தன் இச்சைகளுக்கு இடங்கொடான்; ஷைத்தானுக்குக் கீழ்ப்படியவு மாட்டான். உலகத்தின் முன் சிரம் சாய்க்கவுமாட்டான். இம்மையைக் கேவலமானதாக் கருதி, மறுமையை உயர்வானதாக நினைத்துத் தேடுவான். மறுமைப் பேறு கிடைக்கும் போது அதையும் விடுத்துத் தன் நாயனுடன் போய்ச் சேருவான். அவனை வணங்குவதை மட்டும் தன் ஒரே தொழிலாய்க் கொள்ளுவான். ஏனெனில், "ஒரு முகத்துடன், கலப்பறுதலுடன் மார்க்கத்தை அல்லாஹ்வுக்கே உரியதாக நினைத்து அல்லாஹ்வுக்கே அடிபணியுமாறே ஒழிய, வேறுவிதம் அவர்கள் ஆணையிடப்பட்டில்லை" என்பது திருமறை மொழியாகும்.

சிருஷ்டிகளைத் தெய்வமாகக் கொள்ளாது மகிமையும் பெருமையும் உள்ள மெய்ப்பொருளை ஒருமைப்படுத்தி வணங்கி வாருங்கள். அவனே சகல சிருஷ்டிப் பொருள்களையும் வரையறுத்தவன்; உற்பத்தி செய்தவன். அவனன்றி இதரப் பொருட்களைத் தேடித் திரிபவனே, உன் பகுத்தறிவு எங்குச் சென்றுவிட்டது? அல்லாஹ்வின் பொக்கிஷங்களில் இல்லாத ஒரு பெரும் பொருளும் உண்டா? அல்லாஹுத் தஆலா, "பொருள்களில் எதுவாய் இருப்பினும் சரி அவற்றின் பொக்கிஷம் நம்மிடம் இல்லா மலில்லை" என்றருளியுள்ளான்.

மகனே, பொறுமை என்னும் தலையணையின் மீது தலை வைத்தவனாக, தெய்வச் சித்தத்துக்கு ஒத்த வழியாக இருத்தல் எனும் போர்வையைப் போர்த்தியவனாக, தெய்வ நாட்டம் திறப்பதை எதிர்பார்த்தவனாக, வணங்கியவனாக, தக்தீரின் (விதிவசத்தின்) பாலத்தினடியே உறங்கியவனாக இருந்துவா. அவ்விதம் இருப்பின் தக்தீரை நிர்ணயிக்கும்

கருணா மாரியையும் பேறுகளையும் உன் மனத்திற்கு அடங்காத அளவில் பொழிந்தருளுவான்.

ஜனங்களே, தக்தீருக்கு இணங்கியவர்களாகுங்கள். தக்தீருக்கு இணங்கியவனாய்த் திகழ முயற்சித்துச் சித்தி பெற்ற அப்துல் காதிரின் பேச்சுகளை அங்கீகரியுங்கள். தக்தீருக்கு ஒத்து வாழ முயற்சித்தே 'காதிர்' ஆன, தக்தீரை நிர்ணயித்த சக்தி அல்லாஹ்வின் பக்கம் என்னை உயர்த்திச் சென்றது.

தக்தீரின் தோழர்களாகத் திகழுவோமாக! அப்போதுதான் தக்தீர் நம்மைக் 'காதிர்' ஆகிய நாயனளவில் கொண்டு சேர்க்கும். அங்கு தான் மெய்யான ஆட்சியும் ஆதரவும் அல்லாஹ்வுடையவை என்பதை எதிர்பார்க்கமுடியாத நிலையில் காண்போம். அங்குதான் அவனது மெய்ஞ்ஞானக் கடலிலிருந்து ஞானப்பேரமுதை அருந்துபவர்களா வோம். அதனுடைய பேறுகளை உட்கொள்பவர்களாவோம். அன்பே குடி கொண்டவர்களாக விளங்குவோம். அவனுடைய தயாளத்தினால் சூழப்பட்டவர்களாவோம். இத்தகைய பேறு லட்சத்தில் ஒருவருக்குக் கிடைப்பதரிதாகும். பல சந்ததிகளுள் ஒருவனுக்கே கிடைப்பதரிதாகும்.

மகனே, தக்வா எனும் பயபக்தியை உன்மீது விதியாகச்சாட்டு கிறேன். ஷரீஅத்தின் வரையறைகளைப் பேணுவதும் உன் கடமையாகும். மனப்போக்கையும் இச்சைகளையும், ஷைத்தானையும் தீய சகவாசத் தையும் எதிர்ப்பது உனக்கு இன்றியமையாததாகும். இவற்றுடன் சதா போர் புரிந்து கொண்டிருப்பவனே மூமினாவான். தீமையுடன் நிகழ்த்தும் போரில் அவன் தலையும் ஒய்வதில்லை; அவன் வாளும் உறைக்குள் செல்வதில்லை; அவன் குதிரையும் நின்றுவிடுவதில்லை.

அவசியம் தூங்கித் தீரவேண்டிய நேரத்திலேயே உங்களின் நித்திரை ஆகுமானதாக இருக்கவேண்டும். உங்கள் பேச்சு தேவையை முன்னிட்டதாக மட்டுமே இருக்கவேண்டும். மௌனமாக இருப்பதே நல்லடியார்களின் வழக்கமாகும். அவர்கள் தக்தீரால் தூண்டப்பட்டே யல்லாது பேச மாட்டார்கள். கியாம நாளன்று இறைவனால் கல்லுக்கும் பேசும் சக்தி அளிக்கப்படுவது போன்று, அவனால் பேசும்படி செய்யப்

படுபவர்களாய்ப் பேசுவார்களேயன்றி போதனைகளைச் செய்வார்களே யன்றி வேறன்று.

இத்தகைய வாக்குவன்மையுடனேயே இறைவன் நபிமார்களையும், ரஸூல்மார்களையும் தோற்றுவித்தான். அவர்களுக்குப் பின் மார்க்கக் கலைகளை அனுஷ்டிக்கும் அறிஞர்களுக்கும், இத்தகைய–தன்னுடைய தூண்டுதலை அடிப்படையாகக் கொண்டே பேசும் சக்தியைக் கொடுத் தருளி வருகிறான். இதன் பொருட்டே, "உலமாக்கள் நபிமார்களின் வாரிசுகளாவர்" என்று நபிகள் நாயகம் (ஸல்) நவின்றுள்ளார்கள்.

கனவான்களே, அல்லாஹுத் தஆலாவுக்கு அவனுடைய நன்கொடைகளை முன்னிட்டு நன்றி செலுத்துங்கள்! "உங்களிடமுள்ள நற்பேறுகள் யாவும் அல்லாஹ்விடமிருந்து வந்துள்ளவையே" எனும் திருக்குர்ஆன் வாக்கியப்படி சகலமும் அவன் புறத்திலிருந்தே அடையப் பெற்றிருப்பவை என்பதை உணருங்கள். அவனது நற்பேறுகளை அடைந் திருப்பவர்களுள் நன்றியறிதலுடன் இருப்போர் எத்தனை பேர்? அவனிட மிருந்து கிடைத்ததையே பிறரிடமிருந்து கிடைத்ததாக எண்ணு வோருமுளர். இறைவனின் பேறுகளை அலட்சியமாகக் கருதும் அறிவீனர்களும் உளர். இவையெல்லாம் பெருந்தவறாகும்.

அன்பர்களே, தீமையில் நின்று விமோசனம் பெறுவதற்கு வெளித் தோற்றத்தில் மட்டுமின்றி, உள்ளத்திலும் பயபக்தி அவசியமாய் இருக்கிறது. வேஷதாரிகளும், பகிரங்கமாய் பயபக்தியுள்ளவர்கள்போல் நடிக்கத்தான் முடியும். உள்ரங்கமாய் பயபக்தியிருந்தாலன்றி வெளி வேஷம் வெறுக்கத்தக்கதாகும்.

அனைவருக்கும் தீமையின் சோதனை மறைமுகமாக ஏற்படத்தான் செய்யும். அவற்றிலிருந்து நம்பிக்கையே வெற்றி பெறச் செய்ய வேண்டும். சாதாரண மக்களுக்கு அவர்களின் காரியாதிகளில் சோதனை ஏற் படுகிறது. ஆத்ம வழியில் செல்பவர்களுக்கு இச்சைகளால் சோதனை ஏற்படுகிறது. ஆத்மஞானிகளுக்கு ஏகாந்தத்தில் இருக்கும்போது மனத்திலெழும் தவறான நாட்டங்களால் சோதனை ஏற்படுகிறது. மெஞ் ஞானிகளுக்கு (அப்தால்களுக்கு) இறைவனின் ஒரே நாட்டம் சிதை வுறுவதில் சோதனை ஏற்படுகிறது.

ஏனெனில், இத்தகைய மெஞ்ஞானிகள் தங்கள் உள்ளங்களைப் பாதுகாப்பதில் கவனங்கொள்கின்றனர். அவர்கள் மன்னனின் தலை வாயிலில் படுத்துக் கிடக்கின்றனர். 'அழைப்பு' எனும் பொறுப்பை உணர்ந் தவர்களாய் சிருஷ்டிகளை மெஞ்ஞானத்தின் பக்கம் அழைக்கின்றனர், அவர்கள் உள்ளங்களைச் சதா தட்டி எழுப்புகின்றனர்.

"உள்ளங்களே, அர்வாஹுகளே, மானிடர்களே, ஜின்களே, மன்னனின் சந்நிதானத்தை நாடுபவர்களே, மன்னனின் தலைவாயிலை நோக்கி வாருங்கள்!" என்று அறைகூவி அழைப்பதே அல்லாஹ்வின் அன்பர்களுடைய ஊழியமாகும். சிருஷ்டிகளைச் சீர்திருத்தம் செய்வதே அவர்களுடைய ஒரே கவலையாகும். அவர்களுடைய கவலையென்பது அர்ஷிலிருந்து பாதாளம்வரை, வானங்களிலிருந்து பூமி வரை எங்கும் வியாபித்திருக்கும்.

அன்பர்களே, மனப்போக்கையும் இச்சைகளின் கவர்ச்சிகளையும் விட்டொழியுங்கள். நான் தற்சமயம் வர்ணித்த அல்லாஹ்வின் அன்பர் களின் பாதத்தடியிலுள்ள மண்போலாகுங்கள். அவர்கள் முன் பூரண மாகக் கீழ்ப்படியுங்கள். அப்போதுதான் உங்களிடம் இறைவன் நித்ய ஜீவனை உண்டாக்குவான். அல்லாஹ்வோ மரணத்திலிருந்து உயிரையும் உயிரிலிருந்து மரணத்தையும் வெளிப்படுத்துபவனாவான். இப்ராஹீம் (அலை) அவர்களை மரண நிலையிலிருந்த (அதாவது காபிர்களாய் இருந்த) பெற்றோர்களிடமிருந்து அவன் வெளிப்படுத்த வில்லையா? இப்ராஹீம் நபியின் பெற்றோர்கள் காபிர்கள்; காபிராய் இருப்பது மரணமேயாகும். "என் சிருஷ்டியில் முதலாவதாக மரணம் அடைந்தவன் இப்லீஸ் ஆகும்" (அதாவது இப்லீஸ் எதிரிடை செய்தான்; அதனால் உயிரற்ற வனானான்) என்று சொல்லப் பட்டிருக்கிறது.

இக்காலமோ மிகவும் மோசமானதாகிவிட்டது; உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவதும், நடப்பதும் சர்வ சாதாரண மாகிவிட்டன; பொய்யோ மலிந்துவிட்டது. எனவே, முனாபிக்குகள், பொய்யர்கள், தஜ்ஜால்கள் ஆகியவர்களின் சகவாசத்தை விட்டு ஒதுங்கியிருங்கள். பிறரின் சகவாசமிருக்கட்டும். உங்களின் உள்ளமே முனாபிக்காதவும், பொய்யுள்ளதாகவும், இணைவைப்பதாகவும் இருக்க

அதன் சகவாச விஷயத்திலும் நீங்கள் எச்சரிக்கையாய் இருக்க வேண்டாமா? எனவே, உங்களுடைய மனப்போக்கையும் எதிர்த்து அடக்கி ஆளுங்கள் அத்துடன், ஷைத்தானுடைய சகவாச விஷயத்திலும் எச்சரிக்கையாய் இருங்கள். ஏனெனில், ஷைத்தான் உங்களுடையவும் உங்கள் பிதா ஆதம் (அலை) அவர்களுடையவும் சத்துரு ஆவான்.

'தக்வா'வே உங்களுடைய வாளாயுதமாய் இருக்கட்டும்; 'தவ்ஹீத்', தெய்வத்தைப் பற்றிய விசாரணை, தனிமையிலும் சுத்தமாய் இருத்தல், சத்தியம். தெய்வ உதவிகோரல் ஆகியவற்றை உங்களுடைய பட்டாள மாகக் கொள்ளுங்கள். இவை நீங்கள் ஷைத்தான்மீது வெற்றிபெற உதவி செய்பவை. மெய்ப்பொருள் உங்களுடனிருந்தால் ஷைத்தானை வென்றுவிடுவீர்களென்பதில் சந்தேகமென்ன?

அன்பர்களே, முதலில் இம்மையையும் மறுமையையும் ஒன்று சேர்த்து ஒருபுறம் ஒதுக்குங்கள்; உங்கள் உள்ளத்தை இம்மை மறுமை நினைவுகளை விட்டுக் காலி செய்து உங்கள் இறைவனுடன் மட்டும் இருந்து வாருங்கள். சாதனங்களாகக் கருதியவற்றையும் லட்சியங் களாகக் கொண்டு வணங்கியவற்றையும் விட்டு மாசற்றவர்களாகுங்கள். இத்த கைய நிஷ்களங்கமான 'தவ்ஹீத்' நிலைமை ஏற்பட்டால் இம்மை யையும் கையாளலாம்–மனத்துக்காக; மறுமையையும் விரும்பலாம் – உள்ளத்துக்காக; ஆனால், உள்ரங்கத்தில் நிறைந்திருப்பது அல்லாஹ்வின் ஞாபகமாகவே இருக்க வேண்டும்.

அன்பர்களே, தன்னையோ இம்மையையோ, மறுமையையோ விட்டொழிந்து, அல்லாஹ்வன்றி வேறொன்றையும் பொருட்படுத்தா திருப்பின் அழியாச் செல்வத்தை அடைவீர்கள். இறைவனிடமிருந்து கிடைத்த பின் மறுபடி வழி சறுகுதலேற்படக்கூடாத நல்வழி பெறுவீர்கள்.

எனவே, 'தவ்பா'ச் செய்யுங்கள்! தீமையைவிட்டு மீட்சி பெறுங்கள்! தீமையைவிட்டு, அல்லாஹ்வின் பக்கம் மீளுங்கள்! 'தவ்பா' எனும் மீட்சியோ எனின் உங்களுடைய வெளிரங்கத்தில் மட்டுமின்றி உள்ரங்கத் திலும் மீட்சி பெறுவதாகும். 'தவ்பா' என்பது ஆட்சியின் மாறுதலாகும்; மனப்போக்கின் ஆட்சி மாறி உள்ளத்தில் தெய்வ ஆட்சி நிலைபெறுவ

தாகும். ஷரீஅத்தின் அமல்களைக் கொண்டு தேகத்தை சுத்தம் செய்வ துடன், உள்ளத்தின் அமல்களைக் கொண்டு இதயத்தைச் சுத்திகரிப்ப தாகும். உள்ளத்தின் அமல்களின் நாமமே தரீக்கத் ஆகும். சாதனங்கள் திருஷ்டியின் சம்பந்தங்கள்–கொண்ட மைதானத்திலிருந்து இதயம் வெளியானதும் 'தவக்கல்', 'மஃரிபா' எனும் சமுத்திரங்களில் பிரயாணப் பட்டுவிடுகிறது. இப்பிரயாணத்தில் சாதனப் பொருட்களைச் சிருஷ்டித் தவனை அது தேடித் திரிகிறது. இச்சமுத்திரத்தின் நடுவில் சென்றதும், "என்னைச் சிருஷ்டித்தவனே எனக்கு வழியும் காட்டி அருள்வான்" (திருக்குர்ஆன்) ஏன்றும் கூறுகிறது. ஒரு கரையிலிருந்து மறுகரை யாகவும், ஓர் இடத்திலிருந்து மறு இடமாகவும் சென்று, இறுதியில் நேரானவழியில் அமைந்துவிடுகிறது. அதன்பின் எவ்வளவுக்குத் தெய்வ ஞாபகம் அதிகரிக்கிறதோ அவ்வளவுக்கு அவன் வழி பிரகாசமானதாக ஆகிவிடுகிறது. எனவே, மெய்ப்பொருளைத் தேடுபவன் ஏனையவற்றை விட்டொழித்தவனாய் இருப்பான். அவன் வழியில் அழிவின் பயம் ஏற்படின் அவன் நம்பிக்கையின் சுடர் அவனை வீரம் பொருந்தியவ னாக்கி விடுகிறது; பயமென்பது இல்லாதொழிகிறது; தெய்வ சமீபத் துவத்தின் சுடர்வீசுகிறது.

அன்பர்களே, உங்களுக்கு நோய் வரின் பொறுமையுடன் ஏற்றுக் கொள்ளுங்கள். மருந்து கிடைத்தால் அதையும் நன்றியுடன் ஏற்றுக் கொள்ளுங்கள். அவ்வாறு பொறுமையும் நன்றியறிதலும் நிறைந்தவர் களாக விளங்கினால் உலகத்திலேயே இன்பத்தில் திளைத்தவர் களாவீர்கள்.

ஆரம்பத்தில் நம்பிக்கையாளர்களின் உள்ளத்தை நரகத்தின் பயம் ஆட்டுவதாய் இருந்துவருகிறது. இந்நிலையில் இறைவன் அவர்கள் உள்ளத்தில் கருணை மாரியைப் பொழிகிறான்; மறுமையின் கதவுகளை அவர்கள்முன் திறந்து வைக்கிறான்; அதன் பயனாய் சாந்தியும் சமாதானமும் இடம் பெறுகின்றன; இவ்வாறு சற்று அமைதி அடைந் திருக்கையில், தன் ஜலால் (சக்திமயம்) எனும் சுடரின் கதவுகளைத் திறந்துவிடுகிறான்; இச்சுடர்கள் உள்ளத்தைத் துண்டு துண்டாக்கி விடுகின்றன; பயம் முன்னைவிட அதிகமாகிறது; அதன் பின்னரே

அமைதியும் நிம்மதியும் ஏற்படுகின்றன; ஆத்மக் கண்கள் திறக்கின்றன; மென்மேலும் பதவிகள் உண்டாகின்றன.

அன்பர்களே, எதை உண்போம், எதை அருந்துவோம், யாரை மண முடிப்போம், எந்த மாளிகையில் வசிப்போம், எவ்வளவு பொருளைச் சம்பாதிப்போம் என்பவை உங்களுடைய கவலைகளாய் இருக்கக்கூடாது. இவையெல்லாம் உங்கள் நப்ஸின், மிருக இச்சையின் கவலைகளே யாகும். உள்ளத்தின் கவலைகள்–மெய்ப்பொருளைப் பற்றிய விசாரணை கள்– எங்குச் சென்றுவிட்டன்? உங்களுடைய கவலையும், லட்சியமும், உங்கள் இறைவனையும் அவன்பாலுள்ள பொருள்களையும் பற்றிய வையாய் இருக்க வேண்டும்.

உங்களுள் அனேகர் நல்ல காலத்தில் இறைவனை நேசிப்பவர் களாக இருக்கக்கூடும்; ஆனால், சோதனைக் காலத்தில் விரண்டோடி விடுகிறீர்கள். சோதனைக் காலத்திலேயே அடியார்களின் உண்மை நிலை வெளியாவதாக இருக்கிறது. ஒருவர் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்து, "உங்களை யான் நேசிக்கிறேன்" எனக் கூறினார். அதற்கு நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், ஏழ்மையைப் போர்வையாகப் போர்த்திக் கொள்ளத் தயாராகிக் கொள்ளுங்கள் எனக்கூறினார்கள். மற்றொருவர் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்து, "நான் அல்லாஹ்வை நேசிக்கிறேன்" எனக் கூறினார். அதற்கு நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், "சோதனையைப் போர்வையாகக் கொள்ளுங்கள்" எனக் கூறினார்கள். இதுகொண்டு அல்லாஹ்வின் அன்புக்கும் ரசூலின் அன்புக்கும் உரித்தாவது ஏழ்மையும் சோதனையையும் பொறுத்தே இருக்கிறதென்பது தெளிவு. இதனாலேயே ஒரு பெரியார் வலித்தன்மையை நிரூபிப்பது சோதனைகளேயெனக் கூறியுள்ளார்.

இறைவனே, எங்களுக்கு இம்மையிலும் மறுமையிலும் நன்மையைக் கொடுத்தருள்வாயாக! நரகத்திலிருந்தும் எங்களை ரட்சிஷிப்பாயாக!

இரண்டாவது பிரசங்கம்

ஹிஜ்ரி 545 ஷவ்வால் மாதம் பிறை 5 செவ்வாய்க்கிழமையன்று மதரஸா மஃமூராவில் ஆண்டகை அவர்கள் நிகழ்த்தியது:

தற்புகழ்ச்சியும் கோளும் உங்களை அல்லாஹ்விடமிருந்து தூர மாக்கிவிடும். உங்கள்மீது அடி விழுந்து, கீழ் நிலை அடைந்து, தெய்வாக் கினைகளான சர்ப்பங்களும் தேள்களும் உங்கள் மீது ஏவப்படுமுன், தற்பெருமையிலிருந்து ஒதுங்கிக் கொள்ளுங்கள்.

சோதனையின் இயல்பை அறிந்திராததால், ஏமாற்றமடைய நேரிடுவது அதிசயமன்று. உங்களிடமிருக்கும் பொருள்களைக் கண்டு மதிமயங்கி விடாதீர்கள்! ஏனெனில் இப்பேறுகள் யாவும் விரைவில் உங்களைவிட்டுப் போய்விடுபவையாகும். "அவர்களுக்களிக்கப்பட் டிருப்பவற்றில் மகிழ்ச்சி அடைந்துகொண்டிருந்து, திடுமென அவை அபகரிக்கப்படும்வரை" என்ற திருக்குர்ஆனின் சொற்றொடரை நினைவு கூருங்கள்.

அல்லாஹ்விடமுள்ள கொடைகளையும், பேறுகளையும் பொறுமை யைக் கொண்டுதான் அடையமுடியும். இதன் பொருட்டே, அல்லாஹ்த் தஆலா பொறுமை வேண்டுமென வற்புறுத்தியுள்ளான். ஏழ்மையும் பொறுமையும் உண்மை மூமினிடம் மட்டுமே காணக்கூடியவையாகும். அல்லாஹ்வின் அன்பர்களோ, கஷ்ட நிஷ்டூரங்களுக்கு ஆளாக்கப் படுகிறார்கள்; ஆனால், பொறுமையுடையோராய்த் திகழ்கிறார்கள். அவர்களுடைய கஷ்டங்களிலிருந்தும், நன்மைகளைப் பற்றிய கட்டளை களின் தெய்வ உதிப்புகளை அடைகிறார்கள். இவ்வாறு ஏற்படும் தெய்வக்கட்டளைகளை நிறைவேற்றுவதில் இறைவன் புறத்தாலேற்படும் கஷ்ட நிஷ்டூரங்களையும் சகித்துக் கொள்பவர்களாய் விளங்குகிறார்கள்.

என்னிடம் பொறுமையில்லாதிருப்பின், உங்களிடையே என்னைக் கண்டிருக்க மாட்டீர்கள். நான் பட்சிகளைப் பிடிக்கும் வலைக் கொப்பான வனாய் இருக்கிறேன். இரவிலெல்லாம் என் கண்களிலுள்ள திரைகள் நீங்கி விடுகின்றன; கால்களிலுள்ள சங்கிலிகள் அகன்றுவிடுகின்றன; (சிருஷ்டிகளின் சம்பந்தத்துக்கு வேண்டிய மறைவுகளும் நிர்ப்பந்தங்களு மற்றவனாய், என் கண்களைக் கட்டிக் கொள்கிறேன்; என் கால்கள் விலங்கில் அகப்பட்டவைகளாகின்றன; (பிறருடைய ஆத்மார்த்த ஊழல் களைப் பார்க்காமலும் நிர்ப்பந்தமுள்ளவனாகவும் இருக்கிறேன்.)

இவ்வாறு என்னை நான் நிர்ப்பந்தத்துக்குள்ளாக்குவது உங்களுடைய சீர்திருத்தத்துக்காகவேதான். ஆனால் அதை நீங்கள் அறியவில்லை.

இவ்வாறு அல்லாஹ்வின் சித்தத்துக்கு இசைவும் நாட்டமு மில்லாவிடில், எந்த அறிஞன் இந்நகரில் வாழ விரும்புவான்? இந் நகரிலோ தற்பெருமையும், கலப்புள்ள நாட்டமும் அநியாயமும் மலிந்து கிடக்கின்றன; சந்தேகங்களும் விலக்கப்பட்டவைகளும் பெருகிவிட்டன; அல்லாஹ்வின் நன்றியறியாமையும், நற்பேறுகளைக் கொண்டு பாதகச் செயல்களுக்கும் தீமையானவற்றுக்கும் ஆதரவளித்தலும் அதிகரித்து விட்டன. அறையில் சோம்பேறிகளாயும், அம்பலத்தில் பெரும் வணக்கக் காரர்களாயும் திகழுபவர்கள்–உள்ளமையில் பொய்யர்களாயும், மிம்பர்களின்மீது (பள்ளிப் பிரசங்க மேடைமீது) மெய்யர்களாயும் விளங்குபவர்கள் – மிகுந்து விட்டனர். ஷரீஅத்துடைய வரையறைகளைப் பேணிக் கொள்ளும் எண்ணமில்லாவிடின். உங்களுடைய அறைகளிலும் உள்ளங்களிலும் நடப்பவற்றையெல்லாம் அப்பட்டமாக எடுத்துக் கூறிவிடுவேன்.

எனினும், என் அஸ்திவாரத்துக்குக் கட்டுமானம் வேண்டுவது அவசியமாய் இருக்கிறது; என் பிள்ளைகள் பயிற்சி வேண்டியவர்களாய் இருக்கிறார்கள்; இதனாலேயே குறைகளை மறைப்பவனாகவும் சகிக்கும் குணமுடையவனாகவும் இருந்து வரவேண்டியதிருக்கிறது. நான் காண்பவைகளையெல்லாம் பகிரங்கமாகச் சொன்னால், நீங்கள் என்னை விட்டு விரண்டோடவுங்கூடும். என்னுடைய தற்கால நிலைமை யில் நபிமார்களையும் முர்ஸல்களையும் மிகைத்த சக்தி தேவைப் படுபவனாய் இருக்கிறேன்; ஆதம் (அலை) அவர்கள் தொட்டு, எனது சகல முன்னோர்களையும் மிகைத்த பொறுமை வேண்டியவனாய் இருக்கிறேன்; தெய்வீகப் பலம் வேண்டியவனாய் இருக்கிறேன். யா அல்லாஹ்; உனது அகமியப் பேறுகளையும் ஆதரவையும் அளித்தருள்! உனது பொருத்தத்தையும் தந்தருள்! ஆமீன்!

அன்பர்களே, சதா உலகிலிருந்து உலக சுகத்தை அனுபவிப்ப தற்காக நீங்கள் சிருஷ்டிக்கப்படவில்லை. அல்லாஹ்வின் பொருத்த மின்மைக்கு ஆளாகிக் கிடக்கும் நிலை எத்தனை உயர்வானதாயினும்,

அதில் மாற்றங்காணுங்கள். "லாஇலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் ரஹூலுல்லாஹ்" என்று சொல்வது மட்டும் அல்லாஹ்வுக்குப் போதிய அடிபணிதலாகும் என்றெண்ணிகிறீர்கள். இச்சொல்லுடன் மற்றது (அனுஷ்டானம்) இல்லாதவரை இக்கலிமாவைச் சொல்வது உங்களுக்குப் பயன் தராது. ஈமான் என்பது சொல்லும் அனுஷ்டானமு மாகும். நீங்கள் பாவங்களிலும், கலகங்களிலும், சத்தியத்துக்கு முரணானவைகளிலும் அழுந்தி அவற்றில் தொடர்ந்து கிடந்து தொழுகை நோன்பு, ஸதக்கா (தருமம்), நற்கருமங்கள் ஆகியவற்றில் ஈடுபடா திருக்கும் வரை உங்களுடைய மெய்ச்சாட்சி (கலிமா) என்ன நற்பயனை அளிக்கமுடியும்? அந்நிலைமையில் உங்களுடைய கலிமா அங்கீகரிக்கப் படப்போவதில்லை; பயனளிக்கப் போவதில்லை.

"லாயிலாஹ–இல்லல்லாஹ்" எனக் கூறும்போது, ஒரு மெய்ப் பிரமாணத்தைக் கூறுகிறீர்களல்லவா! உங்கள் கூற்றுக்கு சாட்சிகளும் வேண்டியதிருக்குமல்லவா! சாட்சிகள் யார்? தெய்வக் கட்டளைக்குக் கீழ்ப்படிதல், விலக்கப்பட்டவைகளை விட்டுப் பேணிக் கொள்ளல், கஷ்டங்களிடையில் சகிப்புடனிருத்தல், தக்தீரின் முன் சிரம் சாய்த்தல், இவையே இக்கூற்றுக்குச் சாட்சிகளாகும். இக்கடமைகளையும் நீங்கள் நிறைவேற்றி வரும்போது, அல்லாஹ்வை முன்னிட்ட, கலப்பற்ற நிர்ணய மின்றி இவை அங்கீகாரம் அடைவதில்லை. சொல்லுடன் அனுஷ்டானமும் வேண்டும்; அனுஷ்டானம் ஸுன்னத்துக்கு இணங்கிய தாகவும், கலப்பற்ற நிர்ணயம் தாங்கியதாகவும் இருக்க வேண்டும்.

தோழர்களே, உங்களிடமுள்ள பொருள்களில் ஓர் அளவு ஏழை களுக்கு அளித்து வாருங்கள். ஏழைகளுக்கு கொடுக்கக்கூடியது எதுவும், சொற்பமாயினும் அதிகமாயினும், உங்களிடமிருப்பின், ஏழை களை வெறுங்கையுடன் திரும்ப அனுப்பாதீர்கள். கொடை கொடுத்தல் அல்லாஹ்வுக்கு உகந்த காரியமாகும். அவனுடைய இவ்விருப்பத்துக்கு இணங்கியவர்களாய் கொடை கொடுக்கக்கூடியவர்களாய் உங்களை ஆக்கி, அதற்குரிய சாதனத்தை அளித்ததற்கு நன்றியறிதலுள்ளவர் களாய்–கொடை கொடுப்பதை வழக்கமாகவும் குணமாகவும் கொள்ளுங்கள். உங்களிடம் கேட்டு வருபவர்களின் வருகையையும்

இறைவனின் சன்மானமாகக் கொள்ளுங்கள். உங்களுக்கு அவன் அளித் திருக்க, உங்களிடம் அவன் அனுப்புவோருக்கு இல்லையென்பது நியாயமாகுமா?

என்னிடம் வருகிறீர்கள். என் பேச்சைக் கேட்டு உருகிக் கண்ணீரும் வடிக்கிறீர்கள். ஆனால், ஏழைகள் உங்களிடம் வரும்போது மட்டும் உங்கள் நெஞ்சம் உருகாமலிருப்பதேன்? இதிலிருந்து தெரிவ தென்ன? என்முன் நீங்கள் செவி சாய்ப்பதும், மனமுருகிக் கண்ணீர் வடிப்பதும் அல்லாஹ்வை மட்டும் முன்னிட்டன்று; என் பேச்சுக்குச் செவி சாய்ப்பதென்றால் முதலில் உள்ளத்தால் கேட்க வேண்டும்; மனத்தில் உணரவேண்டும்: நற்கருமங்களில் ஈடுபட வேண்டும். என்னிடம் வருங்கால், உங்களுடைய அறிவு, அனுஷ்டானம், பேச்சு, வம்சம், சொத்து, சுகம், குடும்பம் இவற்றையெல்லாம் மறந்துவிட்டு வரவேண்டும். என் முன் அல்லாஹ்வல்லாத சகலவற்றையும் துறந்த நிர்வாணிகளாய் நிற்க வேண்டும். அப்போதுதான் இறைவன் உங்கள் மீது தன் சமீபத்துவம், அருள், நற்பேறு ஆகியவற்றின் உடைகளை அணிவிப்பான். இவ்விதம் என்னிடம் வந்து என் வாயிலாகச் சீர்த்திருத்தம் பெறுவீர்களாயின், கவலையின்றி காலையில் எழுந்து கவலையின்றி மாலை கூடு திரும்பும் பட்சிகளைப் போல் ஆகிவிடுவீர்கள்.

உங்களுடைய உள்ளங்களை மெய்–ஜோதி–கொண்டு பிரகாசிக்கச் செய்வதும் உங்கள் லட்சியமாய் இருக்க வேண்டும். "மூஃமினினுடைய பார்வைக்கு பயப்படுங்கள். ஏனெனில், அவன் அல்லாஹ்வின் ஜோதி கொண்டே நோக்குகிறான்" என்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வர்ணித்துள்ளதைச் சிந்தித்துப் பாருங்கள்!

பாவிகளே, மூமினைக் கண்டு பயப்படுங்கள். உங்கள் பாவங்களின் அசுத்தம் நிறைந்தவர்களாய் மூமினை அடுக்கத் துணியாதீர்கள். அல்லாஹ்வின் ஜோதியின் உதவியால் மூமின், உங்களைப் போர்த்தி யிருக்கும் நிலைமைகளையெல்லாம் பார்க்கிறான். உங்களுடைய ஷிர்க்கு களையும், முனாபிக்குத் தன்மையையும், தீமைகளையும், யாவையும் அவன் பார்க்கிறான்.

கரை சேர்க்கக்கூடியவர்களைப் பார்க்காதவரை, அவர்கள் கரை சேர்வதில்லை (குருவில்லாது முக்தி பெறுதல் அரிது.) உங்களின் நிலைமை பவா–லஹுஸ் என்பவனின் கதையாகவே இருக்கிறது. பவா–லஹுஸ் தன் குருவிடம் சென்று என் கண்கள் எதுவரை குருடாய் இருந்து வருமென்று வினவினான். அதற்கு அவர், "வைத்தியனைத் தேடிக் கண்டுபிடி. அவன் கூறும் சிகிச்சையில் நம்பிக்கை கொள். மருந்தின் கசப்பை பொருட்படுத்தாது அருந்திப் பொறுமையுடனிரு. உன் குருடு சிறுகச் சிறுக நீங்குவதைக் காண்பாய்" என்று பதிலிறுத்தார்.

அல்லாஹுத்த ஆலாவின் முன் அடி பணியுங்கள். தேவைகளையெல்லாம் அவனிடம் முறையிடுங்கள். எக்காரியத்தையும் தனக் கென்று செய்யாதீர்கள். ஏழ்மையென்னும் சுவட்டைப் பின்பற்றி அவனைச் சந்தியுங்கள். சிருஷ்டிகளுடைய வாயில்களைப் பூட்டிவிடுங்கள்; சிருஷ்டி கர்த்தாவுக்கும் உங்களுக்குமிடையிலிருக்கும் வாயிலைத் திறந்து கொள்ளுங்கள். உங்களுடைய பாவங்களை அறிந்து மன்னிப்புத் தேடுங்கள். லாபநஷ்டமளிப்பவனும், கொடுப்பவனும், அல்லாஹ்வே என்று உறுதி கொள்ளுங்கள். அப்போதுதான் உங்கள் அகக்கண் குருடு நீங்கும்; வெளிரங்கமானதும், உள்ரங்கமானதுமான மெய்ப்பார்வையின் தோற்றம் ஏற்படும்.

அன்பர்களே, கிழிந்த உடைகளை உடுத்துவதிலும் குறைந்த உணவை உட்கொள்வதிலும் மட்டும் மகிமை இல்லை; உங்கள் உள்ளம் தேவையற்றதாய் இருப்பதிலேயே மகிமை பொதிந்து கிடக்கிறது. சத்தியவான் முதலில் தன் உள்ளத்தையே போர்வையிட்டிடுவான்;

அதன் பயன் அவன் வெளிரங்கத்திலும் காணப்படலாகிறது. எனவே, ஆடை அலங்காரம் முதலில் உள்ளத்திலும், பிறகு இதயத்திலும், அதன் பிறகு மனத்திலும், பிறகே உறுப்புக்களின் மீதும் ஏற்படுவதுதான் முறை. இவ்விதம் உச்சியிலிருந்து பாதம்வரை வெளிரங்கத்திலும் மட்டுமன்று, உள்ரங்கத்திலும் ஆடையணியப்பட்டவனாகத் திகழும்போதுதான், கருணையினதும் கிருபையினதும் கரம் வந்துதயருற்றவனது

நிலைமையில் மாறுதலை உண்டாக்கும். இருள் நீங்கி அருள் சுரக்கும், கஷ்டம் நீங்கிட சுகமும், அச்சம் நீங்கி அமைதியும், தெய்வ தூரம் நீங்கி தெய்வ சமீபமும், தரித்திரம் நீங்கிச் செல்வமும் உண்டாகும். நண்பர்களே, விதிவசத்தின்படி உங்களுக்குரித்தாவதைத் திருப்தியுடனும் அடக்கத்துடனும்–ஆசையுடனன்று–அனுபவியுங்கள். அனுபவித்தலிலும் மறதிக்காளாகிச் சிரிப்பில் லயிப்போர், பயபக்தியால் அழுபவர்களுக்குச் சமமாக மாட்டார்கள். விதிக்கப்பட்டதை அனுபவிக் கலாம்; ஆனால், மனம் அல்லாஹ்வைப் பற்றியதாய் இருக்கவேண்டும். அப்போது அனுபவிப்பவற்றில் தீய பலன்களிருப்பினும், அவற்றிலிருந்து பாதுகாப்புப் பெற இயலும். ஒரு மருந்தை அதன் தன்மையை அறியாது அருந்துவதைவிட, வைத்தியன் தரும் விளக்கத்துடன் அதை அருந்துவது ஏற்றமல்லவா? உங்கள் மனம் எத்தகைய கல்லாகிவிட்டது! பொறுப்பை உணர்தல் என்பது உங்களைவிட்டு அகன்றுவிட்டது; நீங்கள் அலட்சியம் செய்து வரும் ஷரீ அத்தில்தான் பாதுகாப்பும் கிருபாகரமும் உள்ளன. ஒன்று, உங்கள் மீதுள்ள பொறுப்பை உணர்வீர்கள்; அல்லது, கண்ணீர் வடிப்பவர் களாகவும், அல்லாஹ்வின் கருணைக் கதவு அடைக்கப்பட்டவர் களாகவும், இறைவனின் தண்டனைக்கு ஆளாவீர்கள். சிருஷ்டித்துப் பரிபாலிப்பவனைக் கொண்டே உங்களுக்குரிய பாதுகாப்பை நீங்கள் தேடிக்கொள்வது அவசியமன்றோ! அவனுக்கு அஞ்சுங்கள். ஏனெனில், அவனது பற்றுதல் மஹா மஹா வன்மையானது. வானங்களும் பூமியும், அவற்றிலுள்ள சகல ஜீவராசிகளும் வணங்குவதற்குரியவனான ஏகனின் அச்சம் உங்கள் உள்ளத்தில் இருத்தல் வேண்டும். அவனுடைய கொடை களை நன்றியறிதலுடன் பேணுவதும், அவனுடைய ஏவலையும் விலக்க லையும் செவியுற்றுக் கீழ்ப்படிவதும் உங்கள் கடமைகளாகும். கஷ்டக் காலத்தில் பொறுமையுடனும், மகிழ்ச்சி நேரத்தில் அவனை மறவாத நன்றியறிதலுடனும் ஒழுகுவதும் உங்கள் கடமையாகும். உங்களுக்கு முன்னிருந்த நபிமார்களும் நேர்மையாளர்களும் நன்மைப்பேறுகள் ஏற்படும்போது நன்றியறிதல் பொங்குபவர்களாயும், சோதனைக் காலத்தில் பொறுமை நிறைந்தவர்களாயுமே இருந்து வந்தனர். எனவே,

எழுந்திருங்கள்! நேர்மையுடன் நில்லுங்கள்! அவன் நியமித்துள்ள வரையறைகளை மீறாமல், அவன் அளிப்பது எதுவாயினும் அனுபவித்துக் கொள்ளுங்கள்! நல்ல நிலைமை வந்திடில் நன்றியறிதல்; தீய நிலைமை நேரிடில் பாவமன்னிப்புத் தேடிப் பொறுமையுடனிருத்தல்; இவ்விரண்டு குணங்களும் உங்களுக்கு இன்றியமையாதவை (பாவமன்னிப்பு ஏன் தேட வேண்டுமெனின், நம்முடைய கெட்ட காலத்துக்குக் காரணம் நாமே யாவோம்). அல்லாஹுத்த ஆலா அடியார்களின்மீது அநியாயம் செய்பவனன்று.

மரணத்தையும் மரணத்தின் பின்னுள்ள நிலையையும் நினைவிலிருத்துங்கள். படைத்துப் பரிபாலிப்பவனையும், அவன் கேள்வி கணக்கையும், அவன் நம்மைப் பார்த்துக் கொண்டிருப்பதையும் நினைவில் வையுங்கள். விழித்தெழுங்கள். உங்களுடைய இந்நித்திரை எக்காலம் வரை இருக்கப் போகிறதோ! இவ்வறியாமை இருளிலிருந்து மனம்போன போக்கில் முரண்பாடான காரியங்களைச் செய்தல், அது ஏன், இது ஏன் என்று கேட்கும் அதிகப் பிரசங்கித்தன வழக்கம்–இவை யாவும் எதுவரை இருக்கப் போகின்றனவோ! இறைவனை வணங்கி, அவனுடைய ஷரீஅத்துக்குக் கட்டுப்பட்டு நடந்து, ஒழுக்கத்தைக் கற்றுக் கொள் ளுங்கள். அது ஏன், இது ஏன் எனக்கேட்கும் சந்தேக மனப்பான்மையை விட்டொழித்து, திருகுர்ஆனிலிருந்தும் ரஸூலின் மொழிகளிலிருந்தும் ஒழுக்கமென்னவெனப்பயின்று கொள்ளுங்கள்.

அன்பர்களே, கண்மூடித்தனம், அறியாமை, மறதி, உறக்கம் ஆகியவற்றையுடையோராய் மானிடருடன் பழகிவராதீர்கள். அதற்கு மாறாக, அகப் பார்வை, அறிவு, விழிப்பு ஆகியவற்றையுடையோராகுங்கள். ஜனங்களிடம் நல்லது காணப்படின் அதை நீங்களும் பின்பற்றலாம். தீயது காணப்படின் இதிலிருந்து நீங்களும் விலகுங்கள்; அவர்களையும் விலகும்படி செய்யுங்கள். நீங்கள் தூயவனாகிய அல்லாஹுத் தஆலா விஷயத்தில் மறதியுள்ளவர்களாய் வாழ்வது சரியன்று. அவனை முன்னிட்டு விழித்தல், மஸ்ஜிதுக்குச் செல்லுதல், அல்லாஹ்வின் ரஸூல் (ஸல்) அவர்கள்மீது ஏராளமாய் ஸலவாத்து சொல்லுதல் ஆகியவை அத்யாவசியமானவை என்பதை

உணருங்கள். "வானத்திலிருந்து அக்கினி இறங்கினால் அதிலிருந்து மஸ்ஜிதுக்குரியவர்களன்றி மற்றவர்கள் விமோசனம் பெறுவதில்லை என்பது நாயகம் (ஸல்) அவர்கள் திருமொழியாகும். தொழுகை விஷயத்தில் நீங்கள் சோம்பலுள்ளவர்களானால் அல்லாஹுத்தஆலா உங்களுக்கு அவன்பாலுள்ள சம்பந்தத்தைத் துண்டித்துவிடுவான். இதற்காகவே, ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், "அடியானுக்குக்கிடைக்கக்கூடிய இறைவனுடைய சமீபத்துவம் ஸஜ்தாவில் ஏற்படுவதுபோல் வேறு சந்தர்ப்பத்தில் ஏற்படுவதில்லை" என்றருளியுள்ளார்கள். வீண் வியாக்கியானங்களையும் ஷரீஅத்திலிருந்து விடுதலையையும் தேடுபவர்கள் நிலைமை கைசேதத்துக்குரியதேயாகும். வீண் வியாக்கியானம் செய்துகொண்டு தட்டலைபவன், தன்னைத்தான் ஏமாற்றிக் கொள்பவனாவான். ஷரீஅத்தின்படி நடப்போ மென்ற திடச்சித்தமுள் ளவர்களாயும், உம்மத்தின் ஏகோபித்த கொள்கை யைப் பின்பற்று பவர்களாயும், முயற்சிகளிலும் வணக்கங்களிலும் கலப்பற்ற உண்மை நிர்ணயம் உள்ளவர்களாயுமிருப்பதிலேயே தெய்வப் புறத்தால் கிடைக்க கூடிய ஈடேற்றமும் விமோசனமும் உள்ளன. எனவே, வியாக்கியானம் செய்து வழி தவறி விடுதலை கோருபவர்களைப் பற்றி நாம் என்ன சொல்வது! அனுஷ்டானத்துக்குரிய திடச்சித்தம் வாய்ந்தவர்களாக விளங்க வேண்டியவர்கள், திடச்சித்தமற்று அனுஷ்டானத்திலிருந்து விடுதலை பெற விரும்புகிறவர்களாய் விட்டார்கள். இக்காலமோ, அனுஷ்டானத்துக் குரிய திடச்சித்தத்தின் காலமாயில்லை; அனுஷ்டான மற்ற கட்டுப்பாடில்லாத நிலைமையைக் கோரும் காலமாகிவிட்டது! கபடும், பகட்டும், பிறர் சொத்தை அபகரித்தலும் பெருகிய காலமாகி விட்டது. தொழுகை, நோன்பு, ஜக்காத், ஹஜ் ஆகியவை சிருஷ்டித் தவனை முன்னிட்டவை யாகவன்றிச் சிருஷ்டிகளை முன்னிட்டு அனுஷ்டிக்கப்படும் காலமாகிவிட்டது. எங்கும் சிருஷ்டிகளையே லட்சியமாயும் தெய்வமாயும் அனுஷ்டானத்தில் கொண்டாடும் நிலைமை ஏற்பட்டுவிட்டது. நீங்களோ உள்ளத்தில் பிணங்களாயும், இச்சையில் மட்டும் உயிருள்ளவர்களாயும் ஆகிவிட்டீர்கள்; உலகத்தை மட்டும்

தேடுபவர்களாகிவிட்டீர்கள். சிருஷ்டிகளை லட்சியமாகக் கொள்ளும் நிலையை விட்டு வெளியாகுங்கள். உண்மையில் அல்லாஹ்வுடன் நிலை பெறுவதே உள்ளத்தின் உயிராகும்; உண்மை வாழ்வாகும் மெய்ப்பொருளின் கட்டளையைப் பூர்த்தி செய்து அவன் விலக்கியவற்றை விட்டொதுங்கி விதி வசத்தில் பொறுமையுடன் வாழ்வதே உண்மையான வாழ்வாகும்.

அன்பர்களே, இறைவனது விதிவசம் நடைபெறுவதில் உங்களையே அவன் வசம் சாட்டிவிட்டவர்களாகி, அவனுடன் உலகில் நிலைபெறு பவர்களாய்த திகழுங்கள். ஒவ்வொரு காரியத்துக்கும் அஸ்திவாரம் வேண்டும். அதன் பின்னரே கட்டடம் கட்ட முடியும். அவ்விதம் கட்டப்பட்ட வீட்டில் பிறகு குடியிருக்க வேண்டும். உங்களுடைய நிலைமையோ கைசேதத்தை விளைவிப்பதாய் இருக்கிறது. உங்கள் நிலைமை பற்றிக் கவலை கொள்ளுங்கள்! மெய் விசாரணைக் கவலை உள்ளத்தின் இயற்கைப் பிணியாகும். உங்கள் விஷயத்தில் உங்கள் சுய விசாரணையில் நலனைக் கண்டால் அல்லாஹ்வுக்கு உங்கள் நன்றியறிதலைச் சமர்ப்பியுங்கள்; தீமையைக் கண்டால், அதிலிருந்து மீட்சி (தவ்பா) பெற முயலுங்கள். இத்தகைய உண்மைக் கவலையைக் கொண்டே உங்கள் மார்க்கம் உயிர் பெற்றதாகும்; ஷைத்தான் மரித்தவனாவான். இதற்காகவே, "ஒரு மணி நேரத்திய மெய் விசாரணைக் கவலை, இரவு முழுவதும் செய்யப்படும் வணக்கத்தைவிட மேலானது" என்ற நாயக வாக்கியமும் இருக்கிறது.

உம்மத்தே–முஹம்மதைச் சார்ந்தவர்களே. உங்களுக்கு முன்னிருந்தவர்கள் மீது சுமத்தப்பட்டிருந்த வணக்கப் பொறுப்புகளைவிடக் குறைந்த சுமையே உங்கள்மீது சுமத்தப்பட்டிருப்பது பற்றி நன்றியறிதல் செலுத்துங்கள்! உலகத்தில் தோன்றிய உம்மத்துக்களில் நீங்கள் அனைவருக்கும் பிந்தியவர்கள்; இறுதி நாளிலோ அனைவருக்கும் முந்தியவர்களாக விளங்கக்கூடியவர்கள். உங்களுள் சீர்பெறுவோருக்கு யாரும் ஒப்பாக முடியாது. நீங்களே தலைவர்கள்; இதர உம்மத்துக்கள் பிரஜைகளாவார்கள். ஆயினும், உங்கள் மனப்போக்கிலும் இச்சைகளின் தூண்டுதலிலும் ஈடுபட்டிருக்கும்வரை நீங்கள்

சீர் பெறுவது இயலாது. சிருஷ்டிப் பொருட்கள் பற்றிய சச்சரவில் ஈடுபட்டு உங்கள் கபடும் பகட்டும் கொண்டு அவற்றைப் பற்றிப் பிடித்து நின்றால், ஆத்ம ஆரோக்கியமும் உள்ளச் சீரும் உண்டாவதெப்படி? உலகத்தை மட்டும் உங்கள் லட்சியமாகக் கொண்டிருக்கும் வரை, அல்லாஹ்வல்லாத மற்றவற்றில் நம்பிக்கை வைப்பவர்களாய் இருக்கும் வரை உங்கள் நிலைமை சீர்பெறப்போவதில்லை. அல்லாஹ்வே, உன்னோடு சீர்பெற்றிருக்கும் நிலையை எங்களுக்கு அளித்தருள் வாயாக! இம்மையிலும் மறுமையிலும் நன்மையைத் தந்தருளி, நரகத்து ஆக்கினையிலிருந்தும் எங்களை ரட்சித்து அருள்புரிவாயாக!

முன்றாவது பிரசங்கம்

ஹிஜ்ரி 545 ஷவ்வால் பிறை 8 வெள்ளிக்கிழமை ஸுப்ஹு நேரத்தில் மதரஸா மஃமூராவில் ஆண்டகை அவர்கள் நிகழ்த்தியது :

ஏழைகளே, செல்வர்களாக வேண்டுமெனும் ஆசைக்கு இடங் கொடாதீர்கள். அவ்வாறு நீங்கள் செல்வர்களாக மாறுவதால் விமோசனம் உண்டாகுமா, அழிவுதான் உண்டாகுமா என்று நீங்களறியமாட்டீர்கள். அறிவாளிகளாகுங்கள். உங்களுக்குள்ள பலாபலனைப் பாதுகாப்பு செய்யுங்கள்; முடிவு நன்மையானதாகும். உங்களுக்கு விதிவசம் அளிக்கும் அளவு கொண்டு திருப்தி கொள்ளுங்கள். அதிக அவாவும் பேராசையும் வேண்டாம். நீங்கள் அதிகம் கேட்டு விசேஷமாய்க் கிடைத்து விடினும், அதனால் உங்களுக்கு நன்மையில்லை. எனினும், வேண்டும்படி உத்தரவு கொடுக்கப்பட்டிருக்கும் விஷயங்களை வேண்டுவதில், பெரும்புண்ணியமுண்டென்பது உண்மையே. அதனால் கழிவிரக்கமும் ஏற்படக்கூடும். இம்மையிலும் மறுமையிலும் நிரந்தர மன்னிப்பும், கழிவிரக்கமும், சீர் பெற்ற நிலையும் வேண்டுமெனப் பிரார்த்திப்பதே உங்களுக்குச் சாலவும் சிறந்த வேண்டுதலாகும். அத்தகைய பொதுப் பிரார்த்தனையே போதுமென்று திருப்தி அடையுங்கள். அப்பேறு வேண்டும், இப்பேறு வேண்டும் அது இம்மைப் பேறாயினும் மறுமைப் பேறாயினும் – என்று குறிப்பிட்டுப் பிரார்த்தனை செய்ய வேண்டாம். இறைவனிடமிருந்து வற்புறுத்தி ஒன்றை அடைந்துவிட வேண்டுமெனும் மனப்பான்மையும் ஆகாது. உங்களுடைய வாலிபம்,

சக்தி, சொத்து ஆகியவற்றின் பெருமையால் அவன் சிருஷ்டிகள் மீது பலவந்தம் செய்ய முனைவதும் வேண்டாம். அப்படியாயின்,- அவன் கோபத்தின் பிடிக்காளாவீர்கள். அவன் பிடியோ மஹா கடுமையானது!

உங்கள் நிலைமையைப் பற்றி என்னென்பேன்! உங்கள் நாவு முஸ்லிமாகத் தானிருக்கின்றது; உங்களுடைய உள்ளம் முஸ்லிமாக இருக்கிறதா? சொல் முஸ்லிமுடையதுதான்! செயலும் அப்படியே இருக்கிறதா? வெளிக்கு – அம்பலத்தில் – முஸ்லிம்களாகத்தான் விளங்குகிறீர்கள். ஆனால், உள்ளிலும் – அறையிலும் முஸ்லிம்களாய் இருக்கிறீர்களா? தொழுதீர்கள்; நோன்பு நோற்றீர்கள்; நற்கருமங்கள் பலவற்றைச் செய்தீர்கள். எதை முன்னிட்டு? அல்லாஹ்வை மட்டும் முன்னிட்டு நற் கருமங்களில் ஈடுபட்டீர்களா? அல்லது மற்றவர்களைச் சந்தோஷப்படுத்துவதற்காகவும் உலகப் பேறும் பெயரும் கிடைப்பதற் காகவும் ஈடுபட்டீர்களா? நீங்களோ உள்ளொன்று வைத்துப் புறமொன்றான முனாபிகுகளாய் இருக்கிறீர்கள்; அல்லாஹ்–ஜல்ல–ஜலாலுஹூத்தஆலா சந்நிதானத்துக்குத் தூரமானவர்களாய் வாழ்கிறீர்கள். உங்களுடைய சொற்கள், செயல்கள், கலப்புள்ள லட்சியங்கள் ஆகியவற்றைப் பற்றி .அல்லாஹ்வின் முன்னிலையில் மீட்சியும் மன்னிப்பும் தேடுங்கள். அல்லாஹ்வுக்குரியவர்களுடைய செய்கைகளிலும் முயற்சிகளிலும் சிருஷ்டிகளின் முகஸ்துதி என்ப திருப்பதில்லை; அவர்களே பரிபக்குவமும் ஜெயமும் அடைபவர்கள்; அவர்களே நிச்சயமான நம்பிக்கையும், கலப்பற்ற ஏகத்துவமும், சுத்தமான நிர்ணயமும் வாய்ந்தவர்கள். அல்லாஹ்வால் தாங்கள் உட்படுத்தப்படும் சோதனைகளில் பொறுமையும், இன்பங்களில் நன்றியறிதலுமுள் ளவர்கள்; அல்லாஹ்வைத் தங்கள் நாவாலும் பிறகு உள்ளத்தாலும் நினைவுகூர்பவர்கள்; சிருஷ்டிகள் அவர்களுக்குத் தீங்கு செய்தால் சிருஷ்டிகளை நோக்கிப் புன்சிரிப்புடன் பார்ப்பவர்கள்; உலக மன்னர்கள் அவர்களின் கண்ணில் அற்பர்களே;சிருஷ்டிகள் யாவும் அவர் களுக்கு உயிரற்ற, ஒன்றும் இயலாத, சீரும் சுகமுமற்ற, தரித்திரமான வஸ்துகளே; கவர்க்கம் அவர்களுக்கு வனாந்தரம் போன்றதே; அதைக்கூட அவர்கள் இச்சிப்பதில்லை) அவர்களுக்குப் பூமியும் வானமும் அவற்றில் வாசம்

செய்தவைகளும் பெரிதல்ல; அவர்களுடைய பல நோக்கெல்லாம் போய், ஒரு நோக்கு உண்டாகியிருக்கும்; முதல் படியில் உலகத்தில் உலகத்தவர் சகவாசத்தில் இருந்து, இரண்டாம்படியில், மறுமையுடையவும் மறுமைக்குரியவர்களுடையவும் சகவாசத்திலிருந்து, பின்னர் இம்மை மறுமையைச் சிருஷ்டித்தவன் சகவாசத்தில் இருக்கும் நிலைமையை அடைவார்கள்; அல்லாஹ்வின் உண்மை பக்தர்களாகித் தங்களுடைய உள்ளங்களைக் கொண்டு அதனோடு மட்டுமுள்ள நிலைமையை அடைந்துவிடுவார்கள்; அவனுக்கும் தங்களுக்கு மிடையே யுள்ள திரையை நீக்கி அவனையே தம்தோழனாகக் கொண்டிருப்பார்கள். அத்தோழனோ இவர்கள் அவனை ஞாபகப்படுத்துவதுபோல், இவர் களைத் தான் ஞாபகப்படுத்தி அருளுபவனாவான். அவனுடைய நிரந்தர நினைவோ சர்வ சுமைகளையும் நிவாரணம் செய்து விடுவதாம். சிருஷ்டிகள் சம்பந்தப்பட்டவரை உயிர் நீத்தவர்களாயும், சிருஷ்டி கர்த்தன் சம்பந்தப்பட்டவரை மட்டும் உயிர் வாழ்பவர்களாயுமுள்ள இவர்களே, "என்னை நீங்கள் நினைவு கூர்ந்தால்' நான் உங்களை நினைவு கூர்வேன், எனக்கு நன்றி கெட்டவர்களாகாதீர்கள்" எனும் திருமறை மொழியை உண்மையில் செவிமடுத்தவர்களாவார்கள். எனவே, அவனது நினைவெனும் அருள் வருமென்ற நம்பிக்கையுடன் அவன் நினைவை அவர்கள் நிரந்தரமாக்குவார்கள். "என்னை ஞாபகப்படுத்துபவனுட னேயே நானும் இருக்கிறேன்" எனும் தெய்வமொழிக்குச் செவி சாய்த்தவர்களாய், சிருஷ்டிகளுடைய சகவாசம் தரும் சந்தர்ப் பங்களை வெறுத்து, அவனது ஞாபகம் கொண்டே திருப்தியடைந்தவர் களாவார்கள். அவன் தம்முடன் இருக்கும் நிலைமையுண்டாக வேண்டுமென்பதே அவர்களின் பேரவா.

தோழர்களே, உணர்ச்சி பெற்று வாழ முன் வாருங்கள். அறிவு என்பது அனுஷ்டானமின்றிப் பயன்தராது. வெள்ளையிலுள்ள கருப்பை–எழுதப்பட்டிருக்கும் மறை மொழியை–அனுஷ்டானத்துக் கொண்டு வாருங்கள். அதுவோ தெய்வத்தின் கட்டளைகள் நிறைந்த வேதமாகும். தினம், தினம், வருடாவருடம் அனுஷ்டானத்திலேயே சதா ஈடுபட்டு அதன் பயன்களை அடைய முற்படுங்கள்.

அன்பர்களே, உங்கள் அறிவின் அறைகூவல் என்ன தெரியுமா? "நான் உங்களின் மீது ஒரு சாட்சி. எனக்கேற்ற அனுஷ்டானத்தை நீங்கள் உண்டுபண்ணினீர்களா, அல்லவா என்று சாட்சி சொல்லக் காத்து நிற்கிறேன் என்பதே அறிவின் அறைகூவலாகும். நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மொழிந்திருப்பதாவது: "என்னைக் கொண்டு அனுஷ்டானம் செய்யுங்கள் என்று அறிவு ஓலமிடுகிறது. அனஷ்டானம் அறிவின் கூப்பிடுதலுக்குச் செவிசாய்த்தால், அறிவு தங்குகிறது; இன்றேல் உங்களிடமிருந்து விடைபெற்றுச் சென்றுவிடுகிறது." அதாவது அறிவால் ஆகக்கூடிய நற்பயன் இழந்துபோகிறது. அறிவு என்பது உமியே யல்லாது அரிசியன்று; அரிசியான அனுஷ்டானமும் உமியாகிய அறிவும் பிரிந்திடின் விளையும் சக்தி ஏது?

ரஸூல் (ஸல்) அவர்களைப் பின் பற்றுவதெனில் அவர்களுடைய சொற்படி அனுஷ்டித்து வரவேண்டாமா? அவ்விதம் அனுஷ்டித்து வந்தாலன்றோ, அனுஷ்டானம் உங்களை உருவாக்கி இறைவன் சந்நிதானத்துக்குக் கொண்டு செல்லும்! அனுஷ் டானம் பெற்ற நல்லறிவோ அறிவை இறக்கிய ஆலிம் (அறிந்தோன்) ஆனவனின் சமீபத்துக்கு உங்களை அழைத்துச்செல்கிறது. முதலில் அவன் கட்டளைப்படி (வெளிப்படையான ஷரீஅத்துப்படி) ஒழுகி வாருங்கள். அதுவே முதலாவது அறிவாகும்; பிறகு, மறைப்பொருளான அறிவின் ஊற்றுப்பொங்கப் பெற்றவர்களாய் கட்டளையும் ஞானமும், ஷரீஅத்தும் தரீக்கத்தும் தெரிந்தவர்களாய் விளங்குவீர்கள். கட்டளை களுக்குச் சிரம் சாய்ப்பீர்கள்; ஞானத்தைக் கொண்டு அறிவைப் பெருக்கு வீர்கள். அந் நிலைமையில் அடையப்பெற்ற 'அறிவு' எனும் செல்வத்துக்கு 'ஜக்காத்' செலுத்தும் கடமை ஏற்பட்டுவிடும். அறிவின் 'ஜக்காத்' அறிவைப் பரப்புவதாகும்; ஜனங்களைச் சிருஷ்டித்தவன்பால் அழைப்பதாகும்.

அன்பர்களே, 'ஸாபிர்'களாக (பொறுமையாளர்களாக)த் திகழ்ந்த வர்களே 'காதிர்'களாக (தத்துவஞானிகளாக)த் திகழுவார்கள்– "பொறுமையாளர்களுக்கு அளவின்றிப் பிரதி பிரயோஜனம் கிடைக்கும்"

என்று இறைவன் கூறியுள்ளான்.

உலகத்தில் நீங்கள் சாப்பிட வேண்டியதுதான்; பிரயாசையைக் கொண்ட சம்பாத்தியத்தால் சாப்பிடுங்கள்; மார்க்கத்தை கொண்டு சாப்பிடவேண்டாம். நீங்களும் சாப்பிடுங்கள்; மற்றவர்களுக்கும் உதவுங் கள். நன்னம்பிக்கையுள்ள மூமின்கள் சம்பாதிப்பதில் நல்லோர்களுக்கு அளிக்கவேண்டும், ஏழைகளுக்குக் கொடுக்கவேண்டும் என்னும் கருத்துடன்தான் மற்றவர்களுக்கும் நல்குங்கள் என்கிறேன். சிருஷ்டிகளுக்குக் கருணைபுரிவதையே உங்கள் லக்ஷியமாய்க் கொள் ளுங்கள். அதுகொண்டு அல்லாஹ்வின் பொருத்தத்தையும் பிரியத்தை யும் அடையலாம். "மானிடர் அல்லாஹ்வின் உற்றார் ஆவர்; அவனுடைய உற்றார்களுக்கு அதிகம் நன்மை செய்பவர்களையே அவன் அதிகமாய் நேசிக்கிறான்" என்று ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மொழிந் திருப்பதை மூமின்கள் சதா ஞாபகத்தில் வைப்பது அவசியம்.

அல்லாஹ்வின் அன்பர்கள் (அவ்லியா) சிருஷ்டிகள் சம்பந்தப்பட்ட வரை ஊமையர்களாகவும், குருடர்களாகவும், செவிடர்களாகவுமே இருப்பார்கள். அல்லாஹ்வை அடுத்திருக்கும் அவர்கள் அவனல்லாத வற்றைப் பற்றிப் பேசுவதுமில்லை; கண்கொண்டு பார்ப்பதுமில்லை; செவி மடுப்பதுமில்லை. அவன் சமீபமாய் இருக்கும் காரணத்தால் சுய உணர்வற் றிருக்கும் அவர்களிடம் அவன் சக்தியைக் கண்ட பீதி ஒரு புறம் மிகைத்து விடுகிறது; அவன் கருணையைக் கண்ட அன்பும் பக்தியும் மறுபுறம் அவர்களை வயப்படுத்தி விடுகிறது. ஒருபுறம் சக்தி மயத்தின் (ஜலாலின்) காட்சியால் அடிபட்டவர்களாயும், மறுபுறம் கருணை மயத்தின் (ஜமாலின்) காட்சியால் அடிபட்டவர்களாயும் ஜலாலுக்கும் ஜமாலுக்கும் இடையே இடம் பெற்றவர்களாய் இருப்பார்கள். அவர்கள் தம் வலப்புறமும் திரும்பிப் பார்ப்பதில்லை; இடப்புறமும் திரும்பிப் பார்ப்பதில்லை. 'பின்' என்பதில்லாத 'முன்' பார்வை–ஒரே நோக்கே அவர்களுக்கு உண்டாகிவிடுகிறது. மானிடரும் ஜின்னுகளும், அமரர்களும் ஏனைய சிருஷ்டிகளும் இத்தகையோருக்குத் தொண்டு புரிபவர்களாகி விடுகின்றனர். இறைவனின் கருணைப் பேறுகளே இவர்களுக்கு உணவளிக்கின்றன. அவன் அன்பே இவர்களுக்குத் தாகம் தீர்க்கிறது.

அவன் கருணை யெனும் உணவை உண்பவர்களாயும் அன்பெனும் அமுதை அருந்துபவர்களாயுமிருப்பார்கள். சிருஷ்டிகளின் பேச்சு இவர்கள் காதில் விழுவதோ, ஒரு வனத்தில் இவர்கள் இருக்க மற்றொரு வனத்திலெழும் கூக்குரல் அங்குக் கேட்கும் அளவேயாகும். இத்தகையோர்களே அல்லாஹ்வின் திருத்தூதர் (ஸல்) அவர்களது பிரதிநிதிகளாக, சிருஷ்டிகளுக்குத் தெய்வ ஏவல்களின் உத்தரவை விடுப்பார்கள்; தெய்வ விலக்கல்களை விட்டும் விலக்குவார்கள். உண்மையில் வாரிஸுதாரர் இவர்களேயாவர். சிருஷ்டிகளை மெய்ப்பொருள் அளவில் சேர்ப்பதே இவர்கள் கடமை. சத் பிரசாரத்தைக் கொண்டு இவர்கள் மானிடர் முன் அல்லாஹ்வின் ஆதாரங்களை நிரூபித்துக் காட்டுவார்கள். ஒவ்வொரு வஸ்துவையும் அதனதன் இடத்திலேயே வைத்து, அருகதையுள்ளவர்களுக்கு அவர் களுக்குரித் தான உரிமைகளை அளித்து வருவார்கள். தங்களுக் குரியவற்றை எடுக்கும்போது இவர்கள் மனத் தூண்டுதலுக்கோ இயற்கையின் தேவைக்கோ இடங்கொடுப்ப தில்லை; இவர்கள் விரும்பும் பொறுப்பும் அல்லாஹ்வை முன்னிட்டதாய் இருந்து வரும். உச்சியிலிருந்து உள்ளங் கால்வரை இவர்கள் அல்லாஹ் வுக்கே உரியவர்கள். அவனல்லாத எதற்கும் இவர்களில் இடமில்லை. இந்நிலையை அடைபவர்களே முழு அன்பையும் அடைவார்கள்; ஈடேற்றமும் ஜெயமும் பெறுவார்கள். மானிடனும், ஜின்னுகளும், அமரர் களும், பூமியும், வானமும் அவர்களின் மீது அன்பு பாராட்டத் தொடங்கும்.

உள்ளொன்று வைத்துப் புறமொன்றாக இருப்பவர்களே, சிருஷ்டி யையும் சாதனத்தையும் பூஜை செய்பவர்களே, மெய்ப்பொருளை மற்ந்து கிடப்பவர்களே, நீங்களும் இப்பதவிகளெல்லாம் உங்களுக்குரித் தாகுமென்றும், இந்நிலைமையை அனுபவிப்போமென்றும் நினைக்கிறீர் களோ? அன்று, உங்களுக்கு இவ்விதச் சங்கையும் சிறப்பும் கிடைப்ப தெப்படி? தவறான மனோபாவனைகளை அழித்துச் சிரம் சாய்ப்பவர் களாகுங்கள். உங்கள் பாவங்களிலிருந்து மீட்சி பெறுங்கள்; பிறகு மெய் யறிவைத் தேடுங்கள்! அவ்வறிவை அனுஷ்டான வடிவு பெறச் செய்யுங்கள்; அனுஷ்டானத்தில் கலப்பற்ற நிர்ணயத்தையும் பரிசுத்த மான உண்மை நாட்டத்தையும் நிலைநிறுத்துங்கள்! அப்படிச்

செய்யாவிடில், நீங்கள் நல் வழியை அடையப் போவதில்லை.

உங்களிடம் பகைமை பாராட்டி நான் உங்களைத் தாக்கிப் பேசுபவனல்லன். அல்லாஹுவின் மார்க்கத்தை எடுத்துரைக்குங்கால் உங்கள் அபிப்பிராயங்களையும் மனோபாவனைகளையும் பொருட் படுத்தித் தாட்சண்யம் காட்டாமல், உள்ளதை உள்ளபடி கூறுவேன். என்னுடைய பயிற்சியோ குருவின் கண்டிப்பான போதனை அப்பியாசங் களுக்கும், கஷ்ட நஷ்டங்களுக்கும் இடையில் ஏற்பட்ட கடினமான பயிற்சியாகும். என் பேச்சில் பூச்சுக்களையும்பசப்பு வார்த்தைகளையும் நீங்கள் எதிர்பார்க்கக்கூடாது. என்னிடமிருந்து ஒரு சொல்லை செவியில் வாங்குங்கால், அவ்வாறு இறைவனால் தூண்டப்பட்டவனாகவே நான் மொழிபவனாய் இருக்கிறேன். என்பதை உணருங்கள். என்னிடம் வருங் கால் உங்களின் மனப்போக்கையும் இச்சைகளையும் களைந்தெறிந்து விட்டு வாருங்கள். உங்களுக்கு அகக் கண்களிருப்பின் நானும் அவ்வாறே இருப்பதை அறிவீர்கள். உண்மையை உணரத் தவறுவது ஆபத்தான விஷயமாகும்.

என் சகவாசத்திலிருக்கவும், என்னிடமிருந்து நன்மைகளை அடை யவும் நாடுபவர்களே, என் நிலைமையிலோ சிருஷ்டியென்பதுமில்லை; இவ்வுலகமுமில்லை; மறு உலகமுமில்லை. எனது கரங்களின்மீது மீட்சியை நாடித் 'தவ்பா'ச் செய்து, என் சகவாசத்திலிருந்து என்மீது நன்னம்பிக்கையுள்ளவனாய், நான் சொல்கிறபடி அனுஷ்டித்து வரும் எவனும் அல்லாஹ் நாடினால்நானிருக்கும் அதே நிலைமையை அடைந்து விடுவான்.

நபிமார்களுக்கு அல்லாஹுத் தஆலா தன் மொழி (கலாம்) கொண்டு பயிற்சி அளித்தான்; வலிமார்களைத் தன் செய்தி கொண்டு பயிற்சியளிக்கிறான். செய்தி என்று நான் குறிப்பிட்டது இதயத்தின் உதிப்பையாகும்; வலிமார்கள், நபிமார்களுடைய நிர்வாகப் பொறுப்பாளர் களாகவும் ஊழியர்களாகவுமிருக்கின்றனர்.

அல்லாஹுத் தஆலா பேசக்கூடியவன் என்பதை ஞாபகத்தில் வையுங்கள். மூஸா நபி (அலையுடன் அவன் பேசினான் சிருஷ்டியைக்

கருவியாகக் கொள்ளாமல் தானே பேசியருளினான். மறைபொருள்களை அறிந்த மெய்ப்பொருளாகிய இறைவனே அவர்களுடன் பேசினான்; வேற எதன் அனுசரணையுமின்றியே அவர்களும் அவன் பேச்சை உணர்ந்து கொண்டார்கள். இறைவனின் மொழி, வேறு சாதனமின்றி அவர்கள் அறிவில் நேர்முகமாகவே சென்று இடம் பெற்றுவிட்டது. இதேவிதந் தான் நமது நபிகள் நாயகம் முஹம்மது (ஸல்) அவர்களுடனும் நேர்முக மாகவே அவன் சம்பாஷித்தருளினான்.

திருகுர்ஆனோ ஒரு பலமான கயிறாகும்; உங்களுக்கும் உங்களைச் சிருஷ்டித்த இறைவனுக்குமிடையேயுள்ள–அவனளவில் கொண்டு போய்ச் சேர்க்கூடிய–பலமான கயிறாகும். அல்லாஹ்வின் புறத்தி லிருந்து ஜிப்ரயீல் (அலை) அவர்களால் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் வசம் அல்லாஹ்வின் ஏவல்படி கொண்டு வரப்பட்டதாகும். இவ்விஷயத்தை மறுப்பது தகாத காரியம். யா–அல்லாஹ், அனைவ ருக்கும் வழிகாட்டுவாயாக! அனைவரையும் கிருபையுடன் நோக்கி அருள் புரிவாயாக!

அமீருல்–மூமினீன் முஃதலிம் பில்லாஹ்வைப்பற்றிய ஒரு வரலாறுண்டு. அவர் மரிக்குந் தருவாயில் "எனது இறைவனே, இமாம் அஹ்மது இப்னு ஹம்பல் அவர்கள் விஷயத்தில் நான் செய்ததை மன்னிப் பாயாக! பிறர் சொல்லை நம்பி மதிமோசம் போனேன்" என மன்றாடிப் பிரார்த்தித்தார். (இமாம் அவர்கள் திருக்குர்ஆன் சிருஷ்டிக்கப்பட்ட தன்று எனவும், அல்லாஹ்வின் குணமேயாகும் எனவும் கூறியபோது 'முஃதலிலா'வெனும் பகுத்தறிவுக் கோஷ்டியினரின் பேச்சுக்களைக் கேட்டுக் கலீபாவானவர் இமாம் அவர்களைச் சிறையிலடைத்ததுபற்றி, இறுதியில் உண்மை கண்டு மன்னிப்புத் தேடிய வரலாறாகும்).

இறைவன் சந்நிதானத்தில் ஏழைகளாயிருப்பவர்களே, பயனற்ற பேச்சுக்களை விட்டொழியுங்கள். பிடிவாதமும் வேண்டாம். இவற்றைத் தவிர்த்து, இம்மையிலும் மறுமையிலும் உங்களுக்கு நற்பயன்களை அளிக்கக்கூடிய காரியங்களில் ஈடுபடுங்கள். அவ்வாறு அனுஷ்டான மார்க்கத்தில் இறங்கினால் வெகு விரைவில் பயனை அறிந்து கொள்ள

லாம்; என் வார்த்தைகள் மெய்யானவை என்பதையும் கண்டு கொள்ளலாம்.

உங்கள் உள்ளத்திலிருந்து உலகக் கவலைகளை அகற்றுங்கள். ஏனெனில், இவ்வுலகம் உங்களுக்குச் சதமன்று, உலக சுகத்தைத் தேடித் திரிவதையும் லட்சியமாகக் கொள்ளாதீர்கள். ஏனெனில், உலக சுகமென்பது தேடித் தேடித் திரிந்தும் கிடைக்காது போய்விடும் கானல் நீராகும். "மறுமையின் இன்பமே இன்பமாகும்" என்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் அருளியுள்ளார்கள். உங்கள் இச்சைகளை அழியுங்கள். அப்பொழுது தான் அடக்கம் ஏற்படும். அடக்கம் சீர்கெடுவ தெல்லாம் இச்சையினதும் ஆசையினதும் தலைவிரித்தாடு தலினாலேயாம்.

உலகில் பெரிய மனிதர்களெனப்படுபவர்களின் சிநேகத்தையும் விடுங்கள். அவர்களுக்கும் உங்களுக்குமிடையே இருக்கும் நேசமெனும் கயிற்றை வெட்டிவிடுங்கள். அதற்குப் பதிலாக நல்லோர்களுடன் சிநேக பந்துவத்வத்தின் வித்தை ஊன்றுங்கள். அன்பனாயிருப்பினும், அவன் தீய சகவாசத்திலிருப்பின் அவனைவிட்டு விலகிவிடுங்கள்; அன்னிய னாய் இருப்பினும், அவன் நற்சகவாசத்திலிருப்பின் அவனை அணைத்துக் கொள்ளுங்கள். சகவாசத்தினால் விளையும் பாதக சாதகங் களையும் நன்கறிந்து கொள்ளுங்கள். சகவாசத்தினால் சமீபத்துவம் ஏற்படுகிறது; சகவாசத்துக்குத் தக்கபடி குண இயல்புகளும் உண்டாகி விடுகின்றன.

அத்துடன் அகத்தில் இச்சை இல்லாது அகற்றுங்கள். விதியி லுள்ளதன் மீதும் ஆசையும் தேட்டமும் வேண்டாம். விதியிலுள்ளது தேட்டமில்லாமலே கிடைத்துவிடும்; விதியிலில்லாதது தேட்டமிருந்தாலும் கிடைக்கப்போவதில்லை. அவ்வாறு விதியில் இல்லாததைத் தேடுவது உண்மையில் ஒரு வேதனையாகும்; துர்ப்பாக்கியமாகும். ஒருவன் தன் தக்தீரில் இல்லாதவற்றைத் தேடுவது அவ்வடியான் மீது அல்லாஹ்வின் புறத்திலிருந்து உண்டாகும் வேதனை தரும் சோதனையாகும்" என்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

அன்பர்களே, சிருஷ்டிகளை நோக்குவதைக் கொண்டு சிருஷ்டி கர்த்தன் இருக்கிறான் என்பதற்கு ஆதாரம் பெறுங்கள். சிருஷ்டிகளின் அமைப்பையும் படைப்பையும் பற்றி நன்கு தியானித்தால், அத்தியானம் சிருஷ்டிகர்த்தன்பால் கொண்டுபோய்ச் சேர்த்துவிடுவதாய் இருப்பதை உணர்வீர்கள். நம்பிக்கை நிர்ணயமும் (யக்கீனும்), மெய்யனுபவமும் (மஃரிபத்தும்) பெற்ற மூமினுக்கு இரு நோக்கு இருந்து வரும். ஒன்று வெளிப்பார்வை; மற்றது அகப்பார்வை. வெளிப் பார்வையால் உலகத்தில் இறைவன் சிருஷ்டித்தவற்றைக் காண்பான்; அகப் பார்வையால் ஆத்ம லோகத்தில் சிருஷ்டிக்கப் பெற்றிருப்பவைகளை காண்பான். பார்வை சீர்பெற்றதும் உள்ளத்திலிருந்து திரை அகற்றப்படுகிறது. மெய்ப் பொருளை உவமையும் நிலைமையும் அற்ற தன்மையில் தரிசிக்கும் புலன் திறந்துவிடுகிறது. அவனை அடுத்தவன் அவனது அன்பன் ஆகிவிடு கிறான். அன்பர்களுக்கிடையில் ஒளிவு மறைவு ஏது? ஆனால், இங்ஙனம் திரை நீக்கப்படுவது அத்தகைய உள்ளத்திலிருந்தென்றா நினைக் கிறீர்கள்? சிருஷ்டிதான் (நப்ஸ்), இயற்கை, இச்சை, ஷைத்தான் ஆகிய சகலவற்றினின்றும் நிர்மலம் அடைந்துவிடும்; உள்ளம், பூமியில் புதையல்கள் யாவற்றினுடைய திறவுகோல்களையெல்லாம் உதைத் தெறிந்துவிட்டுச் சீரும் சமமும் அடைந்துவிடும். உள்ளம் திரைகள் நீக்கப்படும் நிலைமையை அடைந்ததாகும் அறிவாளிகளாகி நான் கூறுபவற்றை நன்கு கிரகித்துத் தியானியுங்கள். என் பேச்சில் கருத்துக் கள் மட்டும் இருக்கின்றன. விஷயங்களின் மூலாம்சங்களையும், அகமியங் களையும், உட்கருத்துக் களையுமே தெளிவாக உங்கள் முன் கூறுகிறேன்.

அன்பர்களே, சிருஷ்டிகர்த்தாவிடம் முறையிட வேண்டியதைச் சிருஷ்டிகளின் முன் முறையிடாதீர்கள். முறையிட வேண்டியதிருப்பின் அதை அவனிடமே கூறுங்கள். அவனே சர்வ சக்தி வாய்ந்தவன்; அவனல் லாதவை ஒன்று மற்றவையாகும்.

இரகசியங்களையும், துன்பங்களையும், வியாதிகளையும், தர்மம் கொடுத்தலையும், மறைமுகமாக வைத்திருப்பதும் சிறந்த சற்குணங்களில் ஒன்றாகும். உங்கள் வலக்கரம் செய்யும் தானம், இடக் கரத்துக்குக் கூடத் தெரியாதிருக்க வேண்டும்.

உலகமெனும் கடலில் எச்சரிக்கையாயிருங்கள். எத்தனையோ அரும் சிருஷ்டிகள் இதில் மூழ்கி அழிவை அடைந்துவிட்டன. வெகு சிலரே இக்கடலிலிருந்து தப்பிக் கரை சேர்பவர்களாய் இருக்கிறார்கள். உலகம் அனைவரையும் ஆழ்த்த முயற்சிக்கும் ஆழிய சமுத்திரமாகும். அல்லாஹ்தான் நாடிய நல்லடியார்களை இச்சமுத்திரத்திலிருந்து கரை சேரச் செய்கிறான். மூமின்களைக் கியாம நாளில் நரகத்திலிருந்து ஈடேற்றம் அடையச் செய்வதுபோல், கியாம நாளிலோ அனைவருமே நரகத்தின் மேல் ('ஸிராத்' என்ற பாலத்தின் வழியாக) சென்று கரையேற வேண்டியவர்களாய் இருக்கின்றனர். அன்றும் அல்லாஹ், அவன் "நீங்கள் நரகத்தைக் கடந்துசெல்ல வேண்டியவர்களே யன்றி வேறில்லை; இதுவோ உங்களுடைய இறைவனின் முன்பாக நிர்ணயிக்கப்பட்ட விஷயமாகும்" என்று அல்லாஹ்வும் கூறியுள்ளான். அச்சமயத்தில் நரக நெருப்பை நோக்கி, "என் மீது கலப்பற்ற நிர்ணயமும் இதரவற்றிலிருந்து ஒதுங்குதலும் உள்ளவர்கள் கடந்து செல்லும்வரை குளிர்ந்ததாகவும் தீங்கிழையாத சாந்தியானதாகவும் ஆகிவிடுவாயாக!" என்று அல்லாஹுத் தஆலா கூறுவான். நம்ரூது, இப்ராஹீம் (அலை) அவர்களை நெருப்பிலிட்ட சமயம், நெருப்பை நோக்கி அவன் எப்படிக் கட்டளையிட்டானோ, அப்படியே கியாம நாளில் நல்லடியார்கள் விஷயத் தில் நரகத்தை நோக்கியுங் கட்டளையிடுவான்.

அவனுடைய கார்மானம் எவ்விஷயத்திலும் இத்தகையதாகவே இருக்கிறது. "உலகமெனும் சமுத்திரமே இவ்வடியானை ஆழ்த்தி விடாதே!" என்று அவன் கட்டளையிடின் அடியான் ஆழ்ந்துவிடாது கரைசேர்ந்து விடுபவனாய் இருக்கிறான். மூஸா (அலை) அவர்களையும் அவர்களது சகாக்களையும் நீலாற்றில் மூழ்காது காப்பாற்றியதுபோல, நல்லடியார்களை உலக சமுத்திரத்தில் ஆழ்ந்துவிடாது காப்பாற்றக் கூடியவனும் அவனே. தான் நாடியவர்கள்மீது அருள்மாரி பொழியக் கூடியவன்: தான் நாடியவர்களுக்கு அளவிலா இரணம் அளிக்கக் கூடியவன். சர்வ நன்மைகளும் அவன் கரத்திலேயே இருக்கின்றன; உலகமும் அவன் கையிலேயே இருக்கிறது; செல்வமும், தரித்திரமும், கீர்த்தியும், அபகீர்த்தியும் அவன் கையிலேயே இருக்கின்றன.

அவனல்லாதவற்றில் ஒன்றுமில்லை. எனவே, இதரத் தலைவாயில்களை அணுகாமல், அவன் தலைவாயிலைத் தட்டுபவனே அறிவாளியாவான்.

உலகத்தில் ஆழ்ந்து கிடப்பவர்களே, உங்களுடைய நிலைமை யாது? சிருஷ்டித்தவனுடைய பொருத்தத்தை அடையாது, சிருஷ்டிகளின் மனப் பொருத்தத்தை மட்டும் தேடி தட்டலைகிறீர்கள்! உலக வாழ்வு சுகம் பெறச் செய்வதில் மறுமையை நாசப்படுத்தியவர்களாகத் திரிகிறீர்கள். இவ்வாறு திரிபவர்கள் அவனுடைய பலமான பிடிக்கு ஆளாக நாட் செல்லாது. அவன் பிடி ஏற்படுவதில் பல வழிகளுண்டு. உங்கள் பதவி களை இழக்கச் செய்வது கொண்டும், வியாதிகளைக் கொண்டும், அபகீர்த்தியைக் கொண்டும், தரித்திரத்தைக் கொண்டும், விதவிதமான துன்பங்களைக் கொண்டும், துயரங்களைக் கொண்டும் உங்களைப் பிடிப்பான். நீங்கள் நாட்டம் கொண்டலையும் சிருஷ்டிப் பொருட்களே உங்களைத் திருப்பி நாவாலும் செயலாலும் தீங்கிழைக்கச் செய்வது கொண்டு அவனுடைய தண்டனை உண்டாகிவிடும். நித்திரையிலாழ்ந்து கிடப்பவர்களே, விழியுங்கள்! யா அல்லாஹ், உன்னோடு, உனக்காக எங்கள் அனைவரையும் விழிப்படையச் செய்வாயாக!

அன்பர்களே, உலகத்தை தேடுவதில் இரவின் இருட்டு வேளையில் விறகு பொறுக்கச் சென்றவன் போலாகி விடாதீர்கள். இருட்டில் விறகு பொறுக்குபவன், கையில் ட்டுப்படுவது எது என்பதைக் காணமுடியுமா? உங்களுள் பெரும்பாலாரின் விஷயம் இவ்வுவமைக் கொப்பானதாகவே இருக்கிறது. நிலா வெளிச்சமோ வேறு எவ்வெளிச்சமோ இல்லாத நிலையில், உயிருக்கு அனர்த்தம் வினைவிக்கக்கூடிய சர்ப்பம் முதலிய விஷ ஜந்துக்கள் மலிந்த காட்டில், விறகு பொறுக்குவதென்றால் சூரிய வெளிச்சத்துடன், தீங்கு தரக்கூடியதைக் கண்டு விலகக்கூடிய நிலையி லன்றோ தேட வேண்டும்! உங்களுடைய சர்வ காரியங்களும் (தவ்ஹீத்) ஏகத்துவம், (ஷரீஅத்) தெய்வச் சட்டம், (தக்வா) பயபக்தி ஆகிய கதிர் களைக் கொண்ட சூரிய வெளிச்சத்துடனல்லவோ நடைபெற வேண்டும்! அச்சூரிய வெளிச்சம் கொண்டல்லவோ, ஆசை, அலங்காரம், சாத்தான், சிருஷ்டி ஆகியவற்றை மெய்ப்பொருளாகக் கொள்ளக்கூடிய வலையில்

அகப் படாது தப்பிக்க முடியும்! இவ்வெளிச்சமிருந்தாலல்லவா, ஆத்திரக் காரனாகி புத்தி குறையும் ஆபத்திலிருந்தும் தப்ப முடியும்!

ஒவ்வொரு கருமத்திலும் அவசர புத்தியுடனும் ஆத்திரத்துடனும் நடப்பவன் பாடு கைசேதமேயாம், அவசரத்துடன் நடப்பவன் தவறுகளுக் காளாவான்; அல்லது தவறுகளை அணுகுவான். ஆனால், ஆர அமர தீர உணர்ந்து காரியமாற்றுபவன் செவ்வனே நடப்பான்; அல்லது நடக்கும் நிலையை அடுப்பான்.

ஆத்திரபுத்தி சாத்தானுடைய குண லட்சணமாகும்; தீர ஆலோசித்து உணர்ந்து நடப்பது ரஹ்மானியான (தெய்வக் கருணையின் இயல்பான) குண லட்சணமாகும்.

பெரும்பாலும் உங்களை ஆத்திரக்காரர்களாகவும் அவசரக்காரர் களாகவும் ஆக்குவது உலகப் பொருள் திரட்ட வேண்டுமெனும் ஆசையே யாகும். அவ்வாசைக்கு இடங்கொடாதிருப்பதன் மூலம் திருப்தி அடையும் குணத்தைக் கைப்பிடியுங்கள்! திருப்தி என்பது முடிவு பெறாத செல்வ மாகும். உங்கள் தலையெழுத்திலில்லாதிருக்கக்கூடிய வற்றைப் பற்றிய தேட்டம் வேண்டாம்; உங்கள் தலையெழுத்தில் இல்லாததின்–உங்க ளுக்கு கிடைக்கக்கூடாததின்–ஆவல் எதற்காக? உங்கள் ஆசையை அடக்குங்கள். விதிவசத்தின்படி அடையப் பெறுவதில் திருப்தி கொள்ளுங்கள். மற்றவை சம்பந்தப்பட்டவரை துறவிகளாகி விடுங்கள். இத்தகைய அடக்க நிலையில் நீங்கள் நிலைபெற்று நின்று விட்டால், மெய்ப்பொருளை அறியக்கூடிய ஞானிகளாய் விடுவீர்கள். அச்சமயம் எவ்வஸ்துடைய தேவையும் அற்றவர்களாகி விடுவீர்கள்; உங்கள் உள்ளம் விதிவசத்திலுள்ளது கிடைக்குமென்ற நம்பிக்கை நிறைந்ததாகிவிடும்; உங்கள் அகம் பரிசுத்தம் பெற்றதாகிவிடும்; உங்கள் இறைவனே உங்களுக்கு அறிவு புகட்டுபவனாகி விடுவான். அந்நிலை மையில் உங்களின் வெளிக்கண்களின் முன் இம்மை அலட்சியமாகி விடும்; உங்கள் அகக் கண்களின்முன் அல்லாஹ்வல்லாத சகலமும் அலட்சியமாகிவிடும்; அப்பதவி அடையும்போது அல்லாஹ் அல்லாத எவ்வஸ்துவினது சங்கையும் உங்கள் உள்ளத்தில் இடம் பெறாது;

நீங்களோ சர்வ சிருஷ்டிகளுடைய சங்கைக்கும் உரித்தானவர்களாகி விடுவீர்கள்.

அன்பர்களே, உங்கள் முன் ஒரு கதவும் அடைபடக் கூடாதென்ற அபிலாஷை உங்களுக்கிருப்பின், அல்லாஹ்வுக்குப் பயப்படுங்கள்! ஏனெனில், இறை பயம் என்பதே சர்வ கதவுகளையும் திறக்கக்கூடிய திறவுகோலாகும். "அல்லாஹ்வின்மீது பயபக்தி உடையவனாக இருப்பவன், தனக்குத்தானே வெளியேறுவதற்குரிய சாதனங்களைச் செய்து கொள்கிறான்; அவன் நினையாப்புறத்திலிருந்து சாதனங்களைப் பெறுகிறான்"(திருகுர்ஆன்)

மெய்ப்பொருளாகிய இறைவன் நாட்டம் பற்றிய எதிரிடை விவாதம் ஆகாத காரியமாகும். (அவன் ஏன் அப்படிச் செய்கிறான், இப்படிச் செய்கிறான் என்பது போன்ற எதிரிடை வினாக்களுக்கு இடமளிக்கக் கூடாது). உங்கள் சொந்த விஷயமாயிருப்பினும் சரி, குடும்ப விஷயங்களாயிருப்பினும் சரி, சொத்து சுக விஷயமாயிருப்பினும் சரி, தன் சகவாசிகளுடைய விஷயமாயிருப்பினும் சரி, அல்லாஹ்வின் காரியங்களைப் பற்றி நியாயம் பேச முன்வருவதில் நீங்கள் நாணப்பட வேண்டும். அவனைவிடவா நீங்கள் நியாயம் செலுத்துவதிலும் ஞானம் வாய்ந்திருப்பதிலும் கருணை புரிவதிலும் மிகைத்தவர்கள்? நீங்களும் இதர சிருஷ்டிகள் யாவும் அவனுக்கடிமைகளேயன்றி வேறல்ல. உங்கள் மீதும் அதிகாரம் செலுத்துபவன் அவனே!

அத்தகைய ஏக இறைவனுடைய சந்நித்தியத்தை இம்மையிலும் மறுமையிலும் அடைய நாடுவீர்களேயாகில், முதலில் தன்னடக்கமும் மௌனமும் பொறுமையும் வேண்டும். அல்லாஹ்வின் தோழர்கள் (அவ்லியா) அவன் முன்பாக அடிபணிந்து ஒழுக்கத்துடனிருப்பவர் களாவார்கள். உள்ளத்தில் தெளிவான உத்தரவு பிறக்காதவரை அசையவுமாட்டார்கள்; அடி எடுத்து வைக்கவுமாட்டடார்கள். ஆகுமானவற்றை அனுபவிப்பதில்கூட– அவன் புறத்திலிருந்து ஏற்படக்கூடிய உதிப்பு வழியாக உத்தரவை எதிர் நோக்கி நிற்பார்கள். அகக் கண்களையும் புறக் கண்களையும் புரட்டக்கூடிய அவன்

சாந்நித்தியத்தில் உயில் பெற்றிருப்பவர்களாவார்கள். இம்மையில் அகக் கண்களைக் கொண்டு மெய்ப்பொருளின் காட்சியையும் மறுமையில் புறக் கண்களைக் கொண்டு அவன் காட்சியையும் பெற வேண்டுமென்ற அபிலாஷை நிறைவேறும் வரை அவர்கள் நிம்மதியடைய மாட்டார்கள்.

இறைவனே, எங்கள் அனைவருக்கும் இம்மையிலும் மறுமையிலும் உன் சந்திப்புக் காட்சி ஏற்படுமாறு அருள் புரிவாயாக! உன் சமீபத்துவத் துடையவும் காட்சியுடையவும் பேரின்பத்தை நாங்கள் அடையுமாறு செய்வாயாக! உன்னையல்லாது இதர சகலவற்றையும் துறந்து, உன்னைக் கொண்டு மட்டும் மனப் பொருத்தம் அடையும் புண்ணிய வான்களின் கூட்டத்தில் எங்களையும் சேர்த்தருள்வாயாக! இம்மையில் நற்பேறுகளையும், மறுமையில் நற்பேறுகளையும், நரகாக்கினியிலிருந்து விமோசனத்தையும் தந்தருள்வாயாக!

ஹிஜ்ரி 545 ஷவ்வால் பிறை 10 ஞாயிற்றுக்கிழமை தியான மடத்தில் ஆண்டகை அவர்கள் நிகழ்த்தியது :

தோழர்களே, "நன்மையின் கதவு திறக்கப்படும்போது அதைப் பெரிதாகக்கொண்டு பயன் பெறுங்கள். ஏனெனில், அக்கதவு எந்நிமிடம் அடைபடுமென்பது தெரியாது" என்று ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மொழிந்துள்ளார்கள்.

சமூகத்தவர்களே, வாழ்வெனும் கதவு அடைபடாதிருப்பதையே பெரும் பேறு என்றும் பெரும் பொக்கிஷமென்று நினையுங்கள். ஏனெனில், அது சீக்கிரம் அடைபட்டுப் போகக்கூடியதாய் இருக்கின்றது. அது போன்றே உங்களுக்கு நன்மை செய்யும் சக்தியிருப்பதையும் பொருட் படுத்துங்கள். மீட்சியின் (தவ்பாவின்) கதவு திறந்திருக்கும் நிலைமை யையும் பொருட்படுத்தி, அக்கதவுக்குள் புகவும் தாமதிக்க வேண்டாம். அவ்விதமே உங்கள்முன் பிரார்த்தனையின் (துஆவின்) கதவு திறந்திருப் பதையும் பொருட்படுத்துங்கள்.

சமூகத்தவர்களே, உடைத்தவற்றை உண்டுபண்ணுங்கள். அசுத்தப் படுத்தியவற்றைச் சுத்தப்படுத்துங்கள். கெடுத்ததைத் திருத்துங்கள். பிடுங்கியவற்றை திரும்பக் கொடுங்கள். உங்களின்

வழிதவறிய நிலையை விட்டு உங்களின் பாதுகாவலனாகிய ரப்பின் பக்கம் திரும்புங்கள்!

அன்பர்களே, இங்கோ சக்தியும் கருமுள்ள சிருஷ்டிகர்த்தனே யன்றி வேறொன்றுமில்லை. நீங்கள் சிருஷ்டித்தவன் பக்கம் இருக்க விரும்பினால் அவன் அடியார்களாகுங்கள்; சிருஷ்டிகளின் பக்கம் இருக்க விரும்பினால் சிருஷ்டிகளின் அடியார்களாகுங்கள்.

உள்ளத்தில் சோதனையின் வெட்டவெளிகளையும் காடுமலை களையும் கடந்து, அகமியத்தில் அனைத்தையும் துறக்காத வரை, நீங்கள் போதிக்க முற்படுவது சரியன்று. ஏனெனில், அல்லாஹ்வையே வேட்பவன் இதர சகலவற்றிலிருந்தும் புறம்பாக இருப்பான்; சிருஷ்டிப் பொருள் ஒவ்வொன்றும் தனக்கும் மெய்ப்பொருளுக்கு மிடையேயுள்ள திரையென் பதை அவன் உணர்ந்திருப்பான். அவனல்லாத எவ்வஸ்துவின்மீது தரிபடினும் திரையால் மூடப்பட்ட நிலையே ஏற்படும்.

அன்பர்களே, சோம்பேறிகளாகிவிடாதீர்கள்; சோம்பேறிகள் பெரும்பாலும் துர்ப்பாக்கியர்களாயும் கைசேதக்காரர்களாயுமே இருப்பார்கள். உங்கள் செய்கைகளைச் சீர்படுத்துங்கள்; அப்போது தான் இறைவன் உங்கள் இம்மையையும் மறுமையையும் சீர்படுத்திக் கொடுப்பான். இவற்றையெல்லாம் அனுபவித்தவர்களே அறிய முடியும்.

சிருஷ்டிகளுடன் பழகுதலும் இணங்கியிருத்தலும் நலம்தான்; புண்ணியமான காரியம்தான்; ஆனால், அவை ஷரீஅத்தின் வரம்பு களுக்கு உட்பட்டவையாகவும் இறைவனுடைய பொருத்தத்துக்கு இசைந்தவையாகவும் இருக்க வேண்டும். அவ்வாறின்றி, ஷரீஅத்தின் வரம்புமீறி விடப்படில்–இறைவனுக்குப் பொருந்தாத நிலையில்–அவை நல்லவையல்ல. அத்தகையோர்களுக்குச் சங்கையுமில்லை. இறைவ னுக்கு அடி பணிதல் என்பது அங்கீகரிக்கப்படுகிறதா அல்லது தள்ளப் படுகிறதா என்பதற்கு நல்லோர் பெரியோரிடம் அடையாளங்கள் இருக் கின்றன.

அன்பர்களே, பிரார்த்தனை (துஆ) எனும் வலையை இப்பொழுதே விரித்துவையுங்கள். தெய்வச் சித்தப் பொருத்தமே லட்சியமாகக்

கொண்டு செல்லுங்கள். மனம் ஆட்சேபத்திலும் சந்தேகத்திலுமிருக்கும் தன்மையில் பிரார்த்தனை செய்யாதீர்கள். கியாம நாளில் உலகில் செய்த நன்மையையும் தீமையையும் மனிதன் ஞாபகப்படுத்துவான். ஆனால், அங்கு ஏற்படக்கூடிய வருத்தம் பயனளிப்பதாய் இருக்காது. இங்கு–இப்போது–அத்தகைய ஞாபகமும் கிலேசமும் ஏற்படவதே பயன் செய்யும். ஏனெனில், கதிரறுக்கும் சமயம் விதைகளின் குறை பற்றியும் விவசாயக் குறைகளைப் பற்றியும் பேசுவதால் பயனேற்படுவதில்லை. "இம்மை யென்பது மறுமைக்குரிய விவசாய நிலமாகும்; நல்லதை விதைப்பவன் அங்கே பேறுகளைப் பெறுவான்; தீமையை விதைப்பவன் அவமானத்தையே அடைவான்" மரணம் உங்கள்முன் வரும்போது விழிப்படையத்தான் செய்வீர்கள்; ஆனால், அவ்விழிப்பினால் யாது பயன்? இறைவனே, அறியாதவர்களை மறதியாளர்களின் நித்திரையிலிருந்து விழிப்படையச் செய்வாயாக! ஆமீன்!

அன்பர்களே, தீயோர்களின் சகவாசம் நல்லோரைப் பற்றிய நல்லெண்ணத்தைக் களைந்து விடுவதாய் இருக்கிறது. அதைவிட்டு அல்லாஹ்வின் திருமறையினதும் அவன் திருத்தூதரின் (ஸுன்னத்) முன்மாதிரியினதும் சாயையின் கீழ் நடவுங்கள்! அது கொண்டுதான் பரிபக்குவம் பெறுவீர்கள்.

சமூகத்தவர்களே, இறைவன் முன் வெட்கித்தவர்களாக நில்லுங் கள். அவன் முன்னிலையில் அருகதையற்றவர் வெட்கித்தல் வேண் டாமா? மறதிக்கும் ஆளாகாதீர்கள்; ஏனெனில் உங்களின் காலம் வீணே பறந்து கொண்டிருக்கிறது; நீங்கள் அருந்தக் கூடாதவற்றைச் சேமிப்பதில் ஏன் முழுப் பராக்காக இருக்கிறீர்கள்? கிடைக்கக் கூடாத வற்றை ஏன் தேடித் திரிகிறீர்கள்? இருக்கக் கூடாத கட்டடங்களை ஏன் கட்டிக் கொண்டிருக்கிறீர்கள்? இவை யாவும் உங்கள் இறைவன் முன்னிலையில் நீங்கள் நிற்பதை தடுக்கிறவன் அவனல்லவா? இதற்கு மாறாக அல்லாஹ்த் தஆலாவின் ஞானம் அறிந்தோரின் உள்ளத்தில் கூடாரம் அடித்துவிடுகிறது; எங்கும் வியாபித்துவிடுகிறது; ஏனைய வற்றை மறக்கச் செய்துவிடுகிறது. இந்நிலை ஏற்பட்டதும் உண்டாவதே சுவர்க்கமாகிவிட்டது. ஒரு சுவர்க்கம் ரொக்கமாகக் கிடைப்பது; மற்றது வறுமையினால் கிடைக்கக்கூடிய கடனாக இருப்பது.

ரொக்கமாக இம்மையிலே ஏற்படும் சுவர்க்கம் யாது? அதுவே விதியின்மீது பொருத்தமடையும் மன நிலையாகும்; உள்ளம் உண்மைப் பொருளை அடுத்திருப்பதாகும்; இறைவனுடைய ஒளிவு மறைவற்ற சிநேகமாகும்; திரைகள் நீங்கிவிடுவதாகும். அத்தகைய இதயமும் உள்ளமும் அடைந்த மனிதன் தனியாய் இருக்கையில் எந்நேரமும் எந்நிலையிலும் நிகரற்றவனும் பார்ப்பவனும் கேட்பவனுமாகிய மெய்ப் பொருளுடன் உவமையற்றும் நிலைமையற்றும் இருப்பான்.

மூமின்களுக்கு மறுமையில் அளிப்பதாக இறைவன் அறுதி செய்துள்ள சுவர்க்கமும், அவனைத் திரையின்றித் தரிசிப்பதுமே கடனான–வாக்களிக்கப்பட்டுள்ள சுவர்க்கமாகும்.

சர்வ நன்மையும் அல்லாஹ்விடமுள்ளன.சர்வ தீமையும் அவனை விட்டு முகம் திருப்புவதால் ஏற்படுபவையாய் இருக்கின்றன. உலக இன்பத்தை முன்னிட்டுச் செய்யப்படும் வணக்கங்கள், முயற்சிகள் யாவும் அதன் நோக்கத்தைத் தருபவைகளாய் இருக்கின்றன. அல்லாஹ்வே லட்சியமாக–நோக்கமாக–அவனை முன்னிட்டதாக மட்டும் செய்யப்படும் வணக்கங்களே அவனுக்குரியவையாகும். ஒரு வணக்கம் செய்து அதற் கொரு பிரதி பயனை (இம்மையாயினும் சரி, மறுமையாயினும் சரி), நீங்கள் விரும்பின், அப்பயனும் ஒரு சிருஷ்டிப் பொருள்தானே! அவ்வாறு இல்லாத பயனொன்றையும் சேராது, அவனை முன்னிட்டதாக மட்டும் செய்யும் வணக்கத்தால் அவனுடைய சமீபத்துவமும் அருளும் காட்சியும் ஏற்படு கின்றன.

ஆகவே, எவ்வணக்கத்துக்கும் பயனை கேட்காதீர்கள்; எதிர்பார்க் காதீர்கள். அவனுக்கு முன்பாக உலகம்தான் என்ன? மறுமையும் அவனல் லாத சகலமும் தானென்ன? ஒன்று மற்றவையன்றோ! அருளாளனைத் தேடுங்கள்; அருளைத் தேடவேண்டாம். இல்லத்துக் குரியவனைத் தேடுங்கள்; இல்லத்தைத் தேடவேண்டாம். அவனே சர்வ வஸ்துகளுக்கும் முற்பட்டவன். அவனே சர்வத்தையும் தோற்று வித்தவன்; சர்வ வஸ்துக்களுக்குப் பின்னும் இருப்பவன் அவனே.

மரணத்தைப் பற்றிய எண்ணம், கஷ்டத்தில் பொறுமை, எந் நிலையிலும் அல்லாஹ்வின்மீது நம்பிக்கை ஆகியவற்றை அத்யாவசிய

மாகக் கொள்ளுங்கள். இம்மூன்று லட்சணங்களும் சம்பூர்ணமாகி விட்டால் ஆட்சியையும் அதிகாரத்தையும் அடையலாம். மரண நினைவு கொண்டு உங்களின் அடக்கம் சீர் பெற்றுவிடும்; பொறுமை கொண்டு அவனிடமிருந்து அடைய விரும்புபவைகளை அடைந்துவிடுவீர்கள்; அவன் மீதுள்ள நம்பிக்கை வலிமையடையும்போது, அவனல்லாத சகலவற்றின் நினைவும் உங்கள் மனத்திலிருந்து தூரமாகிவிடும். இறைவனுடன் மட்டும் உங்கள் சம்பந்தம் நிலைபெற்றதாகிவிடும் அவனல் லாத சகலமும், இம்மையும், மறுமையும் உங்கள் முன் அலட்சிய மானவையாகிவிடும். எத்திக்கிலிருந்தும் இன்பமே வந்தணையும். எல்லா வற்றிலிருந்தும் பாதுகாப்புக் கிட்டும். உங்கள் எஜமானனே மறைமுகமாய் உங்களைப் பாதுகாத்துவருவான். சிருஷ்டி எதுவும் உங்களைத் தாக்குவதற்கு வழியிருக்கமுடியாது. உங்கள் முன் சகல நாவுகளும் கதவுகளும் அடைபட்டுப்போகும். திருமறையில் ஷைத்தானை நோக்கி "நிச்சயமாய் என் அடியார்களின்மீது உன் அதிகாரம் செல்லாது" என இறைவன் குறிப்பிட்டிருக்கும் அடியார்களில் சேர்ந்தவர்களாகி விடுவீர்கள். ஏகத்துவமயமாகிவிட்டவர்கள், கலப்பற்ற நிர்ணயம் அடைந்துவிட்டவர்கள், தம்முடைய வணக்கங்களைச் சிருஷ்டிகளுக்கு பகட்டாகக் காட்டாதவர்கள் ஆகியவர்களின்மீது ஷைத்தானுடைய அதிகாரம் செல்லுவதெப்படி?

அன்பர்களே, பேச்சும் வாக்கும் சம்பூரணமானவையாகவே இருக்க வேண்டும். ஆரம்பத்திலன்று; ஆரம்ப நிலைகையில் மௌனமே ஏகபோக மாய் வேண்டற்பாலது, உச்சநிலைமையிலேயே எல்லாம் பேச்சாகவும் விளக்கமாகவும் இருக்கவேண்டும்.

உண்மையாளர்களின் ஆட்சி அவர்களின் இதயத்தில் இருத்தல் வேண்டும்; அவர்களின் அதிகாரம் மெய்யகத்தில் இருத்தல் வேண்டும். வெளிப்படையை நம்புவதற்கில்லை. வெளிப்படையான அதிகாரமும் மறைமுகமான மெய்யதிகாரமும் ஒன்றாய்க் காணுவதற்குக் கிடைப்பதரிதாகும். எனவே என்றும் பரிபூரணம் பெற்று உங்களின் இதயம் உங்கள் இறைவன் அளவில் சேரும்வரை உங்கள் நிலைகளை மறைத்து வைப்பவர்களாய் இருந்து வாருங்கள்! ஆம், பரிபூரணமும்

மெய் அடைதலும் ஏற்பட்டபின், வெளிப்படையாவதில் குறையில்லை. உங்கள் நிலைமை நிரூபிக்கப்பட்டதாகவும், நீங்கள் அடையவேண்டிய பதவிகளை அடைந்தவர்களாகவும் உங்களின் பாதுகாவலுக் குரியவர்கள் உங்களைச் சூழ்ந்துவிடுபவர்களாகவும் ஆகி, சிருஷ்டிகள் உங்கள்முன் தூண்கள் போன்று அதிகாரமற்றவையாகி, அவனல்லாத இதரவற்றின் புகழும், இகழும், கவனமும், கவனமின்மையும் ஒன்றாகவே ஆனபின், நிலைகள் வெளிப்படையாவதில் என்ன குறையிருக்கமுடியும்? ஏனெனில், அந்நிலையில் நீங்களே சிருஷ்டிகளை ஆக்கக்கூடியவர் களாகவும் சிருஷ்டிகளின் மீது இறைவனின் அனுமதி கொண்டு அதிகாரம் செலுத்து பவர்களாகவும் ஆடுவிடுவீர்கள். அந்நிலையில் இறைவன் பிறர் மீது பதவிகளைச் சுமத்தவும் அவர்களிடமிருந்து பிடுங்கவுமான உரிமையை உங்களுக்கு அளித்தருளுவான். உங்கள் இதயத்தில் ஞானோதயத் தையும் உங்களின் மெய்யகத்தில் அறிவுப் பாகுபாட்டையும் தோற்று வித்தருளுவான். இந்நிலையில் சீர்பெறும் வரை ஞான விளக்கம் செய்ய முற்படாதீர்கள்.

எனவே, அறிவாளிகளாகுங்கள்! இச்சைகளுக்கிரையாகாதீர்கள்! நீங்கள் குருடர்களாயிருப்பதால் உங்களைக் கூட்டி அழைத்துச் செல்லக் கூடியதை தேடுங்கள்! நீங்கள் அறிவீனர்களாய் இருப்பதால் உங்களுக்கு அறிவு தரக்கூடியதைத் தேடுங்கள்! அது கிடைத்ததும் அதைப் பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள்! அதன் (வேதத்தின்) சொல்லையும் கருத்தையும் நம்புங்கள். அதிலிருந்து வழி தேடுங்கள். வழி தெரிந்ததும், அவ்வழி நன்கு தெரிவதற்காக வழி தெரியாதவர்கள் உங்களிடம் வருவார்கள். ஏழைகளும் துறவிகளும் உங்களை நாடுவார்கள்.

தெய்வீக மர்மங்களைப் பாதுகாப்பதும் மானிடருடன் சீரிய குணத்துடன் பழகுவதும் மானுஷீகச் சிறப்பில் சேர்ந்த லட்சணங் களாகும். அல்லாஹ் அல்லாதவற்றையும் விட்டொழித்து அல்லாஹ்வை யும் அவனது பொருத்தத்தையுமே தேடும் நிலையினின்று நீங்கள் எவ்வளவோ தூரத்தில் இருந்து வருகிறீர்கள். "உங்களில் இம்மையை நாடுபவர்களும் உண்டு" எனவும், மற்றோர் இடத்தில் "அவர்கள் அவன்

முகத்தையே நாடுகின்றனர்" என்றும் (திருக்குர்ஆனில்) உள்ள தெய்வ வசனங்களை நீங்கள் செவியுற்றதில்லையா? உங்களின் பாக்கியம் சரியாய் இருப்பின், அவன் அருளே வந்து அவனல்லாத சகலவற்றி லிருந்தும் உங்களுக்கு விமோசனமளித்துச் சங்கையும் மகிமையும் பொருந்திய மெய்யின் தலைவாயிலுக்கு உங்களைக் கொண்டு செல்லும். "அங்கு அதிகாரம் மெய்யாகிய அல்லாஹ்வுக்கே" (திருக்குர்ஆன்). இது பூர்த்தியாகிவிடின் இம்மையும் மறுமையும் உங்கள் தொண்டர் களாக்கித் தட்டுத் தடையின்றி உங்கள் முன்வந்து ஆஜராகிவிடும்.

அல்லாஹ்வின் கதவைத் தட்டுபவர்களாகவும் அங்கேயே தரிபட்டிருப்பவர்களாகவும் இருங்கள்! அப்போதுதான் உதிப்பு என்பதன் உண்மை இயல்பு உங்களுக்குத் தெளிவாக்கியருளப்படும். அப்போது தான் தன்னிலிருந்தே உதயமாகும். உதிப்பு, இப்லீஸின் உதிப்பு, அமரர் களின் உதிப்பு ஆகியவற்றின் பாகுபாட்டை உணர்வீர்கள். இது மெய்யான உதிப்பு, இது பொய்யான உதிப்பு என்று நீங்கள் எச்சரிக்கப் பெறுவீர்கள். பின் ஒவ்வொரு உதிப்பின் இயல்பையும் அதன் அடையாளங்களைக் கொண்டு அறிவீர்கள். இவ்வாறு பாகுபாடு தெளிவு பெறும் நிலைமை அடைந்ததும், உங்களுக்குத் தெய்வீக உதிப்பு (இல்ஹாம்) வர ஆரம்பிக்கும்; வந்து ஒழுக்கத்தை கற்பிக்கும்; சாதனையைத் தோற்றுவிக்கும்; உங்களின் ஒவ்வொரு செய்கைக்கும்–உட்காருதல், எழுந்திருத்தல் தொட்டுச் சகல அசைவுக்கும்–அமைதிக்கும் தூண்டு கோலாக இருக்கும்; ஏவல் விலக்கல் செய்யும்.

சமூகத்தவர்களே, அதிகத்தையும் தேடாதீர்கள்; குறைவையும் தேடாதீர்கள். முன் செல்லவும் நினைக்காதீர்கள்; பின்னேறவும் நினைக் காதீர்கள். ஏனெனில், உங்களுள் ஒவ்வொருவரின் தக்தீரும் (விதி வசமும்) வெவ்வேறாக சூழ்ந்து நிற்கிறது. தலையெழுத்து நிர்ணய மாகாதவர்கள் உங்களில் எவருமில்லை. ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அருளியிருப்பதாவது; "அல்லாஹ் சிருஷ்டி, இரணம், ஆயுள் ஆகியவற்றை முடித்து ஒய்வெடுத்துக் கொண்டான்; எது எது நிகழ வேண்டுமோ அது அதை எழுதிய எழுதுகோல் காய்ந்தும் போய்விட்டது." சுருங்கச் சொன்னால், ஒவ்வொன்றின் தலையெழுத்தையும் எழுதி முடித்துக்

கொண்டான். அவன் உண்டாக்கிய விதியும் நிர்ணயமும் முன்னதாகவே உள்ளன, எனினும், உத்தரவு ஏற்பட்டு, ஏவல் விலக்கல், குற்றம் சாட்டல் ஆகியவை தக்தீரை மறைத்துக் கொண்டன. (விதிவசம் நிர்ணயமாகியிருப்பினும் எவருக்கும் அறிந்து கொள்வதற்கில்லாத தாயிற்று). ஆகையால், எழுதப்பட்ட விதியைச் சாக்காகப் பிடித்துக் கொண்டு குதர்க்கம் பேசுவது முறையன்று. அப்படிக் குதர்க்கம் செய்வதற்குப் பதிலாக "அவன் செய்வன பற்றி எவரும் அவனைக் கேட்கப்போவதில்லை; அவர்களே (மனிதர்களே தம் செய்கை பற்றி) கேட்கப்படுவார்கள்" (திருகுர்ஆன்) என்பதை உணர வேண்டும்.

சமூகத்தவர்களே, வெளிப்படையான ஷரீஅத்துச் சட்டத்தையும் எழுதப்பட்டுள்ள உத்தரவுகளை (திருகுர்ஆனை)யும் பின்பற்றி ஒழுகுங்கள்! ஏனெனில், அது கொண்டே மறைமுகமான மெய்களைப் பின்பற்றி – ஒழுகும் நிலைக்குப் போய்ச் சேர முடியும். வெளிப்படைக் கிணங்கிய அனுஷ்டானம் செவ்வையானதும் மறைமுகமான மெய்யை அறியும் நிலைமையை அடைந்துவிடுவீர்கள். இவ்வாறு மெய்யுணர்ச்சி ஏற்பட்டதும் அவ்வுணர்ச்சி உங்கள் இதய வாயிலாக உதிப்பாகி நாவில் எழுந்து சிருஷ்டிகளின் நன்மையை முன்னிட்டதாகவே இருக்கும்.

நீங்கள் அல்லாஹ்வுக்கு இசைந்தவர்களாகி அவனையே அன்பனாகக் கொண்டவர்களாய் இருப்பின் சகல பாக்கியங்களும் உங்களுக்குண்டு. அப்படியின்றி அல்லாஹ்வின் அன்பர்களென்று வாயளவில் கூறிக்கொள்பவர்களின் நிலைமை தூர்ப்பாக்கியமானதாகும். அல்லாஹ்வின் அன்புக்கும் அடையாளங்கள் இருக்கின்றன வென்பது உங்களுக்குத் தெரியாதா? அவ்வடையாளங்களுள் மற்றவர்களுடன் சம்பந்தமிருப்பின் இறைவனுடைய பொருத்தம் பெற்றதாய் இருப்பதுவும் ஒன்றாகும். அவனல்லாத எதிலும் சாந்தியைக் காணாது, அவனைக் கொண்டே சாந்தி அடைந்திருப்பதும் ஒன்றாகும். அவன் மீதுள்ள அன்பின் மிகைப்பால் அவனை மறக்கச் செய்யக்கூடிய சகலவஸ்துக்களின்மீதும் வெறுப்பு ஏற்பட்டுவிடும். எனவே, உங்களின் பொய்க் கூற்றுக்களினின்றும் (தவ்பா) மீட்சி பெறுங்கள்; இப்பெரும் பேறு பகட்டாகச் செய்யப்படும் (கல்வத்) ஏகாந்தம், அபிலாஷை அபிநயம் ஆகியவற்றினால் ஏற்படுவதன்று.

ஆகவே, தவ்பா (மீட்சி) பெற நாடுங்கள்! அந்நாட்டத்தில் தரிபடுங்கள்! தவ்பாச் செய்வதில் மட்டும் மகிமையில்லை. தவ்பாச் செய்த நிலையில், தீமையைத் தவிர்த்த நிலையில் தரிப்பட்டிருப்பதிலேயே பெருமை இருக்கிறது. விதையிடுவதில் மட்டும் மகிமையில்லை; விதை தரிப்பட்டு விருக்ஷமாகி கிளைகளும் கனிகளும் உண்டாவதிலேயே மகிமை இருக்கிறது.

துயரம், கஷ்டம், பிணி, வியாதி ஏற்படினும் சரி, சுகமும் நன்மையும் ஏற்படினும் சரி, எந்நிலைமையிலும் தம்மை ஆண்டவன்பால் ஒப்புவித்துவிடுவதைத் தவிர்த்து வேறு மருந்தை நான் காணவில்லை. ஒரு காரியம் உங்கள் விதியில் நிர்ணயிக்கப்பட்டிருப்பின், அதுகண்டு வெகுண்டு விடாதீர்கள்; அது பற்றி இறைவனுடன் மோத நினைக்கவும் வேண்டாம். பிறரிடம் அவை பற்றி முறையிடவும் வேண்டாம். ஏனெனில், அதனால் உங்கள் பிணி அதிகரிக்குமேயன்றிக் குறையாது. அதற்குப் பகரமாக அமைதியும் அடக்கமும் மௌனமும் அடையுங்கள்! அவன் உங்களுடன்–நீங்கள் சம்பந்தப்பட்டவரை–என்ன செய்கிறானென்று பொறுத்துப் பாருங்கள். அவன் நாட்டப்படி நிகழும் மாறுதல்களைப்பற்றி மகிழ்ச்சியே அடையுங்கள். இவ்விதம் நீங்கள் சாதனை புரிந்தால், அவன் அவசியம் வெறுப்பை விருப்பாகவும், துயரத்தை இன்பமாகவும் மாற்றி அருளுவான். யாஅல்லாஹ், உனது முன்னிலையில்–உன்னுடன் இருப்பவர்களாக எங்களை ஆக்கியருள்வாயாக! இம்மையிலும், மறுமையிலும் நன்மையைத் தந்து, நரகத்தின் வேதனையினின்று எங்களை ரட்சித்தருள்வாயாக!

ஐந்தாவது பிரசங்கம்

ஹிஜ்ரி 535, ஷவ்வால் பிறை 12 மாலை நேரம் மதரஸா மஃமூராவில் ஹஜ்ரத் அவர்கள் நிகழ்த்தியது:

அன்பர்களே, மெய்ப்பொருளாகிய இறைவனுக்கு அடிபணிவது என்பது எங்குச் சென்றுவிட்டது? உண்மையிலேயே அடிபணிந்து வரும் அடியார்களாவதைக் கொண்டு உங்களின் சகல காரியங்களிலும் பூரணமானவர்களாகுங்கள். எஜமானனிடமிருந்து ஓடி வந்திருக்கும்

அடியார்களாயுள்ளீர்கள். மீண்டும் அவனளவில் செல்வீர்களாக! அவன் முன் பணிவீர்களாக! அவன் நாட்டம், விதிப்படி நடப்பவற்றில் பொறுமையையும், திருப்தியையும் கைக்கொண்டு ஒழுக்கத்துடன் இருப்பீர்களாக! இவ்வாறு உங்கள் கடனை நீங்கள் பூர்த்தி செய்தால், "அடியான்" என்ற முறையில் எஜமான் பாலுள்ள கடமையும் பூர்த்தியாகும்; அவன் புறத்திலிருந்து பூர்த்தியும் சம்பூர்ணமும் வந்து சேரும். "அல்லாஹ் தன் அடியானுக்குப் போதியவனன்றோ?" என்று அல்லாஹ் திருகுர்ஆனில் அருளியுள்ளான். அடிமையென்ற முறையில் உங்கள் கடமைகள் சீர்பெறும்போது அவன் உங்களை நேசிப்பான்; அவன் அன்பு உங்கள் உள்ளத்தில் வலுக்குமாறு செய்தருள்வான். தன் அன்பனாக்கி, பிறரைத் தேடாது தன் சமீபத்துக்குரியவனாக்கிவிடுவான். அந்நிலை மையில் நீங்கள் எச்சந்தர்ப்பமாயினும் மனத் திருப்தி பெற்றவர் களாகிவிடுவீர்கள். அகன்ற இப் பிரபஞ்ச வாழ்வை உங்களுக்கு அவன் குறுக்கினாலும், வாயில்கள் விசாலமானவையாய் இருப்பினும் அவற்றில் நுழைய முடியாதபடி உங்களுக்கு அவை அடைபட்டு விடினும், நீங்கள் பிறரின் வாயில்களின் பக்கம் செல்லமாட்டீர்கள்; பிறரிடமிருந்து ஒன்றைப் பெற நாடவுமாட்டீர்கள், மூஸா நபி (அலை) அவர்களைப் பற்றித் திரு குர்ஆனில் கூறப்பட்டபடி–"முன்னரே பிறர் பாலை அருந்துவதை அவர் மீது ஹராமாக்கி யிருந்தோம்" எனக் கூறப்பட்டுள்ளபடி இறைவனல்லாத பிற வஸ்துக்களினின்று எதுவும் அடையாதவர்களாகிவிடுவீர்கள்.

நமது இறைவனோ சகலவஸ்துக்களின் மீதும் சாட்சியாய் இருக் கிறான். எங்கும் இருக்கிறான். சர்வ வஸ்துக்களையும் கண்காணிப் பவனாயும் இருக்கிறான். எல்லா வஸ்துக்களின் சமீபத்திலும் இருக் கிறான். அத்தகைய ரப்பைவிட்டு நீங்கள் தேவையற்றவர்களாய் இருக்க முடியுமா? அப்படியிருக்கையில் (மனத்தால்) அறிந்தபின் (செய்கையில்) அவனை மறப்பதெப்படி? அல்லாஹ்வை அறிந்த பிறகும் அவனுக்கு எதிரிடை செய்யும் உங்களின் நிலைமை கைசேதத்துக் குரியதேயாகும். அவனிடமிருந்து திரும்பாதீர்கள்; ஏனெனில், அதுகொண்டு சர்வ நன்மையையும் இழந்தவர்களாவீர்கள். அவனுடன் பொறுமையுடன் இருங்கள்; அவனைவிட்டுப் பொறுமையில்லாதவர்களாய் இருக்க

வேண்டாம். எவர்கள் 'ஸாபிக்'களாக (பொறுமையாளர்களாக) இருக்கி றார்களோ அவர்களே "காதிர்'கள் (சக்தியுள்ளவர்கள்) ஆவார்க ளென்பது உங்களுக்குத் தெரியாதா? அல்லாஹுத் தஆலா கூறுகிறான். "ஈமான் உள்ளவர்களே, பொறுமையுடனிருங்கள்! பொறுமையாளர் களாகுங்கள்! உறுதியாக நில்லுங்கள்! அல்லாஹ்பால் பயபக்தியுட னிருங்கள்" என்று ஏன்? சித்தி பெறுவதற்காக. பொறுமை யைப் பற்றித் திருக் குர்ஆனில் பல அழகிய வாக்கியங்கள் இருக்கின்றன. அவைகளெல்லாம் பொறுமையில் எத்தகைய நன்மைகள், பேறுகள், இம்மை மறுமையின் இன்பங்கள் இருக்கின்றனவென்பதை நன்கு எடுத்துக் காட்டுகின்றன. ஆகையால், பொறுமையைப்பற்றிக் கொண்டால், மார்க்கத்தினதும் உலகத்தினதும் நன்மைகளை அடைவீர்கள்.

சமாதிகளைத் தரிசனம் (ஜியாரத்) செய்யுமாறும், நல்லோர்களின் சகவாசம் பெறுமாறும், நன்மையான கருமங்களில் ஈடுபடுமாறும் உங்களுக்குப் போதிக்கிறேன். அதன் மூலம் உங்களுடைய சர்வ காரியமும் சீர்பெறும். போதனை செய்யப்படுவதை நம்பாமல் கெட்டவர்கள் போலும் ஆகிவிடாதீர்கள். உங்களுடைய (தீன்) மார்க்கச் சீர் தவறிப்போவது நான்கு காரணங்களாலேயாகும். முதலாவது, நீங்கள் அறந்திருப்பதை அனுஷ்டிக்காமலிருப்பது. இரண்டாவது நீங்கள் அறியாதிருப்பனவற்றின் அனுஷ்டானத்தில் ஈடுபடுவது, மூன்றாவது, அறியாததை அறிய முயற்சிக்காது அறிவீனர்களா யிருப்பது, நான்காவது, மற்றவர் அறியாததை அறிய முற்படுவதைத் தடுப்பது.

சமூகத்தவர்களே, நீங்கள் பிரசங்கங்கள் கேட்கச் செல்லும்போது காதுக்கினிமை தேடிச்செல்பவர்களாகிவிட்டீர்கள்; உங்கள் குறை களைத் திருத்த வழியைத் தேடுபவர்களாகச் செல்வதைக் காணோம். பிரசங்கங்களிலுள்ள போதனைகளைக் கடைப்பிடிப்பதற்குப் பதிலாக அதில் ஏதேனும் குறையிருக்கிறதா என்று பார்க்க ஆரம்பித்துவிட்டீர்கள். பிரசங்கங்களின் பேச்சைப்பற்றி புரளி பண்ணவும், சிரிக்கவும், கேலி செய்யவும் ஆரம்பித்துவிட்டீர்கள். அல்லாஹ்வின் பால் நீங்கள் செய்யும்

காரியங்கள் உங்களுடைய உள்ளத்தை 'ஆபத்து'க்களின் வழியே இழுத்துச் செல்வனவாகிவிட்டன. (தவ்பா) மீட்சி பெற்றவர்களாய், சத்தியத்தின் பகைவர்கள் போலாகாது கேட்பது கொண்டு பயனடைய முயலுங்கள்.

அன்பர்களே, பழக்கங்களுக்குக் கட்டுப்பட்டுக் கிடக்கிறீர்கள். விதித்திருப்பவற்றை அவன் புறத்திலிருந்து கேட்பதும், காரணப் பொருளைக் கொண்டு மட்டும் நின்று விடுவதும் உங்களைக் கட்டுப் படுத்தியிருக்கின்றன. காரணப் பொருட்களைச் சிருஷ்டித்த மெய்ப் பொருளையும் அவன்பால் இருக்க வேண்டிய (தவக்கல்) நம்பிக்கை யையும் இழந்து கிடக்கிறீர்கள்.

தாமதமின்றி அனுஷ்டானத்துக்குத் திரும்புங்கள்; அனுஷ்டானத் தில் களங்கமற்ற நிர்ணயத்துடன் ஈடுபடுங்கள். ஆண்டவனருளி யிருக்கிறான், "(எனக்கு) அடிபணிந்து சேவை செய்வதற்காகவேயன்றி நான் ஜின்னையும் மனுவையும் சிருஷ்டிக்கவில்லை" என்று. சிருஷ்டிக்கப் பட்டது விளையாட்டுக்காகவன்று; உண்ணவும், அருந்தவும், உறங்கவும், மணமுடிக்கவும் மட்டுமே சிருஷ்டிக்கப்பட்டதில்லை. மறதியில் மயங்கிக் கிடப்பவர்களே, விழியுங்கள்! உங்கள் இதயம் அவன்பால் ஒரடி எடுத்து வைத்தால் அவன் உங்கள் பக்கம் எத்தனையோ அடிகள் நெருங்கு பவனாய் இருக்கிறான். அடியானைக் கொண்டு ஒரு காரியம் செய்விக்க நாடினால் அதற்குரிய சாதனங்களையும் திரட்டிக் கொடுத்து விடுகிறான். இவ்விஷயமெல்லாம் உட்கருத்துக்களைப் பொருத்ததே யன்றி, வெளித் தோற்றத்தைப் பொருத்ததன்று. இவ்விஷயம் அடியார் களிடம் ஏற்பட்டு விடில் இம்மை,மறுமை, மற்றும் அல்லாஹ் அல்லாத சகலத்தையும்விட்டுத் தேவையற்றவர்களாகிவிடுகிறார்கள். அப்போது தான் அவர்களுக்கு ஆரோக்கியம் வரும்; (தெய்வ) சமீபத்துவமும் வரும்; அதிகாரமும் ஆட்சியும் பரிபலானமும் வரும். அப்போதுதான் அவர்கள் முயற்சி சிறிதேனும், பயன் மிகமிகப் பெரியதாகவும், துளி போன்றது சமுத்திரமாகவும், சந்திரனைப் போன்ற காரியம் சூரியனைப் போன்றதாகவும், சொற்ப அனுஷ்டானம் பெரியதாகவும், அவர்கள் இல்லாதிருப்பதே இருப்பதாகவும், அவர்கள் அழிந்திருப்பதே நித்ய

வாழ்வாகவும், அவர் களின் அசைவே காரிய சித்தியாகவும் ஆகிவிடும். அவர்களுடைய விருட்சம் உயர்ந்து அர்ஷு (தெய்வ சிம்மாசனம்) அளவு வானமளாவிவிடுகிறது; அந்த விருட்சத்தின்வேர் பாதாளம்வரை பாய்கிறது. அதன் கிளைகள் இம்மையிலும் மறுமையிலும் படர்ந்து நிழல் கொடுக்கின்றன. அதிகாரமும் அறிவுமே அக்கிளைகளாகும். உலகம் அவர்கள் முன் மோதிரத்தைப்போல் சொற்பமான விஷயமாகி விடுகிறது. உலகம் அவர்களை அடிமைப்படுத்தவும் முடியாது. மறுமையிலும் அவர்கள் கட்டுப்படாதவர்களாகி விடுவார்கள். எவ்வரசனும் சரி, அவனது வேலையாளும் சரி, அவர்களுக்கரசனாகவோ எஜமானாகவோ ஆக முடியாது. எக்காவலாளும் அவர்களைத் தடுக்கமுடியாது. எவரும் அவர்களைப் பிடிக்கவும் முடியாது. எத்தீங்கும் அவர்களைப் பாதிக்கவும் முடியாது. இத்தகைய நிலையை அடைந்த பின்னரே அடியார்கள் சிருஷ்டிகளுடனிருந்து அவர்கள் கரங்களைப் பிடித்துக் கரைசேர்த்து நல்லோர்களாக்கக் கூடியவர்களாகிறார்கள். அத்தகைய அடியார் களைக் கொண்டு நன்மையை யுண்டாக்க அல்லாஹ் நாடும்போது அத்தகைய அடியார்களை சிருஷ்டிகளின் வழிகாட்டிகளாகவும், அவர்களின் வைத்தியர்களாகவும், அவர்களின் ஞான போதகர் களாகவும், அவர்களின்பால் (இறைவனது நாட்டத்தை) மொழிபெயர்ப் பவர்களாகவும், மக்களை நீந்தச் செய்பவர்களாகவும், அவர்களுடைய சர்வ காரியங்களையும் சீர்பெறச் செய்பவர்களாகவும், அவர்களின் தீபங்களாகவும், அவர்களுக்கிடையே சூரியர்களாகவும் ஆக்கி விடுகிறான். இத்தகைய நல்லடியார்களை அவன் நாடினால் இவ்விதம் ஆக்கி அருளிச் செய்கிறான்; இன்றேல் அவர்களைத் தன்னளவில் மறைத்து வைக்கிறான்; தன்னைத்தவிர மற்றவர் கண்ணுக்குப் புலப்படாதிருக்கச் செய்துவிடுகிறான். (நல்லடியார்கள் பலர் பகிரங்கமாகாதிருப்பதன் அகமியம் இதுதான்.)

இவ்வாறு அடியார்களில் பொறுக்கி எடுக்கப்படும் சிலரையே பூரணப் பாதுகாப்பும் பூர்த்தியான நிம்மதியும் அளித்துச் சிருஷ்டிகளிடம் அனுப்பி வைக்கிறான்; வழிகாட்டவும் மக்களைச் சீர்திருத்தவும் அவர்களுக்குச் சந்தர்ப்பமும் வசதியும் அளிக்கிறான்.

இம்மையைத் துறந்தவர்களின் சோதனை மறுமையைக் கொண்டு ஏற்படுகிறது; இம்மை மறுமை இரண்டையும் துறந்தவர்களின் சோதனை இறைவனின் பக்கத்திலிருந்து ஏற்படுவதாய் இருக்கிறது.

உங்களின் மறதியை என்னென்பேன்! மரணம் உங்களை அடுக்காதென்றும், கியாம நாளில் எழுப்பப்பட மாட்டீர்களென்றும், ஸிராத் என்ற பாலத்தைக் கடக்க நேரிடாதென்றுமா நினைத்துக் கொண்டு திரிகிறீர்கள்? உங்கள் நிலைமைதானென்ன? இந்நிலைமையில் நீங்கள் இஸ்லாம் உள்ளவர்களென்றும் ஈமான் உள்ளவர்களென்றும் பறை சாற்றிக் கொண்டுமிருக்கிறீர்கள்! திருக்குர்ஆனும் அறிவும் அவற்றின்படி ஒழுகாவிடில் உங்களுக்கெதிரிடையான சாட்சிகளாக நிற்குமன்றோ? அறிஞர்களின் அருகில் வந்து அவர்கள் போதித்தபடி ஒழுகாதிருப்பது, அல்லாஹ்வின் ரஸூல் (ஸல்) அவர்களிடம் சென்று அவர்கள் உபதேசித்தபடி ஒழுகாதிருப்பது போன்ற அத்துணை பெரும்பாவமாகுமென்பதை உணருங்கள்.

கியாமநாளன்றோ, சிருஷ்டிகள் அனைத்தும் பீதியடையுமாறு மெய்ப் பொருளாகிய அல்லாஹ்வின் சத்திய மயமும் சுடர்மயமும் பெருமையும் பிரகாசித்துக் கொண்டிருக்கும். உலகத்தின் அரசர்கள் தொலைவார்கள். ஏக நாயனாகிய அவன் ஒருவனின் அரசே நிலைத்து நிற்கும். சகலரும் அவன் பக்கமே மீண்டும் செல்வார்கள். அல்லாஹ்வின் அடியார்களின் அதிகாரமும் பதவியும் வெளியாகிவிடும்; அவர்கள் அடைந்துள்ள நன்மையும் செல்வமும் தெய்வ அங்கீகாரமும் அன்றே நன்கு புலனாகும். அன்று மட்டுமன்று; இன்றும் அல்லாஹ்வின் அன்பர்களே உலகப் பிரஜைகளினதும் உலகத்தினதும் காரியஸ்தர்களாகவும், உலகத்தை நிலைபெறச் செய்பவர்களாகவும் இருக்கிறார்கள். அவர்களை முன்னிட்டே உலகமும் நிலைபெற்று நிற்கிறது. அவர்கள் தம் தோற்றத்தால் சிருஷ்டிகளை ஆளுபவர்களாயும் மெய்ப்பொருளின் பிரதிநிதிகளாயும் இருப்பதில்லை; அகமியத்திலேயே அவ்வித மிருக்கின்றனர். இன்று அகமியப் பொருளாய் இருப்பது; நாளை (இறுதி நாளன்று) தோற்றத்திலுந்தெரியும் பகிரங்கப் பொருளாகிவிடும்.

மனோதீரத்தில் மூன்று படித்தரங்களுண்டென்பதையும் நீங்கள் அறிய வேண்டும். காபிர்களுடன் போர் புரிபவர்களுடைய மனோதீரம், அவர்களுடன் மோதுவதிலும் போரில் ஸ்திரமாக நிற்பதிலுமே இருக்கிறது. நேர்மையாளர் (ஸாலிஹீன்)களின் மனோதீரம் தங்களுடைய நப்ஸுடனும், இச்சைகளுடனும், பாசங்களுடனும், ஷைத்தான்களுடனும், மனித ஷைத்தான்களான தீயோர்களுடனும் மோதி, அம்மோதலில் ஸ்திரமாக நின்று எதிர்ப்பதிலேயே இருக்கிறது. விசேஷ நல்லடியார்களின் மனோ தீரம் இம்மையையும், மறுமையையும், அவனல்லாத சகலவற்றையும் துறந்தவர்களாய் இருப்பதிலேயே இருக்கிறது.

அன்பர்களே, உங்களைப் பிடித்து உலுக்கி எழுப்பப்படுமுன், நீங்களாகவே விழியுங்கள்! மார்க்க பக்தர்களாகி மார்க்க பக்தர்களுடைய சகவாசத்தைத் தேடுங்கள்! ஏனெனில் உண்மையில் மனிதன் என்ற பெயருக்குரியவன் மார்க்க பக்தனேயாவான். அறிவாளிகளுள் சிரேஷ்டன் அல்லாஹ்வுக்கு அடிபணிந்தவன் ஆவான்; அஞ்ஞானிகளில் தலைசிறந்தவன் அல்லாஹ்வுக்கு முரண் செய்பவன் ஆவான். "உங்களுடைய கரங்கள் மண்ணுக்குரியவையாகட்டும்" என ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அருளியுள்ளார்கள். மண்ணுக்குரிய நிலைமை என்ற அரபிப் பதத் தொடருக்கு உலகப் பொருள்களின் தேவை அற்றுப்போகும் நிலை என்பது அர்த்தமாகும். நீங்கள் மார்க்க பக்தர்களைச் சந்தித்து அவர்களை உகப்பீர்களாயின் உங்கள் கரங்கள் தேவையற்றவைகளாகிவிடும்; உங்கள் உள்ளங்கள் உள்ளொன்று வைத்துப் புறமொன்றாய் இருப்பதை விட்டும்' அவ்வாறிருப்பவர்களை விட்டும் விலகிவிடும். உள்ளொன்று புறமொன்றாய் இருந்து, பகட்டுக்காக வணக்கங்களில் ஈடுபடுபவனது வணக்கம் ஒப்புக்கொள்ளப்பட மாட்டாது.

அல்லாஹ் ஒருவனை முன்னிட்டுச் செய்யப்படும் வணக்கம் மட்டுமே அங்கீகரிக்கப்படுவதாகும். உங்களுடைய வணக்கத்தின் வெளித் தோற்றமன்று, அதனுள் பொதிந்து கிடக்கும் அகமியமே வரவேற்கப்படுவதாகும். உங்களுடைய வணக்கம் அகங்காரத்துக்கும், ஆசாபாசங்களுக்கும் ஷைத்தானுக்கும், உலகத்துக்கும் எதிரிடையாய் இருந்தால், அதுவே அங்கீகரிக்கப்படுவது.

எனவே, வணக்கங்களில் ஈடுபடுங்கள்; கலப்பற்ற நிர்ணயத்தை நிலைநாட்டுங்கள்! உங்களுடைய வணக்கத்தைக்கூட உற்று நோக்குங்கள், அவன் ஒருவனை முன்னிட்டுச் செய்யப்படும் வணக்கம் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படுமென்று உணருங்கள். சிருஷ்டியான பொருளை முன்னிட்ட வணக்கம் ஏற்கப்படாததாகும்.

கைசேதமே! சிருஷ்டிப்பொருட்களை முன்னிட்டு வணங்குகிறீர்கள். பிறகு, சிருஷ்டித்தவன் அங்கீகாரமும் வேண்டுமென விரும்புகிறீர்கள். இது வீண் ஆசையாகும். குதூகலத்தையும் தற்பெருமையையும் விட்டொழியுங்கள், குதூகலத்தைக் குறைத்துக் கவலையை அதிகரியுங்கள். ஏனெனில், கவலையின் வீடும் சிறையுமாகிய உலகில் நீங்கள் இருந்துவருகிறீர்கள். நமது நபிகள் நாயகம் (ஸல்) அவர்களே கவலையில் ஆழ்ந்திருந்தார்கள்; குதூகலமென்பது அவர்களிடம் குறைவாகவே காணப்பட்டது. பெரும்பாலும் துயரத்துடனிருந்தார்கள்; வெகு சொற்பமாகவே சிரித்திருக்கிறார்கள். சிரித்தாலும் புன்சிரிப்பாகவே சிரிப்பார்கள். அதுவும் பிறரின் மனோ திடத்துக்காகவே. அவர்கள் உள்ளத்தில் எத்துனை கவலையும் யோசனையும் இருந்ததெனின், ஸஹாபாக்களுடைய உறவு பற்றியும் உலகம் பற்றியும் அவர்களுக்கு உத்தரவு இல்லாதிருந்தால் அவர்கள் வீட்டிலிருந்து வெளியேறியும் இருக்கமாட்டார்கள். பிறருக்கருகில் அமர்ந்தும் இருக்கமாட்டார்கள்.

அன்பர்களே, ஆண்டவனுடன் நீங்கள் ஏகாந்த நிலையடைவது சீர்பெற்றுவிட்டால், உங்களுடைய உள்ளம் சுத்தமானதாகிவிடும்; உங்களுடைய பார்வை படிப்பினைகளைப் புகட்டக் கூடியதாகிவிடும்; உங்களுடைய மனம் மெய்க்கவலை குடி கொண்டதாகிவிடும்; உங்களுடைய மறைமுக (பாத்தின்) ஆத்மா மெய்ப்பொருளின் சம்பந்தம் பெற்றதாகவும் ஆகிவிடும்.

இம்மைக் கவலை ஒரு வேதனையாகும்; மறுமைக்கவலையோ ஞானம் பெருக்கும் சாதனையாகும். உள்ளத்தின் உயிர்நிலையாகும். மறுமைக் கவலை அடையும் அடியானுக்கே இகபர சம்பந்தமான மெய்ஞ்ஞானம் அளிக்கப்படுகிறது.

உங்களுடைய நிலைமை கைசேதத்துக்கு உரியதே; ஏனெனில், உங்கள் உள்ளங்களை உலக விஷயமாய்ப் பாழ்படுத்துகிறீர்கள். உங்களுக்கு உலகப்பேறு எம்மட்டும் கிடைக்கவேண்டுமோ, அக்கணக்கை இறைவன் முன்னரே முடித்துவைத்துவிட்டானென்பதை மறந்து விடுகிறீர்கள்; அவன் உங்களுக்கென்று விதித்துள்ளவை கிடைப்பதற்குரிய கால நேரத்தையும் நிர்ணயித்து முடித்துவிட்டான். எனவே, உங்கள் மனம் கவலைக்காளாயினும் சரி, ஆகாவிடினும் சரி, உங்களுடைய தினசரி இரணம் கிடைத்தே தீரும். அதைவிட்டு உலக இரணத் தின்மீது பேராசை கொள்வதானது உங்களை இறைவன் சந்நிதானத்திலும் சிருஷ்டிகளின் முன்னிலையிலும் அவமானம் பெறச் செய்துவிடுகிறது. ஈமான் குறைவுற்றிருப்பதாலேயே இரணத்தைப்பற்றிய கவலையிலும் தேட்டத்திலும் ஆழ்ந்துவிடுகிறீர்கள்; ஈமான் வளர்ச்சி பெறும்போது கவலையில் அவ்வளவு அதிகம் ஆழ்ந்துவிடாது அமர்ந்திருப்பீர்கள், ஈமான் பரிபூரணம் பெற்றுவிடும் நிலைமையில் அத்தகைய கவலை என்பதே அறவே இல்லாது ஒழிந்துபோய்விடும்.

அன்பர்களே, உண்மையையும், பொய்யையும் கலந்துவிடாதீர்கள். சிருஷ்டிப் பொருள்களின் சம்பந்தமே உங்கள் உள்ளத்தில் நிறைந்துவிடும் போது, சிருஷ்டி கர்த்தனுடைய ஞாபகத்துடன் அவை சேருவதெப்படி? சாதனப் பொருட்களை மெய்ப்பொருளுக்குச் சமமாக–இணையாக–பாவிக்க ஆரம்பித்துவிடுகிறீர்கள் சாதனப்பொருட்கள் குடிகொள்ளும் உள்ளத்தில் மெய்ப்பொருள் இருப்பதெப்படி? பகுத்தறிவுக்கு ஏற்றதும் ஏற்காததும் ஓர் இடத்தில் இருக்க முடியுமா? அகமியமும் வெளிப்படையும் ஓர் இடத்தில் இருக்க முடியுமா? தெய்வ அருளும் சிருஷ்டிகளின்மீது நம்பிக்கையும் ஓர் இடத்தில் இருக்க முடியுமா? சாதனங்களை மட்டும் பற்றிப்பிடிக்கும் உங்களின் காரணங்களைத் தோற்றுவித்த கருணா கரனை மறந்து காரணங்களை மட்டும் நினைக்கும் உங்களின் அறியாமையை என்னென்பேன்!

அன்பர்களே, அஞ்ஞானிகளினதும் அறிவீனர்களினதும் சகவாசத்தில் இருந்து வருவதால் அவர்களின் அஞ்ஞானம் உங்களையும்

சூழ்ந்துள்ளது. ஈமானும், அனுபவார்த்தமடைந்த நம்பிக்கையையும் (யக்கீனும்) அனுஷ்டானப்பூர்வமுள்ள ஞானமும் பெற்ற பெரியார்களின் சகவாசத்தைத் தேடுங்கள்!முஸ்லிம்கள் என்றால் சர்வ நடத்தைகளிலும் செயல்களிலும் உயர்வும் ஸ்திரமும் பெற்றவர்களாக விளங்க வேண்டும்; தங்களுடைய ஆத்மார்த்த முயற்சிகளிலும், இச்சைகளை அடக்குவதிலும் தலைசிறந்து விளங்க வேண்டும். இதனாலேயே நபி கரீம் (ஸல்) அவர்கள், "ஈமான் உள்ளவனின் குதூகலம் அவனுடைய முகத்திலிருக்கும்; அவன் கவலை உள்ளத்திலிருக்கும்" என வர்ணித்துள்ளார்கள் இப்படிச் சிருஷ்டிகளின் முன்னார் குதூகலமாகக் காணப்படுவதும், தங்களின் கவலையை மறைத்து அதைத் தங்களுக்கும் தங்களின் இறைவனுக்கும் தெரிந்த விஷயமாய் ளைத்திருப்பதும் அவர்களின்நம்பிக்கையால் விளைந்த குணப் பலத்தினாலேயாம். இத்தகைய நல்லடியார்களின் கவலை நிரந்தரமானது; ஆத்ம விசாரணை அதிகமானது; சிரிப்பு சொற்பமானது. இதற்காகவே ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், "தங்களுடைய நாயனின் சந்திப்பிலேயன்றி வேறெதிலும் மூமினுக்குச் சந்தோஷமும் நிம்மதியும் இல்லை" என்றருளியுள்ளார்கள். மூமின் தன் கவலையைத் தன் முக மலர்ச்சி கொண்டு மறைத்து விடுவான்; அவன் வெளிரங்க வாழ்வு இரணத்துக்குரிய சம்பாத்திய முயற்சிகளில் ஈடுபட்டதாய் இருக்கும்; அவன் உள்ளமோ தனது இறைவனுடன் அமைதியும் அடக்கமும் பெற்றிருக்கும். அவன் வெளிரங்க வாழ்வு சுற்றத் தாருக்கும் சூழ்ந்திருப்பவர்களுக்குமாக நடத்தப்படின், அகமிய வாழ்வு இறைவனுக்காகவே நடத்தபடுவதாய் இருக்கும். அவனுடைய அகமியங்கள் மனைவிமக்கள் கூட அறியாத நிலைமையில் மறைமுகமாகவே இருந்துவரும். "உங்களுடைய காரியங்களை மறைமுகமாய் வைப்பது கொண்டு ஆக்கம் பெறுங்கள்!" என்று நபி பிரான் (ஸல்) அவர்கள் கூறியிருப்பதற்கு அவன் செவி சாய்த்தவனாவான். எனவே, தன் நிலையை மறைமுகமாக வைப்பதிலேயே கண்ணுங்கருத்துமாய் இருப்பான்; தன்மை மறந்து தன் அகமியம் வெளியாகிவிடினும், ஞாபகம் வந்ததும் எச்சரிக்கையுடன் மறைத்துக் கொள்ளவே முயலுவான்.

அன்பர்களே, என்னை உங்கள் முகம் பார்க்கும் கண்ணாடியாகப் பாவியுங்கள்; உங்களுடைய அகமும் அகமியமும் தெரிந்து கொள்ளக் கூடிய கண்ணாடியாகக் கொள்ளுங்கள்; உங்களுடைய முயற்சி களின் தன்மையை அறியக்கூடிய கண்ணாடியாகவும் கருதுங்கள். என்னைவிட்டுத் தூரமாயிருக்கும் நிலைமையில் உங்களிடமிருக்கும் குறைகள் தோன்றாதிருப்பதை, என் சமீபம் வருவதால் கண்டு கொள்வீர்கள். தீன் என்னும் நெறிநிலை உங்களுக்கு வேண்டுமாயின், என்னைப் பின்பற்றுங்கள்; நெறிநிலை விஷயத்தில் நான் தாட்சண்யம் காண்பிக்கக் கூடியவனன்று. அல்லாஹ்வுடைய சன்மார்க்க விஷயத்தில் நான் வெட்கப்படுபவனன்று. என்னுடைய பயிற்சியும் பரிபக்குவமும் இரும்புக் கரங்களினால் ஆக்கப்பட்டவையல்ல. வயிற்றுப் பிழைப்பைப் பெரிதாக எண்ணி, உள்ளொன்று வைத்துப் புறமொன்றானவர்களிடமிருந்து நான் பயிற்சி பெற்றவனன்று. உங்களுடைய உலகத்தை உங்களின் இல்லங்களிலேயே விட்டுவிட்டு, என்னிடம் வாருங்கள். நானோ மறுமையின் வாயிலில் நிற்பவன்; என்னுடைய சகவாசத்திலிருந்து என்னுடைய மொழிகளைக் கேட்டு அதன்படி ஒழுகுங்கள். மவுத்து எவ்வளவு சீக்கிரம் வந்துவிடுமோ யார் கண்டவர்? ஈடேற்றம் என்பது தெய்வ பக்தியைப் பொருத்த விஷயம். "அல்லாஹ்வின் அடியார்களுள் பயபக்தியுள்ளவர்கள் அறிஞர்களே யாவர்" என்று அல்லாஹ்த் தஆலா திரு குர்ஆனில் கூறியுள்ளான். அனுஷ்டானப் பூர்வமான அறிஞர்கள் மட்டும்–அறிவையும் அனுஷ்டானத்தையும் ஒருங்கே தேடுபவர்கள் மட்டும்–தாங்கள் செய்யும் காரியங்களில், வேறொரு பிரதிபயனுமின்றித் தெய்வ சமீபத்துவத்தையே விரும்புபவர்கள் மட்டும்–பயபக்தியாளர் களாகத் திகழுவார்கள். அவர்கள் விரும்புவது தெய்வ சமீபத்துவத் தையும், அவனுடைய சமீபத்துவத்தைத் தடுக்கும் திரைகளினின்று விமோசனத்தையுமேயாகும்.

மானிட வர்க்கத்தாரில் ஒரு சாராருக்கு இம்மையும் மறுசாராருக்கு மறுமையும் இருக்கின்றன; மெய்ஞ்ஞானம் பெற்ற சாராருக்கென மெய்ப் பொருளாகிய அல்லாஹ் இருக்கிறான். அல்லாஹ்வின் உத்தம நல்லடியார்கள்–பயபக்தியுள்ளவர்கள்–புறக்கண் முன் அவனைக்

காணாதிருப்பினும் அகக்கண்ணால் அவனை முன்னிருத்தியிருப்பவர்கள்–அல்லாஹ்வின் ஞாபகத்தால் அவனிடம் பயம் பெருகாதவர்களாயிருப்பது எப்படி? தினந்தினம் புதுப் புதுச் சுடரை வெளியாக்கிக் கொண்டிருக்கும் இறைவனான அவனுடைய அச்சம் அவர்கள் உள்ளங்களில் நிறையாதிருப்பதெப்படி? அவன் நாட்டமே எங்கும் நடைபெறுவதாய் இருக்கிறது; ஒரு சிலருக்கு ஆதரவளிக்கிறான்; ஒரு சிலரை உயிர்ப்பிக் கிறான்; மற்றும் சிலரை மரிக்கச் செய்கிறான்; ஒரு சிலரைச் சமீபப் படுத்துகிறான்; மற்றும் சிலரைத் தூரப்படுத்துகிறான். "அவன் செய்வது பற்றி அவனைக்கேள்வி கேட்பது முடியாது; அவர்களே கேள்வி கேட்கப் படுவார்கள்;" யா அல்லாஹ், உன் சமீபத்துவத்தை எங்களுக்கு அளிப் பாயாக! தூரப்படுத்த வேண்டாம்! இம்மை மறுமையின் நலன்களையும் நரகவேதனையினின்று ஈடேற்றத்தையும் அளிப்பாயாக!

ஆறாவது பிரசங்கம்

ஹிஜிரி 545 ஷவ்வால் பிறை 15 வெள்ளிக்கிழமை ஆண்டகை அவர்கள் நிகழ்த்தியது :

அல்லாஹ்வின் மெய்யடியார்களின் உள்ளம் பரிசுத்தமானதாய் இருக்கும்; சிருஷ்டியை மறந்து சிருஷ்டி கர்த்தனையே நினைத்துக் கொண்டிருக்கும், இம்மையை அலட்சியம் செய்து மறுமையை முன்னிறுத்தியதாய் இருக்கும்; உங்கள் கையில் இருப்பவற்றை மறந்து அல்லாஹ்விடம் இருப்பதை நினைப்பதாய் இருக்கும். அவர்களையும் அவர்களுடைய சர்வ அனுபவங்களையும் நீங்கள் இழந்திருக்கிறீர்கள்; மறுமையை மறந்து இம்மையில் ஆழ்ந்து இறைவன் சந்நிதானத்தில் வெட்கமற்றவர்களாகிவிட்டீர்கள்.

உங்களுடைய சகோதரனாகிய என் உபதேசத்தை கடைப்பிடியுங்கள்! ஏனெனில் அச்சகோதரன் உங்கள் பார்வைக்கு புறம்பாக இருக்கும் உங்கள் நிலைமைகளையும் காணக்கூடியவனாய் இருக்கிறான். இதன் பொருட்டே ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், "மூஃமீன் மூமினுக்கு கண்ணாடியாவான்" என்றருளியுள்ளார்கள். (உண்மை

முஸ்லிமின் உள்ளத்தில் முன்னிருப்பவர்களின் நிலைமை பிரதிபிம்பமாகி, இதயத் துக்கு புலனாவதாய் இருக்கிறது.) மூமினாய் இருப்பின் சதா தனது சகோதர மூமினுடைய நலனையே விரும்புபவனாய் இருப்பான்; தனது சகோதரனிடமிருக்கும் குறைகளை அவன் அறியாதிருப்பதை அவனுக்கு எடுத்துக்காட்டி ஞாபகமூட்டுவான். நன்மை தீமையின் பாகுபாட்டையும் பலாபலன்களையும் எடுத்துப் புகட்டுவான்.

என் உள்ளத்தில் சிருஷ்டிகளின் நலனை முன்னிட்ட அபிலாஷையையும், மெய்ப்பொருளே மாபெரும் லட்சியமாக இருக்கும் நிலைமையையும் அளித்த இறைவனோ மகா தூய்மையானவன். நான் உங்கள் நலனை விரும்புபவன்; அதற்கு பிரதிபலனை விரும்பாதவன். என் சம்மானம் எற்கனவே என் இறைவனிடமிருந்து கிடைத்துவிட்டது. நான் உலகத்தைத் தேடுபவனும், இம்மைக்கோ மறுமைக்கோ அல்லாஹ் அல்லாத வேறெதற்குமோ அடிமைப்பட்டவனுமல்லேன். ஒருமைப் பட்டவனும், நித்யனுமான ஒரே சிருஷ்டிகர்த்தனை மட்டுமே விளிப்பவனாவேன். நீங்கள் ஈடேற்றம் பெறுவதில் எனக்கு மகிழ்ச்சியுண்டு; உங்கள் சீரழிவில் எனக்கு வருத்தமுண்டு. உண்மை முரீது (சிஷ்யன்) உடைய முகத்தைப் பார்க்கும் சந்தர்ப்பம் கிடைக்கும்போது–என் கையில் ஜெயம் பெறுபவனைக் காணும்போது நான் அளவிலா மகிழ்ச்சியடைகிறேன். என் கையிலிருந்து அத்தகையவன் மனிதனாவதைக் கண்டு மனப்பூரிப்பு அடைகிறேன்.

அன்பர்களே, என் நாட்டம் (முராது) நீங்களாக இருக்கிறீர்கள்; என் 'தான்' என்பதன்று. நான் இருந்தும் நீங்கள் சீரழிவதைப் பார்க்கையில் கண்ணீர் வடிப்பவனாய் இருக்கிறேன்; நான் நாடுவ தெல்லாம் உங்களை முன்னிட்டேயாகும். என்னுடன் சம்பந்தம் உண்டாக்குங்கள்; அதன் மூலம் விரைவில் கரைசேரலாம்.

எனது சீடர்களே, இறைவன் முன்னும் இதர சிருஷ்டிகளின் முன்னும் பெருமை அடிப்பதை விடுங்கள்! உங்கள் நிலையை உணருங்கள்! உங்க ளுடைய அகங்காரத்தை ஒடுக்கி தாழ்மையும் அடக்கமும் உள்ளவர் களா குங்கள்! உங்களுடைய அகங்காரத்தை ஒடுக்கி தாழ்மையும் அடக்கமும் உள்ளவர்களாகுங்கள்! உங்களுடைய

ஆரம்பம் தான் என்ன வென்று சற்றே சிந்தியுங்கள். உங்கள் இந்திரியம் கேவலமான நீருடைய அசுத்தமே, உங்கள்முடிவு பிணமே என்பதை ஞாபகப்படுத்துங்கள். ஆகையால், இச்சையால் இழுபட்டவர்களுடைய கூட்டத்தில் சேர வேண்டாம்!

இச்சைகளுக்கு இரையாக வேண்டாம்! பேராசை வெள்ளத்தால் அடித்துச் செல்ல இடங்கொடுக்க வேண்டாம்! விதியில் எழுதப் படாத வற்றை விரும்பி (உலகப் பொருள் படைத்தவர்களை) மன்னர்களைத் தூரத்தித் திரிந்தும் கிட்டாது, ஏமாற்றமடையவும் வேண்டாம்! எழுதப் பட்டது–மரியாதையை இழந்து கேட்டுத் திரியாவிடினும் – கிடைத்தே தீருமென்பதை மறந்து, அவற்றைப் பிறரிடம் கேட்டு அடைந்து விடுபவர் களுடைய கூட்டத்திலும் சேர வேண்டாம்! ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், "தன்விதிவசத்தில் இல்லாதவற்றைத் தேடித் திரிபவனுடைய வேதனையே சகல வேதனைகளிலும் கொடியது" என்றருளியிருப்பதை மறந்து விடாதீர்கள்.

தக்தீரையும், தக்தீரை எழுதியவனையும் அறியாத உங்கள் நிலைமையோ கைசேதத்துக்குரியது. உங்கள் தக்தீரில் இல்லாததை உலக மக்கள் உங்களுக்கு கொடுத்து விட முடியுமா? அப்படி முடியுமென நினைக்கச் செய்வது ஷைத்தானின் ஊசாட்டம் உங்கள் இதயத்திலும் அறிவிலும் தாவிவிடுவதானாலாகும். இத்தகைய நினைவு கொண்ட நீங்கள் அல்லாஹ்வின் அடியார்களாக மாட்டீர்கள்; உங்களுடைய 'தான்' தன்மைக்கும், இச்சைக்கும், ஷைத்தானுக்கும், இயல்புக்கும், பணத் துக்குமே அடிமைகளாவீர்கள்.

எனவே கரை சேர்ந்த அடியார்களைத் தேடி அவர்களின் வழி சென்று கரைசேர்வதற்கு முயற்சிப்பது உங்கள் கடமையாகும். கரை கண்ட அடியானைக் காணாதவன் கரை காணமுடியாது என்பது ஆன்றோர் வாக்கு. நீங்கள் கரைகண்ட அடியானை (என்னை)க் காண் கிறீர்கள்; என்றாலும், உங்கள் வெளிக்கண்ணாலேயே பார்க்கிறீர்கள்; உங்களுடைய அகக்கண்ணால் இதயக்கண்ணால்–ஈமானின் கண் ணால்–பார்க்கவில்லை. ஈமான் எனும் ஜோதியை அடையப்பெறாத நீங்கள் பிறரைப் பார்க்கக் கூடிய பார்வையைப் பெற்றிருப்பது முடியாத

காரியம்தான். இது பற்றியே இறைவனும், "கண்கள் குருடாய் இருப்ப தில்லை; எனினும், நெஞ்சங்களிலுள்ள இதயமே குருடாய் இருக்கிறது" என்று குர்ஆனில் வர்ணித்துள்ளான்.

சிருஷ்டியின் கரத்திலிருந்து உலகத்தை சம்பாதிக்க ஆசை கொள்பவன், நெறி நிலையை (தீனை)ப் பறிகொடுத்து அத்திப்பழத்தை (துன்யாவை) விலைக்கு வாங்குபவனாகிறான்; அழியாச் செல்வத்துக்குப் பதிலாக அழியும் செல்வத்தைக் கொள்முதல் செய்பவனாகிறான். இதன் பயனாய் இறுதியில் அவன் கையில் அதுவும் கிடைப்பதில்லை; இதுவும் கிடைப்பதில்லை.

உங்கள் ஈமான் சம்பூரணம் பெறும்வரை–பிறரை எதிர்பார்த்து நிற்காதிருப்பதற்காக–உங்கள் சம்பாத்திய முறையைச் சீருடன் நடத்தி வாருங்கள். ஈமானை விற்று பிறரிடம் பொருள் பெறும் சோதனைக் காளாகாதீர்கள். ஆனால், உங்கள் ஈமான் ஸ்திரமும், சம்பூரணமும் பெற்றதும் அல்லாஹ்வின்மீது நம்பிக்கை (தவக்கல், சாதனப் பொருட் களினின்றும் தூரமாகி விடுதல், மக்கள் சகவாசத்திலிருந்து தனிப்படல், உள்ளத்தில் சகலவற்றின் சம்பந்தமும் வெட்டுப்படச் செய்தல் ஆகிய வற்றைக் கடைப்பிடிக்கலாம்; உங்கள் உள்ளத்தை ஊர், சுற்றத்தார், வியாபாரம், அறிமுகமுள்ளோர் ஆகியவற்றிலிருந்து அப்புறப்படுத்திக் கொள்ளலாம்; உங்கள் கையிலிருப்பதைச் சுற்றத்தார், சிநேகிதர் ஆகியவர்களிடம் ஒப்படைத்துவிட்டு, மலக்கல்–மவுத்து வந்து உங்கள் ஆத்மாவைக் கைப்பற்றிவிட்டது போன்ற நிலையில் ஆகிவிடலாம்; பூமி பிளந்து உங்களை வெளியாக்கிவிட்டது போல் மரண நிலைக்குப் பின் உயிர் பெற்றவர்களாக ஆகிவிடலாம்; தக்தீருடையவும் பூர்வீக சக்தியுடையவும் அலைகள் உங்களை ஞானத்தின் சமுத்திரத்தில் போட்டு ஆழ்த்திவிட்டதே போல் ஆகிவிடலாம். இத்தகைய நிலைமையை அடைந்திருப்பவர்களுக்குச் சாதனப் பொருள்களால் ஒரு தீங்கும் விளைவிக்க முடியா. சாதனப் பொருள்களின் சம்பந்தமிருப்பினும் அவர் களின் வெளிமுகத்தளவில் இருக்குமேயன்றி–மறைமுகத்தில்–அகமி யத்தில் இருக்காது. சாதனப் பொருட்கள் என்பது இருப்பினும் பிறருக் காக இருக்குமேயன்றி, அவர்களுக்காக இருக்கமாட்டா.

சமூகத்தவர்களே, யான் வர்ணித்த அளவுக்கு உள்ளத்திலிருந்து சாதனப் பொருட்களையும் அவற்றின் சம்பந்தா சம்பந்தங்களையும் அகற்றஇயலாது போயினும், முடிந்த வரையாவது அந்நிலை உண்டாக்கப் பட்டுத்தான் ஆகவேண்டும். அவ்வளவும் இல்லாவிடினும், கொஞ்ச மாவது இருக்கட்டும். "முடிந்தவரை உலகக் கவலைகளிலிருந்து விமோசனம் பெறுங்கள்!" என்று நமது நபி(ஸல்) அவர்கள் கூறுவதுண்டு.

அன்பர்களே, உலகக்கவலைகளிலிருந்து விமோசனம் பெறுவதற் குரிய பலம் இருப்பின், அதனைப் பயன்படுத்துங்கள், இன்றேல், உள்ளத்தில் அல்லாஹ்வின் புறமே ஒடி, அவனையே பற்றிப் பிடியுங்கள்! உலகக் கவலையை உங்கள் உள்ளத்திலிருந்து களைந்து விடுமாறு அவனிடம் மன்றாடுங்கள்! ஈமானையும் அவனுடைய அனுபவ ஞானத்தையும் (மஃரிபா) அறிவையும், சிருஷ்டிகளின் தேவையற்ற தன்மையையும், உங்கள் உள்ளத்தில் நிறைத்து விடுமாறு அவனையே பிரார்த்தியுங்கள். உங்களுக்குத் திட்டமான நிர்ணயத்தையும் (யக்கீனை யும்) உங்களுடைய இதயத்தில் அவன் பால் பாசத்தையும் உங்கள் உறுப்புக் கள் அவன் வழியே உழைப்பதையும், அருளுமாறு அவனிடமே வேண் டுங்கள், ஒவ்வொன்றையும் அவனிடமே வேண்டுங்கள்; இதரர்களிடம் வேண்டி நிற்க வேண்டாம். உங்களைப் போன்ற சிருஷ்டிகளின் முன் சுயமரியாதை இழந்து நிற்க வேண்டாம். அவமானம் அடைவதெனின், அவனுக்காக அடையலாமேயன்றி பிறருக்காக அடையக் கூடாது. உங்கள் சர்வ காரியங்களும் அவனுடன்–அவனுக்காக–இருக்க வேண்டும்.

அன்பர்களே, உள்ளத்தில் நிலவ வேண்டியதை விடுத்து, அனுஷ்டா னமின்றி நாவிலிருக்கும் மார்க்க அறிவு உங்களை மெய்ப் பொருளி னளவில் ஒர் அடியும் எடுத்து வைக்க உதவாது. தெய்வத்தின் பாலுள்ள யாத்திரை உள்ளத்தின் யாத்திரையேயாகும். சமீபத்துவமென்பது அகமிய சம்பந்தமானதுதான்; அனுஷ்டானம் எனின் அர்த்தத்தின் அனுஷ்டானமே யன்றி வேறன்று, ஆனால் அவற்றுடன் உறுப்புக்களைக் கொண்டு ஷரீஅத் என்ற மார்க்க நிபந்தனைகளுக்கு அடி பணிவதும்,

அல்லாஹ் வின் முன்னும் அவன் அடியார்கள் முன்னும் ஒழுக்கமாய் இருப்பதும் இன்றியமையாத விஷயங்களாகும்.

தன்னை உயர்வாகக் காண்பவனில் ஓர் உயர்வுமில்லை. சிருஷ்டி களை முன்னிட்டு நற்கருமங்கள் செய்பவனில் நற்கருமமில்லை. வணக்கங்கள் ஏகாந்தத்திலேயன்றிப் பகிரங்கத்தில் நடக்க வேண்டியவை அல்ல. பர்லான (கடமையான) வணக்கங்களைப் பகிரங்கமாக நிறை வேற்றி வருவது அவசியமானது. எனவே, அது மட்டும் இதற்கு விதி விலக்காகும்.

அஸ்திவாரத்தின் விஷயம் செம்மையாக்கப்படும்வரை கட்டடச் செம்மை உங்களுக்கு பயனளிப்பதாகாது. ஆனால், அஸ்திவாரம் பலமாய் இருந்து, கட்டடத்துக்குச் சேதம் விளைந்திடின் செம்மைப்படுத்திக் கொள்வது முடிந்த விஷயமே. வணக்கங்களின் அஸ்திவாரம் ஏகத் துவமும் (தவ்ஹீதும்) கலப்பற்ற நிர்ணயமுமாகும். இவ்விரண்டு மில்லாத வனிடம் வணக்கமில்லை. உங்கள் வணக்கத்தை இவ்விரண் டையும் கொண்டு பலப்படுத்திக் கொள்ளுங்கள்; உங்களின் பலமும் சக்தியும் கொண்டன்று–அல்லாஹ்வின் பலமும் சக்தியும் கொண்டு வணக் கத்தின் சுவர்களை எழுப்புங்கள். கட்டடம் கட்டப்படுவது ஏகத்துவத்தின் அஸ்திவாரம் கொண்டேயன்றி இணை வைத்தல் (ஷிர்க்), கலப்புள்ள நிர்ணயம் (நிபாக்) ஆகியவற்றைக் கொண்டல்ல. ஏகத்துவத்தைக் கண்டவனே வளர்பிறையைப்போல் தன் வணக்கம் வளர்வதைக் காண்பான். கலப்புள்ள நிர்ணயமுள்ளவன் அதுபோல் காண இயலாது. யா அல்லாஹ், எங்களை எந்நிலையிலும் கலப்புள்ள எண்ணங்களை விட்டு அப்பாலாக்கி, இம்மையின் நலனையும் மறுமையின் நலனையும் அளித்து நரக வேதனையினின்றும் இரட்சித்தருள்வாயாக!

ஏழாவது பிரசங்கம்

ஹிஜ்ரி 545 ஷவ்வால் பிறை 17 ஞாயிற்றுக்கிழமை ஜாவியாவில் ஆண்டகை அவர்கள், ஸலவாத்து ஒதி, "எங்களுக்குப் பொறுமையை அளிப்பாயாக! எங்கள் பாதங்களை ஸ்திரப்படுத்துவாயாக! உன் அருட்கொடைகளை அதிகரித்தருள்வாயாக! அவற்றுக்காக நன்றி

யறிதலையும் எங்களுக்குக் கொடுப்பாயாக!"என்று பிரார்த்தனை செய்துவிட்டுப் பின்பு நிகழ்த்தியதாவது:

சமூகத்தார்களே, பொறுமையைக் கடைப்பிடியுங்கள். ஏனெனில், இவ்வுலகமானது ஆபத்துக்களும் துன்பங்களும் நிறைந்த ஸ்தலமாகும். சுகம் இருப்பின் அதனுடன் கஷ்டமும், இன்பம் இருப்பின் அதனுடன் துன்பமும், வசதி இருப்பின் அதனுடன் நெருக்கடியும் இருப்பது இவ்வுலக வாழ்வின் இயல்பாகிவிட்டது. உலகை உங்கள் ஜீவிதத்துக்குக் கொடுத்து விடுங்கள். உலகில் உங்களுக்கு விதிக்கப்பட்டுள்ளவற்றை ஷரீஅத் எனும் கரம் கொண்டேயல்லாது பற்ற வேண்டாம்; உலகத்தை அனுபவிப் பதிலுள்ள நோய்களை அணுகச் செய்யாதிருக்கும் ஒளடதம் அவ்வொழுக்கமாகவே இருக்கிறது.

அன்பர்களே, நீங்கள் மெய்ப்பொருளின் தேட்டமும் நாட்டமும் உள்ளவர்களாய் (முரீதுகளாய்) இருப்பின், உலகத்தில் விதிக்கப் பட்டவைகளை ஷரீஅத் எனும் கரம் கொண்டு பிடிக்க வேண்டும்; அதிலும் விசேஷ மானவர்களாயும் மெய்யர் (ஸித்தீக்)களாயும் ஆகிவிடுவீர் களாயின், அவனுடைய ஏவல் (அம்ரெ–இலாஹி) எனும் கரம் கொண்டு பிடிக்கவேண்டும். அதிலும் மேலாக, ஆண்டவனில் தன்னை அழித்தவர் களாயும், அவனை அடைந்து அவன் சமீபத்திலிருப்பவர்களாகவும் ஆகிவிடுவீர்களாயின், அவன் செயல் கொண்டு பிடிக்கவேண்டும். அப்படிப் பற்றிப் பிடித்தால்தான் விதிக்கப்பட்டது உங்கள் புறம் ஒடிவரும்; அவன் ஏவல் (அம்ரு) உங்களை உத்தரவிடும், அல்லது தடுத்துவிடும்; அவன் செயல் களைத் தூண்டுவதாகிவிடும்.

சிருஷ்டிகளுள் சாதாரணமானவர்கள் விசேஷமானவர்கள், விஷேத்திலும் விசேஷமானவர்கள் என மூன்று வகையுண்டு. சாதாரணமாக, பயபக்தியுள்ள முஸ்லிம்கள் ஷரீஅத்தைக் கடைப்பிடித்து அதன்படி சற்றேனும் தவறிவிடாது ஒழுகிவருவார்கள். "ரஸூல் உங்களுக்குக் கொடுத்ததைப் பற்றிப் பிடியுங்கள்; விலக்கியதை விலக்கிக் கொள்ளுங்கள்" என்ற கட்டளையின்படி நடந்துவருவார்கள். இச்சாதாரண நிலை அதன் நிபந்தனைகளுடன் நிறைவெய்தியதும், அதனை அகமியத்திலும் பகிரங்கத்திலும் நிறைவேற்றியதும், அவர்கள்

உள்ளம் ஜோதியடைந்த தாகி விடுகிறது; அந்த ஜோதியைக் கொண்டு பார்க்கையில், ஷரீஅத் கொண்டுதான் அனுபவிக்கக்கூடிய விஷயங் களின் தேவையும் உள்ளத்தில் இல்லாதிருக்கக் கண்டு, மெய்ப் பொருளின் புறத்துதிக்கும் உதிப்பை (இல்ஹாமை)த் தேடுவார்கள். இல்ஹாம் என்பது சகலவஸ்துக் களுக்கும் பொதுவான ஒரு தத்துவமே யாகும். "ஒவ்வொரு நப்ஸுக்கும், தீமையினதும் நன்மை யினதும் இல்ஹாமை (உதிப்பை) அளித்தான்" என்று அல்லாஹ் அருளியுள்ளான். எனவே, அவர்கள் தம்முடைய மெய்ச்சாட்சியைத் தேடுவார்கள்; மெய்ப்பொருளின் புறத்துள்ள உதிப்பையும் அதன் அடையாளத்தையும் கண்டு அதன் வெளிரங்க வியாக்கியானத்தையும் அறிவார்கள்.

உதாரணமாக, கடையில் உள்ள சரக்குகளைப் பார்க்கையில், இக்கடையிலுள்ளவை கடைக்காரனுக்குச் சொந்தமானவை என்பதைக் காண்பதால் அங்ஙனமே நம்புகிறோம். ஆனால், வெளிரங்கமாய்க் கண்டது கொண்டு முடிவு செய்வதுடன் நின்றுவிடாது, விசேஷமான அடியார்கள், தங்கள் உள்ளத்தின் ஜோதியைப் பிரயோகித்து ஒவ்வொரு விஷயத்திலும் உள்ளத்தின் உதிப்பு எவ்விதமிருக்கிறதென்றும் நோட்ட மிடுவார்கள். ஷரீஅத்தையும் நிறைவேற்றி வந்து, ஈமானும் ஏகத்துவமும் பலம்பெற்று, இதயத்திலிருந்து உலகமும் சிருஷ்டிப் பொருள்களும் அகன்றபின்–உலக வாழ்வின் காடு, சமுத்திரங்களைக் கடந்தபின்–இவ்விரண்டாவது படித்தரம் ஏற்படுவதாய் இருக்கிறது. அப்பொழுதான் சூரியோதயம் ஏற்படும். ஈமான், தெய்வ சமீபத்துவம், வணக்கம், பொறுமை, அடிபணிதல், நிம்மதி ஆகியவற்றின் ஜோதிகளும் உண்டா கின்றன. இவ்வாறு விளையும் சகல பலாபலன்களும் ஷரீஅத்தின் நிபந்தனைகளை நிறைவேற்றிய பின் ஷரீஅத்தை பின்பற்றியதா லேற்படும் வேறுகளாகும்.

விசேஷத்திலும் விசேஷமானவர்களைப் பற்றிக் கூறுவதென்றால், அவர்கள் ஷரீஅத்திலிருந்து உத்தரவு பெறுவார்கள்; அத்துடன், அல்லாஹ்வின் உத்தரவு, செயல், தூண்டுதல், உதிப்பு (இல்ஹாம்) ஆகிய வற்றையும் எதிர்நோக்கி நிற்பார்கள். மூன்று பிரிவுகளுக்குட்படாத மற்ற சகலமும் அழிவிலும் அழிவேயன்றி–ஹராமிலும் ஹராமேயன்றி

மார்க்க மெனும் தேகத்தின் தலையிடியும், இருதய நோயும் வயிற்றுப் போக்குமேயன்றி–வேறல்ல.

சமூகத்தவர்களே, ஹக் ஆகிய (மெய்ப் பொருளாகிய) இறைவன் உங்களுக்கிடையில் மாறுதல்களை ஏன் உண்டாக்குகிறான்? நீங்கள் அப்போது எப்படி நடக்கிறீர்கள் என்று பார்ப்பதற்காகவேதான். ஸ்திர மான பாதத்துடன் நிற்கிறீர்களா, இல்லை, வெருண்டோடுகிறீர்களா என்று பார்ப்பதற்காகவேதான். மெய்யர்களாக நிற்கிறீர்களா அல்லது பொய்யர்களாகி விடுகிறீர்களா என்று பார்ப்பதற்காகவேதான்.

தக்தீருக்கு இசைந்தவர்களாய் நடவாதவர்களுக்கு அவன் சகவாசமும் ஏற்படப்போவதில்லை. அவன் புறத்துள்ள சாதன வசதியும் உண்டாகப் போவதில்லை. தெய்வ நாட்டத்தில் திருப்தியடையாதவர்கள் மீது மெய்ப்பொருளும் பொருத்தமடைவதில்லை. கொடாதவர்களுக்குக் கிடைப்பதுமில்லை. (தன் நப்ஸின் மீது) சவாரி செய்யாதவர்கள் யாத்திரை யில் சவாரி செய்து முன் செல்வதுமில்லை.

அறிவீனர்களே, அல்லாஹ் நாடியதை மாற்றிவிட வேண்டு மென்பதா உங்கள் அபிலாஷை? நீங்களும் வணக்கத்துக்குரிய தெய்வங் களாக ஆகிவிடலாமென்றா எண்ணுகிறீர்கள்? அல்லாஹ் உங்களுக் கிசைந்தவனாய் இருக்க வேண்டுமென்றா நாடுகிறீர்கள்? இதுவே உங்கள் நிலைமையின் பிரதி பிம்பமாயுள்ளது. ஒவ்வொன்றையும் பிரதிபிம்பம் கொண்டு அறிந்து உணர முற்படுங்கள்!

தக்தீர் இல்லாவிடில் பொய்யர்களின் வேஷம் வெளுக்கப் போவதில்லை. அனுபவங்களின்போதே மாணிக்கங்கள் வெளியாக வேண்டியவைகளாய் இருக்கின்றன.

எப்படி உங்கள் நப்ஸ் (மனம்) மெய்ப்பொருளுக்கு முரண் கூறு கிறதோ, அப்படியே உங்கள் நப்ஸுக்கு முரண்படுபவர்களாக மாறுங்கள். தன் நப்ஸுடன் முரண்பட்டு எதிர்க்க முடிந்தால் தான் மற்ற பொருட் களுடனும் முரண்பட்டு எதிர்க்க முடியும். உங்களுடைய நன்னம்பிக் கையில் (ஈமானில்) எத்துணை பலம் இருக்கிறதோ அத்துணை தூரமே நீங்கள் ஷரீஅத்துக்கு முரணான காரியங்களை எதிர்ப்பவர்களாவீர்கள்;

உங்களுடைய ஈமானில் எத்துணை பலஹீனமுள்ளதோ, அத்துணை அளவுக்கு நீங்கள் வீட்டில் வாளாவிருப்பீர்கள். முரணான காரியங்களை அப்புறப்படுத்துவதில் மௌனமாய் இருப்பீர்கள். ஜின்னிலும் மனுவிலும் உள்ள ஷைத்தான்களிடம் போர் தொடுக்கும்போது மானிடன் ஸ்திரப் படுத்த வேண்டிய திருப்பது ஈமானுடைய பாதங் களேயாகும். சோதனை களும் ஆபத்துகளும் நேரிடும்போது ஸ்திரமாக நிற்பனவும் அப்பாதங் களேயாகும். உங்கள் ஈமானுடைய பாதங்கள் ஸ்திரம் பெறாத நிலைமையில் உங்கள் ஈமானைப் பற்றிப் பெருமையடிக்காதீர்கள். சகலவற்றையும் வெறுத்து, அவற்றைச் சிருஷ்டித்தவனை மட்டும் விரும்பு பவர்களாக வாழுங்கள். பிறகு நீங்கள் வெறுப்புக்குரியதாய்க் காணும் பொருட்களை, அவற்றில் ஒன்றை, உங்கள் உவப்புக்குரிதாக்க வேண்டு மென அவனே விரும்பும்போது, அதன் உவப்பிலும் (அவனுடைய மெய் விருப்பத்தால்) பாதுகாப்புப் பெற்றவர்களாக வாழ்வீர்கள். ஏனெனில், அந்நிலைமையில் அப்பொருட்களை உவப்புக்குரித்தான பொருட்களாக் கியது அவனாகிவிடுகிறான்; நீங்களன்று. இக்கருத்தைக் கொண்டே ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், "உலகில் மூன்று பொருட்கள் எனது உவப்புக்கு உரித்தானவையாக ஆக்கப் பெற்றிருக்கின்றன. வாசனை ஒன்று. மாதர்கள் மற்றொன்று, மேலும், எனது நேத்திரங்களின் குளிர்ச்சியோ தொழுகையிலேயே வைக்கப் பெற்றிருக்கிறது" எனத் திருவாய் மலர்ந்தருளியுள்ளார்கள். இப்பொருட்களின்பால் உவப்பு, அவற்றை வெறுத்துத் துறந்த பின்னரே அவர்களுக்கு அளிக்கப்பட்ட தாய் இருக்கிறது. ஆகையால், நீங்கள் அல்லாஹ் அல்லாத பொருட் களின் உவப்பை உங்கள் உள்ளத்திலிருந்து அகற்றுங்கள்! அவனே அப்பொருட்களில் எதையும் உங்களுடைய உவப்புக்கு உரித்தாக ஆக்கினால் ஆக்கட்டும்.

எட்டாவது பிரசங்கம்

ஹிஜ்ரி 545 ஷவ்வால் பிறை 19 செவ்வாய்க்கிழமையன்று மதரஸா மஃமூராவில் ஆண்டகை அவர்கள் நிகழ்த்தியது :

போலி மத பக்தர்களின் போர்வை வேண்டுமானால் சுத்தமாய் இருக்குமேயன்றி, அவர்களின் இதயங்கள் சுத்தமாய் இரா. எதைத் துறந்தவர்களாக இருக்கவேண்டுமோ அதை அவர்கள் துறந்திருப்ப தில்லை; அவர்கள் தம்முடைய ஜீவனத்துக்குரிய சம்பாத்திய முயற்சியில் – பிரயாசையில் ஈடுபடுத்துவதில்லை; மதத்தைக் கொண்டே சாப்பிடு வார்கள்; ஒரு விஷயத்திலும் பேணுதலாய் இருக்கமாட்டார்கள்; ஹராமானதையுங்கூட அருந்துவார்கள். சாதாரண மக்களின் கண்ணுக்கு இத்தகையோரின் உண்மைநிலை மறைவானதாய் இருக்க லாம்; விசேஷமான நல்லடியார்கள் முன் இவர்கள் நிலைமை மறைவான தாய் இருக்கமுடியாது. இத்தகையோரின் துறவறமும், வணக்கமும் வெளிரங்கமான பகட்டேயாகும். இவர்களுடைய வெளிரங்கம் குடியுள்ள வீடு போலும், அந்தரங்கம் பாழடைந்த குட்டிச்சுவர் போலும் இருக்கிற தெனலாம்.

உங்கள் நிலைமை கைசேதமானது! அல்லாஹ்வுக்கு அடிபணிதல் அகத்தில் உண்டாகவேண்டிய விஷயம்; புறத்தில் மட்டுமன்று. மெய் பொருளின் உயரிய சம்பந்தம் உள்ளத்தைப் பொறுத்த விஷயமாகும்; அகமியங்களைக் கொண்ட விஷயமாகும். உங்களுடைய போலிவேட மெனும் போர்வையைக் களைந்தெறியுங்கள்! அப்போது உங்களுக்காக மெய்ப்பொருளின் புறத்திலிருந்து, என்றும் பழையதாகாத ஆடை கிட்ட முடியும். அவனே உங்களுக்குரிய ஆடையை நீங்கள் அணியச் செய்யும் வரை, போலி ஆடைகளை உதறி எறிபவர்களாகுங்கள்! அல்லாஹ்வின் கடன்களை நிறைவேற்றுவதிலுண்டாகும் சோம்பல் எனும் போர்வை யையும் எடுத்தெறியுங்கள்! சிருஷ்டிகளின் சகவாசத்திலிருந்து அவற்றை அல்லாஹ்வுக்கு நிகராகப் பாவிக்கும் மனப் பான்மை யெனும் போர்வை யையும் எடுத்தெறியுங்கள்! இச்சை, அகங்காரம்,சுயநலம், நிர்ணயக் கலப்பு, சிருஷ்டிகளின் நற்பெயரை நாடல், முதலிய போர்வைகளை யெல்லாம் எடுத்தெறியுங்கள்! இம்மையின் போர்வையைக் களைந்து விட்டு மறுமையின் போர்வையைப் போர்த்திக் கொள்ளுங்கள். உங்களுடைய பலம், சக்தி, வாழ்வு ஆகியவற்றினின்றும் கூட மனத்தை அப்புறப்படுத்தி, மெய்ப்பொருளின் முன்னால் பலமற்றவர்களாய்–

சக்தியற்றவர்களாய் நில்லுங்கள்! காரணப் பொருளின்மீது மனம் தங்கிவிட வேண்டாம்; சிருஷ்டி எதிலும் சிருஷ்டித்தவனுக்குரித்தான ஞாபகத்துக்குச் சமமான ஞாபகத்தை உண்டாக்கிவிட வேண்டாம். அப்படி உண்டாகாதிருந்தால் இறைவனின் பேறுகளை நான்கு திக்குகளிலும் காண்பீர்கள். அவன் அருள் வந்து உங்களைத் தூக்கிக் கொள்ளும்; அவன் கொடையும் நன்மையும் வந்து உங்களுக்குப் போர்வையை அளிக்கும்; தன்னளவில் உங்களைச் சேர்த்துக் கொள்ளும், எனவே, சகலவற்றிலிருந்தும் நிர்வாணம்–தூய்மை பெற்று அவன் புறம் ஒடுங்கள்; நீங்களும் இல்லாது போய்விட வேண்டும்; அவனுக்கே உரித்தானவர்களாக மட்டும் இருக்க வேண்டும். அல்லாஹ் அல்லாதவற்றிலிருந்து துண்டிக்கப்பட்டவர்களாய், அல்லாஹ்வின் பக்கமே செல்லுங்கள். சிதைவுண்டவர்களாய் அவன்பால் செல்லுங்கள்! அவனே உங்கள் சிதைவைப் போக்கிச் சேர்மானமாக்கட்டும்! உங்களுடைய வெளிரங்கமானவும் அந்தரங்கமானவும் சக்திகளையும் அவனே திரட்டட்டும்.

சாதன வாயில்கள்யாவும் அடைப்பட்டாலும், அதனால் உங்களுக்கு ஈனம் ஏற்படாது; அதிலும் அவனுடைய பாதுகாப்பு ஏற்படுவதாய் ஆகிவிடும் வரை இவ்வாறே ஒழுகுங்கள்.

"தவ்ஹீது கொண்டு சிருஷ்டிப் பொருட்களை இல்லாமலாக்கி, மெய்த்துறவறம் கொண்டு உலகத்தையும் இல்லையெனக் கொண்டு, மெய்யன்பு நிறைவால் அல்லாஹ் அல்லாத சகலவற்றின் பாசத்தையும் ஒழிப்பவனே முழுச்சீர்த்திருத்தமும், பூரண வெற்றியும் பெற்றவனாவான்; இம்மை மறுமை நலன்கள் நிறைந்தவனாவான்.

சமூகத்தவர்களே, மரிக்குமுன் உங்களுடைய நப்ஸையும் இச்சைகளையும், ஷைத்தான்களையும் வெருட்டுங்கள்! சாதாரண மரணம் வருமுன் விசேஷமான இம் மரணத்தை அடையுங்கள்.

சமூகத்தவர்களே, நான் இயம்புவதை நம்புங்கள்! நானோ சக்தியும் மகிமையும் பொருந்திய அல்லாஹ்வின்பால் உங்களை அறைகூவி அழைக்கிறேன். உங்களை அவனின் வாயிலின் பக்கம்–அவனுக்கு அடிபணிதலின் புறம் அழைக்கிறேன்.

கலப்புள்ள நிர்ணயக்காரர்களே (முனாபிக்குகள்) ஜனங்களை அல்லாஹ்வின் புறம் அழையாது தங்களின் நப்ஸுக்கள் அளவில் அழைப்பார்கள். அவர்களோ சகல உலக இன்பத்தையும், உலக மதிப்பையும் இம்மையையும் தேடுபவர்களாவர்.

அறிவீனர்களே, என் அறிவுரைகளுக்குச் செவி கொடுக்காமல் உங்களுடைய நப்ஸுடையவும், இச்சையுடையவும் சகவாசத்தில் உங்களின் ஏகாந்த இடத்தில் ஏன் தங்கியிருந்துவிடுகிறீர்கள்? உண்மையிலே, முதன்முதலாக நபிகின் சகவாசம் வேண்டியதாய் இருக்கிறது. பிறகு, நப்ஸையும் இயற்கையையும் அல்லாஹ் அல்லாத சகலவற்றையும் கொல்ல வேண்டியதாய் இருக்கிறது. முதலில், குருவின் வாயிலைத் தேடிச் சென்றடைந்து, பிறகு அவரிடம் விடைபெற்றுச் சென்று தனது வணக்கஸ்தலத்தில் ஏகாந்தம் அடைய வேண்டியதாய் இருக்கிறது. இந்நிலை சம்பூர்ணமெய்திய பின்னரே, அல்லாஹ்வின் உத்தரவுடன் சிருஷ்டிகளின் ஔடதமாகவும், வழிகாட்டியாகவும் அதற்காக வழி காட்டப்படுபவனாகவும் ஆக முடியும். அவ்வறிவில்லாத வரை உங்கள் நாவு பயபக்தி நிறைந்ததாய் இருப்பினுங்கூட நாட்டம் பாவம் நிறைந்ததாகவே இருக்கும். நாவு அல்லாஹ்வைப் புகழ்ந்தாலும், உள்ளம் அவனுக்கு முரண் கூறுவதாகவே இருக்கும். உங்களுள் வெளிரங்கம் முஸ்லிமாக இருப்பினும், உங்கள் அந்தரங்கம் காபிராகவே இருக்கும். உங்களுடைய வெளிக்கிரியைகள் ஏகத்துவ மயமானதாய் இருப்பினும், உள்நிலையோ ஷிர்க் நிறைந்ததாகவே இருக்கும். தோற்றத்தில் துறவியாகவும், மார்க்க பக்தனாகவும் இருப்பினும் அகமோ அசுத்த ஸ்தலங்கள் போல் கேடுற்றதாகவும் இருக்கும். இவ்வாறு அகமியச் சுத்தம் ஏற்படாத நிலையில் ஷைத்தான் உங்களுடைய இதயங்களைத் திரையிட்டு மூடி, அதைத் தன் இல்லமாக்கிக் கொள்ளுவான், நன்னம்பிக்கையாளன் (மூமின்) முதலில் தன் அகமியத்தையும், பிறகு தன் தோற்றத்தையும் காட்ட நாடுபவனாய் இருக்க வேண்டும். வீட்டின் வெளிப்புறத்தை வெகு அழகு பெறக் கட்டி உட்புறத்தை ஒழுங்கில்லாது கட்டுவதில் யாது பயன்? கட்டடம் சம்பூர்ணமாகுமுன் கதவு போட்டும் யாது பயன்? ஆரம்பம் அல்லாஹ்வைக் கொண்டும்

அவனது பொருத்தத்தைக் கொண்டுமே ஆக வேண்டும்! பிறகு அவன் உத்தரவு கொண்டு சிருஷ்டிகளின் புறம் கவனம் செலுத்துவது தகும். முதலில் மறுமையைத் தேடவேண்டும். பிறகே, இம்மையில் விதிக்கப் பட்டவற்றை உபயோகப்படுத்தலாம்.

ஒன்பதாவது பிரசங்கம்

ஹிஜ்ரி 545 ஷவ்வால் பிறை 22 வெள்ளிக்கிழமை காலையில் ஆண்டகை அவர்கள் நிகழ்த்தியது:

"நிச்சயமாக அல்லாஹ் தன் அன்பர்களுக்கு வேதனை கொடுப்பதில்லை; ஆனால், சோதனை செய்வான்" என்று நபி (ஸல்) அவர்கள் அருளியுள்ளார்கள். மூமின்கள், அவன் சோதனையில் ஸ்திரமாய் இருந்து வருவார்கள். அல்லாஹ் எவ்விதம் சோதித்தாலும் அச்சோதனையின் சிரமத்துக்குப் பிறகு வரவேண்டிய நன்மைக்காகவே அவ்விதம் சோதித்தருள்வான். அது இம்மை முயற்சியில் வரும் சோதனையாயினும் சரியே, மறுமை முயற்சியில் வரும் சோதனையாயினும் சரியே, ஆகையால், அவர்கள் சோதனையில் உண்டாகும் கஷ்டங்களிடையே திருப்தியும், மனப்பொறுமையும் வாய்ந்தவர்களாகவே இருந்து வருவார்கள்; தங்கள் இறைவனைக் குறைகூற மாட்டார்கள். கஷ்ட நிலையிலும் தன்னுடைய ஞாபகமும் கவலையும் அவர்கள் இதயங்களில் குடிகொள்ளச் செய்து, அக்கஷ்டங்களையும் இறைவன் குறைத்து விடுகிறான்.

உலக வாழ்வில் ஈடுபட்டிருப்பவர்களே, இந்நிலைமையற்றி வாயாடுவதை விட்டொழியுங்கள். நீங்கள் பேசுவது நாவைக் கொண்டேயன்றி உள்ளத்தைக் கொண்டன்று. நீங்களோ, அல்லாஹ்வைப் பற்றியும், அவன் மொழியைப் பற்றியும், அவன் நபிமார்களைப் பற்றியும் உண்மையில் அவர்களைப் பின்தொடர்ந்ததானால் அவர்கள் பிரதிநிதிகளாக (கலீபாவாக)வும், உரிமையாளர்களாகவும் இருப்பவர்களைப் பற்றியும், விதண்டாவாதமாய்க் கேள்வி போடுகிறீர்கள். தக்தீரையும் அதை நிர்ணயப்படுத்தியவனையும் பற்றி வீண்விவாதம் செய்கிறீர்கள். மெய்ப்பொருளாகிய இறைவனின் அருட்கொடைகளை அடையப்

பெறுவதற்குப் பதிலாகச் சிருஷ்டிகள் உங்களுக்குக் கொடுப்பவற்றால் திருப்தி அடைபவர்களாய் இருக்கிறீர்கள். நீங்கள் பாவத்திலிருந்து மீண்டவர்களாய் (தவ்பாச் செய்தவர்களாய்)–அத்தகைய திரிகரண சுத்தியான மீட்சியில் நிலைபெற்று நின்றவர்களாய்–இறைவனின் நாட்டமும் விதி நிர்ணயமும் உங்களுக்கு நலன் விளைவிப்பினும் சரி, அவமதிப்பை விளைவிப்பினும் சரி, செல்வத்தை விளைவிப்பினும் சரி, தரித்திரத்தை விளைவிப்பினும் சரி, சுகத்தை விளைவிப்பினும் சரி, வியாதியை விளைவிப்பினும் சரி, உங்களுக்கு இசைந்ததாக இருப்பினும் சரி, இல்லாவிடினும் சரி, அவன் நாட்டத்துக்கும் விதிக்கும் இசைந்தவர்களாய் ஆகாதவரை உங்கள் மொழிகளை அல்லாஹ் ஏற்கப் போவதுமில்லை; அவனுடைய நேர்மையான நல்லடியார்களின் செவியில் அவை ஏறப்போவதுமில்லை.

சமூகத்தவர்களே, பின் தொடருங்கள்; அது கொண்டே பின் தொடரப்படுபவர்களாவீர்கள். ஊழியம் செய்யுங்கள்; அது கொண்டே, ஊழியம் செய்யப்படுபவர்களாவீர்கள். தெய்வ நாட்டத்தையும், விதி நிர்ணயத்தையும் பின்தொடர்பவர்களாக, ஊழியர்களாக ஆகிவிடுங்கள். அப்போது அவை உங்களைப் பின்தொடர்பவைகளாக–உங்களின் ஊழியர்களாக ஆகிவிடும். அவற்றின் முன் சிரம் சாயுங்கள்; அவை உங்கள்முன் சிரம் சாய்த்துவிடும். "நீங்கள் செய்வது போலவே உங்களுக்கும் செய்யப்படுகிறது" என்று நீங்கள் கேள்விப்பட்ட தில்லையா? நீங்கள் நன்மையாளர்களாகவும், தீமையாளர்களாகவும், இருப்பது போலவே, உங்களுக்கு அதிகாரிகளும் நியமிக்கப்படுவார்கள். உங்களுடைய அதிகாரிகள் உங்களின் அனுஷ்டானங்களேயாகும். அவை உங்கள்மீது தீர்ப்புச் சொல்லுமேயன்றி வேறில்லை. அல்லாஹ் தன் அடியார்கள்மீது அநியாயம் செய்பவனன்று. அவனோ சொற்பத்துக்கு அதிகத்தை பதிலாக அளிப்பவன். அவனோ நல்லோனைப் பாவியென்றும் மெய்யனை பொய்யனென்றும் அவன் பாவிப்பவனன்று!

அன்பர்களே, நீங்கள் ஊழியம் செய்தால், பிறரும் உங்களுக்கு ஊழியம் செய்வர். நீங்கள் முன்னிற்க முயன்றால், பிறர் உங்கள் முன்

கொண்டு வந்து நிறுத்தப்படுவார்கள். மெய்ப்பொருளின் ஊழியர்களாக முற்படுங்கள். உங்களுக்கு உண்மை லாப நஷ்டம் ஒன்றும் விளைவிக்க இயலாத மன்னர்களின் ஊழியத்தில் மதிமயங்கி அல்லாஹ்வை மறந்துவிடாதீர்கள். அவர்கள் உங்களுக்குக் கொடுக்கக் கூடியது தானென்ன? உங்களுடைய தலையெழுத்தில் இல்லாததை அவர்கள் தருவார்களா, இறைவன் உங்கள் ஏட்டில் எழுதாதிருப்பதை மன்னர் களால் எழுதிவிடமுடியுமா? எவ்விஷயமும் உண்மையில் சிருஷ்டிக்குரிய தாகாது. எதையும் சிருஷ்டிகள் தம் புறத்திலிருந்து கொடுத்திருப்பதாக நினைத்துவிடுபவன். காபிராகிவிட்டான். கொடுப்பவனும் கொடுக்கா தவனும், லாப நஷ்டம் விளைவிப்பவனும், முன்செல்லச் செய்பவனும் அல்லாஹுத்த ஆலாவன்றிப் பிறிதொன்றுமில்லை என்பதை நீங்கள் உணரவில்லையா? உணர்ந்துள்ளோம் என்று பதிலிறுப்பீர்களோ! அப்படியாயின், அவனைவிட அனுஷ்டானத்தில் மற்றதைப் பெரிதாகப் பாவிக்கும் உங்கள் உணர்வுதானென்ன? உங்கள் இம்மை, மறுமையை நீங்கள் பாழ்படுத்திக் கொண்டிருப்பது பற்றி கைசேதமே! அல்லாஹ்வுக்கு அடிபணிதல் என்பதை நப்ஸுக்கும், இச்சைக்கும், ஷைத்தானுக்கும், சிருஷ்டிக்கும் அடிபணிதலைக் கொண்டு பாழாக்குகிறீர்கள். உங்கள் நம்பிக்கையை பிறரிடம் முறையிட்டுத் திரிவதன் மூலம் கெடுத்துக் கொள்கிறீர்கள். அல்லாஹுத் தஆலா பயபக்தியாளர்களின் பாதுகாவலன், ஆதரவாளன், கற்றுக் கொடுப்பவன், தனது மெய்ஞ் ஞானத்தையளிப்பவன், துணையாளன், தீமையிலிருந்து பாதுகாப்பவன், அவர்கள் உள்ளங்களைப் பார்ப்பவன். அவர்கள் கனவிலும் எதிர்பாராத திக்கிலிருந்து உணவு அளிப்பவன் என்பதை நீங்கள் அறியவில்லையா? "ஆதமின் மகனே நீ உண் அயலகத்தான் முன் வெட்கமடைவதுபோல் என் முன்னும் வெட்கமடைவாயாக!" என்று இறைவன் அருளியுள்ளான். "அடியான் கதவுகளை அடைத்துவிட்டுத் திரையிட்டுக் கொண்டு, சிருஷ்டிகளின் பார்வையைவிட்டு மறைந்து தனிமையில் இறைவன் கட்டளைக்கு மாற்றமாக நடக்கும்போது, "ஆதமின் மகனே, உன்னைப் பார்க்கக் கூடியவர்கள் அனைவரிலும் என்னை அலட்சியமானவனாகப் பாவித்து விட்டாயே! (பிறருக்குப் பயந்தாய், வெட்கினாய்; எந்த

நிலையிலும் பார்க்கக்கூடிய எனக்குப் பயப்பட்டாயில்லை– வெட்கித்தாயில்லை) என்று அல்லாஹ் கூறுகிறான் என்று நபி பெருமான் (ஸல்) அருளியுள்ளதை எண்ணிப் பாருங்கள்.

பத்தாவது பிரசங்கம்

ஹிஜ்ரி 545 ஷவ்வால் பிறை 24 ஞாயிற்றுக்கிழமை காலையில் ஆண்டகை அவர்கள் நிகழ்த்தியது:

"நானும் என் உம்மத்தில் தூய்மையுள்ள பக்தர்களும் பாசாங்கு என்பதிலிருந்து விடுதலை பெற்றவர்களாவோம்"என்று ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அருளியிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. உண்மை பக்தர்களின் வணக்கம் பாசாங்காய் இருக்கமுடியாது; ஏனெனில், வணக்கம் என்பது அவர்கள் இயல்பாய் ஆகிவிட்டது, ஆகையால், தோற்றத்திலும் அகமியத்திலும் பாசாங்கோ, நடிப்போ இன்றியே அவர்கள் அல்லாஹ்வை வணங்குவார்கள். அதற்கு மாற்றமாகக் கலப்பற்ற நிர்ணயமற்ற முனாபிக்குகளோ எந்நிலையிலும் பாசாங்கு செய்பவர்கள்தாம்; குறிப்பாக அவர்கள் வணக்கம் அவ்விதமிருந்து வரும். தோற்றத்தின் அளவுக்குச் சிரமத்துடன் நடித்து விடுவார்கள்; அகமியத்தில் சற்றேனும் கடைப்பிடிக்க மாட்டார்கள். தூய பக்தர்களின் பதவிக்குள் புகுவதற்கு அத்தகைய முனாபிக்குகளுக்குச் சக்தி ஏது? தூய பக்தர்கள் முன்னிருக்கும் பதவிகளிலோ ஒவ்வோர் இடத்துக்கும் ஒரு பேச்சு உண்டு; ஒவ்வொரு காரியத்துக்கும் ஓர் ஆளுண்டு. போருக்கென்றும் பிரத்தியேகமாய் மனிதர்கள் சிருஷ்டிக்கப்பட்டுள்ளார்கள்.

முனாபிக்குகளே,உங்களுடைய (நிபாக்) உள்ளொன்று வைத்துப் புறமொன்றாய் இருக்கும் கலப்பு நிலையிலிருந்து மீட்சியை நாடுங்கள்! உங்கள் வேஷத்திலிருந்து வெளியேறுங்கள்! ஷைத்தான் உங்களைக் கெடுத்து, உங்களைப் பார்த்துச் சிரிக்குமாறு ஏன் விட்டுக் கொண்டிருக்கிறீர்கள்? நீங்கள் தொழுவதும் நோன்பு பிடிப்பதும் சிருஷ்டிகளை முன்னிட்டவையாய் உள்ளனவேயன்றிச் சிருஷ்டித்தவனை முன்னிட்டவையாய் இல்லை. அங்ஙனமே (பகட்டுக்காகத்) தருமம் கொடுப்பதும், ஹஜ்ஜு செய்வதும் உங்களிடமிருப்பினும் உங்களுடைய இம்முயற்சிகள்

யாவும் பயனற்ற கருமங்களாகவே ஆகிவிடுகின்றன. இதன் பயனாய் ஜுவாவை நிறைந்த அக்கினிக்கு இரையாகவேண்டிய நிலை ஏற்பட்டும், நிலைமையையுணர்ந்து அதற்குரிய பரிகாரமும், மீட்சியும், மன்னிப்பும் அடையாதிருந்துவருகிறீர்கள்.

புதிதாகச் சிருஷ்டித் திருப்பதையும் புதிய விஷயங்களையும் விட்டு ஷரீஅத்தை ஒட்டிய அனுஷ்டானத்தைக் கைக்கொள்ளுங்கள். முன்னோர்களான நேர்மையாளர்களின் நல்வழியைக் கடைப்பிடியுங்கள். (ஷரீஅத்தின்) நேரிய பாலத்தில் செல்லுங்கள். 'முஅதஸிலா'க்களைப் போல் சிருஷ்டித்தவனுக்குச் சிருஷ்டியின் குணம் கொடுப்பது போன்ற உபமானம் உண்டாக்க முற்படாதீர்கள். 'தக்தீர்' எழுதி முடிந்துபோய் விட்டதால் இறைவன் ஒன்றும் செய்யாதிருக்கிறானென்று வரையறுத்துப் பேசவும் முன்வராதீர்கள். இவற்றை விடுத்து அபிநயமும், செயற்கை மயமும், கஷ்டமும், பகுத்தறிவு ஆட்டங்களுமின்றி, ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் ஸுன்னத்துப்படி ஒழுகுங்கள்! உங்கள் கைசேத நிலையை என்னென்பேன்! திருகுர்ஆனை மனனம் செய்கிறீர்கள்; ஆனால், அதன்படி அனுஷ்டிக்கிறீர்களில்லை. ஸுன்னத்தை நினைவு கூர்கிறீர்கள்! ஆனால் அதன்படி ஒழுகுகிறீர்களில்லை; ஏன் அப்படிச் செய்கிறீர்கள்? பிறருக்குச் சன்மானம் புகட்டுகிறீர்கள்; நீங்கள் மட்டும் அதன்படி நடக்கிறீர்களில்லை. பிறரை தீமையிலிருந்து விலக்குகிறீர்கள்: நீங்கள் மட்டும் அதிலிருந்து விலகக் காணோம். "அல்லாஹ்வின் கடுங்கோபத்துக்குரிய விஷயம் நீங்கள் அனுஷ்டிக்காததைக் கூறுவதாய் இருக்கிறது" என்று அல்லாஹு ஜல்லஜலாலுஹு மொழிந்துள்ளான். சொல்வதொன்று செய்வதொன்றென்றுள்ள இழிநிலையில் இருப்பதேன்? உங்களுக்கு வெட்கம் உண்டாவதில்லையா? ஈமான் இல்லாத நிலையில் ஈமான் இருப்பதாக ஏன் பறைசாற்றுகிறீர்கள்? ஈமான் என்றால் என்ன? ஈமானே ஆபத்துகளிடையே எதிர்த்து நிற்பது; அதுவே பாரங்களை தாங்க உதவுவது; அதுவே போர்புரிவது; உலகப்பொருள் எத்துணை இருப்பினும் அதை இறைத்து விடுவது; அல்லாஹ்வுக்காக அள்ளிக் கொடுக்கச் செய்வது, அபிலாஷைகளை முன்னிட்டும் ஷைத்தானிய எண்ணங்களை முன்னிட்டும் தருமம்

செய்யச் சொல்வதே நப்ஸின் குணமாகும்.

மெய்ப்பொருளின் வாயிலை விடுபவன் சிருஷ்டியின் வாயிலை அண்டிய வனாகிறான். அல்லாஹ்வின் வழியை விடுபவன் சிருஷ்டியின் வழிகளில் அமர்ந்தவனாகிறான்.

ஓர் அடியானுடைய நன்மையை இறைவன் நாடினால் அவ்வடியான் முன்னிருக்கும் சிருஷ்டியின் கதவுகளை அடைத்துவிடுகிறான்; சிருஷ்டிகளின் உதவியைத் தடுத்து விடுகிறான். இவை கொண்டு தன்னளவில் அவ்வடியானைத் திருப்திக் கொள்கிறான். குளக்கரையில் நின்று கொண்டிருந்தவனை சமுத்திரக் கரையோரம் நிற்கச் செய்து விடுகிறான். ஒன்றை மற்றதிலிருந்து அப்புறப்படுத்தி, எல்லாம் உள்ள ஒன்றளவில் நிறுத்திவிடுகிறான். மழை காலத்தில் குளக்கரையில் நிற்பதால் சந்தோஷமடைபவனே, உன் நிலைமையோ கைசேதத்துக் குரியது! சீக்கிரம் கோடைவரும்போது இக்குளம் வற்றிவிடும்; நீயும் அதன் கரையிலிருந்து வாடி மரிப்பாய்! சமுத்திரக் கரைக்கு ஓடு! அங்குள்ள தண்ணீர்தான் வற்றாதிருக்கும் என்றும் அதிகமாகிக் கொண்டிருக்கும்.

அல்லாஹ்வுடன் வாழ்வது கொண்டே உண்மைச் செல்வமும், உண்மை பதிப்பும், உண்மை அதிகாரமும், உண்மை வழிகாட்டும் சக்தியும் அடையப் பெறுவாய். அல்லாஹ்வைப் பற்றிப்பிடிப்பது கொண்டு செல்வந்தனாகித் தேவையைப் பெற்றிருப்பவனைச் சகலமும் எதிர்பார்க்க வேண்டியதாகிவிடுகிறது. ஆனால், இப்பேறுகள் வெறும் அபிலாஷையால் அடையக்கூடியவையல்ல; உள்ளத்தில் இடம் பெற்று, அனுஷ்டானத்தில் உண்மைப்படுத்தப்பட வேண்டிய விஷயத்தால் ஆகக்கூடியவைதாம்.

அன்பனே, நீ வேண்டுவதென்ன? மௌனத்தை வழக்கமாகவும், பெயர் பகிரங்கமாகாதிருப்பதைப் போர்வையாகவும் சிருஷ்டிகளிலிருந்து வெருண்டோடுவதை லட்சியமாகவும் கொண்டிருப்பாயாக! பூமிக்குள் சுரங்கம் தோண்டி ஆங்கு மறைந்திருக்க முடிந்தால் அப்படியும் செய்துகொள்! எதுவரை? ஈமான் அதன் யௌவனப் பருவத்தையும், நிச்சயார்த்தம் (யக்கீன்) எனும் பாதம் ஸ்திரமான நிலைமையையும்

அடைந்து, உனக்குள் குடிகொண்டிருக்கும் சத்தியத்துக்குச் சிறகுகளேற் பட்டு, உன் அகக் கண்கள் திறக்கும்வரை! அப்போதே உன் வீடு எனும் பூமியிலிருந்து உயர்ந்து இறைவனுடைய ஞானமெனும் ஆகாசத்தில் பறப்பது முடியும் அந்நிலைமையுடனேயே, உஷாரான வழி தெரிந்த தோழன் சகிதம் கிழக்கிலும், மேற்கிலும், தரையிலும், கடலிலும், காட்டிலும், மலையிலும், வானத்திலும் பூமியிலும் சுற்றக் கூடியவனாவாய்; அந்நிலைமையில் உன் நாவை அவிழ்த்து விடு; பெயர் பகிரங்கமாகா திருக்கும் போர்வையை எடுத்தெறி! சிருஷ்டிகளிடமிருந்து வெருண் டோடுவதையும் விட்டொழி;உன் சுரங்கத்திலிருந்து வெளியேறிச் சிருஷ்டிகளின் பக்கம் செல். ஏனெனில், நீ சிருஷ்டிகளுக்குரிய ஒளடதம் ஆகிவிடுவாய். சிருஷ்டிகளின் அதிகத்தையும் சொற்பத்தையும் புகழை யும், இகழையும் சட்டைசெய்யாது கவலையற்றவனாயிரு! ஏனெனில், ('தவக்கலி'ன் பறவையாகிய) உனக்கு எங்கிருப்பினும் ஆங்கு உனக்குரிய இரையும் இருக்கக்காண்பாய்! எங்கிருப்பினும் உன் ரப்புல் ஆலமீனோடேயே இருந்துவருவாய்.

சமூகத்தவர்களே, சிருஷ்டிகர்த்தனை அறியுங்கள் அறிந்து அவன் முன்பாக அடிபணியுங்கள். உங்கள் உள்ளம் அவனில் நின்று தூரமாய் இருக்கும்வரை நீங்கள் ஒழுக்கமற்றவர்களாகவே இருப்பீர்கள். சமீபம் அடைந்ததும் ஒழுக்கமுள்ளவர்களாகி விடுவீர்கள். உபமானமாக, ஓர் அரசனின் தர்பாரை எடுத்துக் கொள்ளுங்கள். தர்பாரின் வாயிலில் காவலாட்களும் ஏவலாட்களும் பேசிக் கொண்டிருப்பதுண்டு. ஆனால், மன்னன் வரும்போது, எங்கும் நிசப்தமாகி அனைவரும் பயபக்தியுடன் நிற்கின்றனர். ஒவ்வொருவனும் தன் தன் இடத்திற்குச் சென்று ஒழுங்கு பெற நின்றுவிடுகிறான். அதைப்போல், சிருஷ்டிகளின் மீது கவனம் பாய்ந்துவிடுவதன் காரணம் சிருஷ்டிகர்த்தனின் சமீபத்துவத்தை அடையாக் குறையாலேயாகும்.

போலித் தெய்வங்களைத் துண்டித்து, சாதனங்களை வெட்டிவிட்டு, லாப நஷ்டத்துக்காகச் சிருஷ்டியின்மீது நோக்கு வைப்பதை ஒழிக்காதவரை நீங்கள் ஜெயம் பெற முடியாது. நீங்கள் ஆரோக்கியமாய் இருப்பதாகத் தோன்றினாலும், உண்மையில் வியாதியஸ்தர்களே

யாவீர்கள். பார்வைக்குச் செல்வர்களாய் இருப்பினும், உண்மையில் தரித்திரர்களேயாவீர்கள். (உலகப் பார்வைக்கு) உயிருள்ளவர்களாய் இருப்பினும், (உண்மைப்பார்வைக்கு) பிணங்களேயாவீர்கள். வெளித் தோற்றத்துக்கு உண்டானவர்களாயிருப்பினும் உண்மையில் இல்லாதவர் களேயாவீர்கள். மெய்ப்பொருளைவிட்டு வெருண்டோடுவதற்கு இன்னும் எத்தனை காலந்தான் ஆளாகிக் கொண்டிருப்பீர்கள்? இன்னும் எத்தனை நாட்கள்தான் மறுமையைக் காலியாக விட்டுவிட்டு இம்மையில் மட்டும் குடியிருந்து வரப்போகிறீர்கள்? உங்களுள் ஒவ்வொரு மானிட னுக்கும் இருப்பது ஒரே இதயமன்றோ? அந்நிலையில் அவ்விதயத்தில் இம்மையின் பிரியமும் மறுமையின் உவப்பும் ஒருங்கே இடம் பெறுவது எப்படி? ஒரே இடத்தில் சிருஷ்டிகர்த்தனின் ஞாபகமும் அதற்குச் சமமாகச் சிருஷ்டியின் ஞாபகமும் எங்ஙனம் இருக்க முடியும்? அங்ஙனம் இருப்பதாக சொல்வது பொய்யாகும். "பொய் ஈமானை அசுத்தப் படுத்துகிறது"என்பது நபி வாக்கியமாகும்.

எந்தப் பாத்திரத்திலிருந்தும் அதனுள் இருப்பதுதான் வெளி யாகும். ஆனால், உங்களுடைய அனுஷ்டானங்கள் உங்களின் அகப் பிரமாணங்களின் சாட்சியாகும். உங்களுடைய வெளிரங்கம், உள் ரங்கத்துக்குரிய சான்றாகும். இதனாலேயே பெரியார்கள் சிலர் "வெளிரங்கம் உள் ரங்கத்தின் மகுடமாகும்" என்றுரைத்துள்ளார்கள்.

உங்கள் அந்தரங்கம் மெய்ப்பொருளான அல்லாஹ்வுக்கும் அவனுடைய விசேஷமான அடியார்களுக்கும் பகிரங்கமாகத் தெரிவதுதான். இத்தகைய விசேஷமான அடியார்களுள் எவரும் கிடைத்துவிட்டால் அவர்முன் ஒழுக்கத்துடன் இருங்கள். அவரைச் சந்திக்கும்முன் உங்களுடைய பாவங்களிலிருந்து மீட்சி (தவ்பா) தேடுங்கள். அவர்முன் தாழ்மையும் அடக்கமும் கொண்டவர்களாய் இருங்கள். நேர்மையாளர்களான நல்லடியார்களின் முன் தாழ்மை யுடனிருந்தால், அல்லாஹ்வின்முன் அடிபணிதலுடனிருப்பவர் களாவீர்கள். மரியாதையுள்ளவர்களாய்த் திகழுங்கள்; ஏனெனில், மரியாதையுடன் நடப்பவர்களுக்கு அல்லாஹ் உயர்வை அளிக்கிறான் "உங்கள் பெரியார்களிடம் 'பரக்கத்' இருக்கிறது"என்று நபி (ஸல்)

அவர்கள் அருளியுள்ளார்கள். பெரியவர்களாய் இருப்பவர்களை மட்டு மன்று; வயது கூடுதலாய் இருப்பதுடன், ஏவலை அனுசரித்து விலக்கலைப் பேணி வருவதும், பயபக்திப் பரிசுத்தமும், வேதத்தையும் ஸுன்னத்தையும் பின்பற்றலும் அவசியமாகும். ஏனெனில், மரியாதைக்கும் ஸலாமுக்கும் உரித்தாகக் கூடாத கிழவர்களும் இருப்பதுண்டு; அத்தகையோரின் சகவாசத்தினால் நற்பேறுகள் கிடைப்பது எப்படி?

பெரியவர்கள் யார்? பயபக்தியுள்ளவர்கள்–நன்மை செய்பவர்கள்– பேணுதலுள்ளவர்கள் – அறிந்து கொண்டு அனுஷ்டானமும் செய்ப வர்கள்–அனுஷ்டானத்தில் உண்மை நிர்ணயம் வாய்ந்தவர்கள்– இவர்களே பெரியவர்களாவார்கள். பரிசுத்தமும், அல்லாஹ் அல்லாத அனைத்தையும் விட்டு முகம் திரும்பியிருத்தலும் வாய்ந்த இதயமுடை யோரே பெரியார்களாகும்; அல்லாஹு ஜல்லஜலாலுஹுவைப் பற்றிய ஞானமும் மெய்யனுபவமும் (மஃரிபா) குடிகொண்டதும், அவனடைய சமீபத்துவம் அடைந்ததுமான இதயமுடையோரே பெரியார்களாவர்.

இதயத்திலுதிக்க வேண்டிய மெய்யறிவு அதிகமாகும் அளவுக்கே அல்லாஹ்வின் சமீபத்துவத்தையும் அடைபவர்களாவீர்கள். இம்மைப் பற்று இருக்கும் இதயம் அல்லாஹ்வை விட்டுத் திரையிடப்பட்டதாகும்; மறுமைப் பற்று இருக்கும் இதயம் அல்லாஹ்வின் சமீபத்துவத்தை விட்டுத் திரையிடப்பட்டதாகும்.

உலகப் பற்று அதிகரிக்குமளவுக்கு மறுமைப் பற்று குறைந்துவிடும். மறுமைப் பற்று அதிகரிக்குமளவுக்கு அல்லாஹ்விடம் பாசம் குறைந்து விடும். (இம்மையையும் மறுமையையும் மறந்து, அவன் அன்புக்கு உரித்தாவதையே லட்சியமாகக் கொள்ளவேண்டுமென்பது பொருள்.)

உங்கள் நிலைமையை நன்கு உணர்ந்து கொள்ளுங்கள்; உங்களை அல்லாஹ் எங்கே வைக்கவில்லையோ அங்கே தங்கிவிடாதீர்கள். இதனாலேயே, "தன் வரையறையை உணராதவனைத் தக்தீர் தன் வரையறையை உணருமாறு செய்துவிடுகிறது"என்று ஒரு பெரியார் கூறியுள்ளார். நீங்கள் உட்காருவதற்கு அருகதையில்லாத இடத்தில்–

எடுத்தெறியப் பட்டுப்போகக் கூடிய இடத்தில் – உட்கார முற்படாதீர்கள். ஓர் வீட்டுக்குச் சென்றால், வீட்டுக்காரன் உங்களுக்களிக்காத ஆசனத்தில் உட்காருவது தகுமா? பிறகு, உங்களை அவ்வாசனம் விட்டு உங்களுக்குரிய ஆசனத்திலமரச் சொல்லப்பட்டு, மறுத்தால் அவமான மடைய வேண்டுமல்லவா?

அன்பர்களே, தங்களுடைய ஜீவிய காலத்தை அனுஷ்டானமின்றி ஞானத்தை எழுதுவதிலும் மனனஞ்செய்வதிலும் வீணாக்கியவர்களும் உங்களில் உண்டு இதனால் உங்களுக்கென்ன பயன்? நபி (ஸல்) அவர்கள் அருளியிருப்பதாவது: 'சிருஷ்டிகள் உங்கள் பிரஜைகளே; உங்களுடைய பிரஜைகளுக்கிடையே என்னென்ன செய்து முடித்தீர்கள்?' என்று நபிமார்களும் உலமாக்களும் 'கியாமத்து' நாளன்று கேட்கப்படுவார்கள்; 'நீங்கள் என் புதையல்களின் பொக்கிஷதாரர்களாய் இருந்தீர்கள்; ஏழைகளைச் சம்ரட்சித்தீர்களா? அனாதைகளைப் பராமரித்தீர்களா? உங்கள் சொத்துக்களில் எவ்வளவு விதியாக்கப் பட்டிருந்ததோ அவ்வளவு வெளியே கொடுத்தீர்களா? என்று மன்னர் களும் செல்வர்களும் வினவப்படுவார்கள்.

சமூகத்தவர்களே, ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் சத்திய போதனைகளிலிருந்து படிப்பினைகளை அடையப்பெறுங்கள்! அவர்களிட்ட ஆணைகளைத் தலைமேல் ஏற்றுக்கொள்ளுங்கள்.

உங்கள் கடின இதயங் கண்டு வருந்துகிறேன். சிருஷ்டிகள் இழைக்கும் தவறுகளைப் பொறுத்துக் கொள்ளக் கூடிய பலத்தை எனக்களித்த தூய ரப்பைத் துதிக்கிறேன். உங்களை விட்டுப் புறம்பாக வெளியேறிவிட வேண்டுமெனும் விருப்பம் வரும்போது, தக்தீரின் ஞாபகமே என்னைத் தடைப்படுத்திவிடுகிறது. என் சொந்த விஷயத் திலோ, நான் சாந்தி அடைந்தவன்; மன்னனின் பூங்காவனத்து விருக்ஷக் கொப்பில் கூடுகட்டிக் கொண்டிருக்கும் பறவைக்கு ஏன் சாந்தி இராது?

உள்ளொன்று வைத்துப் புறமொன்றாயிருக்கும் முனாபிக்குகளில் சிலர், நான் இந்நகரிலிருந்து போய்விட வேண்டுமென்று விரும்புகி றார்கள். அவர்களுக்கு நான் எச்சரிக்கை செய்ய விரும்புகிறேன். நான்

ஏதும் செய்ய நினைத்துவிட்டால் நிலைமை மாறிவிடும்; விஷயமே வேறாகிவிடும், அல்லாஹ்வின் தண்டனைகளை வரவழைக்க அதிகநேரம் பிடிக்காது. ஆகையால், தக்தீரின் கட்டுக்குள் இருந்து வருகிறேன். யா அல்லாஹ், சமாதானமும் கருணையும் உண்டாவதாக!

என்னை அலட்சியம் செய்ய நினைக்கும் முனாபிக்குகள் நான் சத்தியத்தின் தலைவாயிலில் நிற்பவன் என்பதை உணரட்டும். நான் சத்தியத்தின் பக்கல் மக்களை அழைத்துக் கொண்டிருப்பவன். என்னை எதிர்க்க நினைப்பவர்கள் தம் வினாக்களின் விடையை சீக்கிரமே அடைந்து கொள்வார்கள். நான் ஒரு விரலை அசைத்தால் அதன் கீழ் ஆயிரம் விரல்கள் ஆடும் என்பதை இவர்கள் உணரவில்லையா?

முனாபிக்குகளே, இறைத் தண்டனையை இம்மையிலும் நீங்கள் பார்க்கத்தான் போகிறீர்கள். காலம் கர்ப்பவதியாய் இருந்து வரு கிறது. என்ன பிறக்க விருக்கிறதென்பதும் சீக்கிரமே புலனாகிவிடும். நானோ அல்லாஹ்வின் (குதுரத்து) சக்தியெனும் கரத்தால் பிடிக்கப்பட்டிருப் பவன். அவனோ சில சமயங்களில் என்னை மலையாக்கி விடுகிறான்; மற்றுஞ் சில சமயங்களில் அணுவாக்கி விடுகிறான். சில நேரங்களில் சமுத்திரமாக்கி விடுகிறான்; மற்றுஞ் சில நேரங்களில் துளியாக்கி விடுகிறான். சில வேளைகளில் சூரியனாக்கி விடுகிறான்; மற்றும் சில வேளைகளில் மின்மினிப் பூச்சியாக்கி விடுகிறான். இரவு பகலை மாற்றி மாற்றி அவன் வெளியாக்குவது போலத் தன் நாட்டப்படி என்னை ஆட்கொண்டுள்ளான். "ஒவ்வொரு நாளும் அவன் புதுச் சுடருடன் இருக்கிறான்" (திருகுர்ஆன்) என்பதில், ஒவ்வொரு தினமென்றால் தினம் மட்டுமன்று; ஒவ்வொரு வினாடியும் ஒரு சுடர்காட்டுபவன் என்ற அர்த்தமும் உண்டு. ஒவ்வொரு வினாடியும் தெய்வத்தின் ஜோதிச் சுடர்களைக் கண்டு களிக்கும் மெய்யன்பர்களுக்கே இப்பேச்சு உரித்தாகும்.

அன்பர்களே, நீங்கள் மனோவிலாசமும் இதய சாந்தியும் விரும்பினால், சிருஷ்டிகளின் பேச்சைக்கேட்டு நடக்காதீர்கள்; அவர் களின் கூற்றை லட்சியம் செய்யாதீர்கள். தம்மை படைத்தவனுடைய பொருத்தத்தையே பெறாதிருப்பவர்கள், உங்களைச் சந்தோஷமடையச்

செய்வதெப்படி? இத்தகையோரில் பெரும்பான்மையானவர்கள் அறிவற்றவர்கள்; ஆன்ம திருஷ்டியும் ஈமானும் இல்லாதவர்கள்; அவர்கள் பொய்ப்பிப்பவர்களேயன்றி மெய்ப்பிப்பவர்களல்ல.

இத்தகையோரை விடுத்து, மெய்ப்பொருளைத் தவிர யாவையும் அலட்சியம் செய்யக்கூடிய–மற்றவற்றுக்குச் செவி சாய்க்காமலிருக்கும்–மற்றவற்றைக் கண்ணெடுத்துப் பார்க்காமலிருக்கும்–நல்லோர்களைத் தேடிப் பின்பற்றுங்கள்.

இறைவனுடைய பொருத்தம் பெறுவதற்காகச் சிருஷ்டிகளின் புறத்தால் வரும் தொந்தரவுகளைப் பொறுமையுடன் தாங்கிக் கொள்ளுங்கள்.

உங்களை அல்லாஹ் எச்சோதனைகளுக்கு ஆளாக்கினாலும் அதில் பொறுமையுடன் திகழுங்கள். ஏனெனில், தன் சங்கை பொருந்திய நல்லடியார்கள் விஷயத்தில் இம்முறையையே இறைவன் கையாண்டு வருவது வழக்கம். அவன் தன்னைத்தவிர, இதரப் பொருள்களின் சம்பந்தங்களை களையுமாறு செய்கிறான்; விதவிதமான கஷ்டத்துக்கும் துயரத்துக்கும் அவர்களை ஆளாக்கி, இம்மையையும் மறுமையையும் அவர்களுக்குக் குறுகியதாக்கிக் காண்பிக்கிறான்; அவர்கள் (பனாவாகி) அழிந்து போகுமாறு செய்து, பின்னர் தனக்கு மட்டும் சொந்தமான வாழ்வை மீண்டும் உண்டாக்கிக் கொடுக்கிறான். தன்னுடன் அவ்வடியார்கள் நிலை பெறும்படி செய்கிறான். புதிய உயிரை அவர்களுக்கு அளித்தருள்கிறான். "பிறகு மறுசிருஷ்டியாக அவனை உண்டாக்கினான்; சிருஷ்டிப் போர்களில் சிரேஷ்டனாகிய அல்லாஹ்வே சர்வ சம்பத்துக்களையும் அளிக்க வல்லவன்" (திருக்குர்ஆன்). இது விசேஷமான சிருஷ்டிப்பாகும்; இச்சிருஷ்டியைக் கொண்டு அடியான் இதர மானிடர்களைவிட விசேஷமானவனாகி விடுகிறான்; புதிய நிலைமையை அடைகிறான்; அல்லாஹ்வின் அடியானாக உண்மையில் ஆத்மீகத்துடன் திகழுகிறான். சிருஷ்டிப் பொருள்களைப் பார்த்தாலும் அவன் மனம் குறுகும் நிலை வந்துவிடுகிறது; ஆகையால் அவற்றை ஏறெடுத்துப் பார்க்கவும் விரும்பாதவனாகி விடுகிறான். சர்வ சிருஷ்டிகளும் அவன் முன்னிலையில் சமமாகி விடுகின்றன. புதிய

அதிகாரமும் சக்தியும் அவன் சூட்சுமக் கரங்களுக்கு அளிக்கப் படுகின்றன. அல்லாஹ்வும் தன் (குதுரத்தை) சக்தியை, மூஸா (அலை) நபியின் கரத்திலிருந்த கம்பின் வழியாய்க் காட்டியதேபோல் நல்லலடியான் விஷயத்திலும் காட்டுகிறான். தான் விரும்பிய எவ்வஸ்துவிலும் எக்கரத்திலும் தன் சக்தியை வெளிப்படுத்தும் அல்லாஹ்வுக்கே சர்வ தூய்மையும் துதியும் உரித்தாகுக!

மூஸாநபி (அலை) அவர்களின் கரத்திலிருந்த கம்பு மாந்திரீகர்கள் வெளிப்படுத்திய சகலமாயைகளையும் விழுங்கி விட்டுப் பின் தன் யதார்த்த நிலைமையிலேயே மாறுதல் அல்லாமல் இருந்துவிட வில்லையா? ஏன்? மூஸா நபியின் கரத்தில் வெளியாக்கப்படுவது மாந்திரீகமன்று, தெய்வீக சக்தியாகும்என்று அம்மாந்திரீகர்களுக்கு அல்லாஹ் காட்ட விரும்பினான். தமது மந்திரத்தினால் மாயைகளைச் சிருஷ்டித்தார்கள். மூஸா நபி (அலை) அவர்களின் கம்பின் வழியாலோ தெய்வீக சக்தி நின்று பிரகாசித்தது. இதனாலேயே மாந்திரீகர்களின் தலைவன் மூஸாநபியை உற்று நோக்கிப்பார்த்தான்; அகங்காரம், சுய அதிகாரம் ஆகியவற்றைக் கொண்டு அவர் ஒன்றையும் உருப்போட் டாரில்லை என்பதைக் கண்டான்; பயபக்தியுடன் அல்லாஹ்வின் ஞாபகத்தில் ஆழ்ந்திருப்பதை கண்டான். எனவே, மூஸா நபியின் சக்தியைக் கொண்டு நடந்ததன்று, ஆண்டவனின் சக்தியைக் கொண்டே நடந்தது எனக் கண்டான். இதனாலேயே மாந்திரீகர்களின் தலைவனும் அவன் சகாக்களும், பிர்ஔனையும் லட்சியம் செய்யாது மூஸாநபியை மெய்யர் என்று விசுவாசிக்கலாயினர்.

அன்பர்களே, மதியை மட்டும் பற்றிப் பிடிப்பதை விடுத்து நீங்கள் விதியின் (தக்தீரின்) பக்கல் முற்றும் பற்றி நிற்கும் காலம் என்றுதான் வருமோ? மதியை மட்டும் முற்றும் நம்பிக்கொண்டிருக்கும் வரை நீங்கள் அல்லாஹ்வின் சக்தியளவில் குதுரத் அளவில் போய்ச் சேருவதெப்படி? உங்களுடைய அனுஷ்டானங்களின் உள்ளும் புறமும் ஒத்த உண்மை, உங்களைச் சக்தியும் கிருபையும் நிறைந்த ரப்பின் வாயிலுக்குக் கொண்டு சேர்க்கும் நாளும் என்றுதான் வருமோ? மெய்ஞ்ஞானமெனும் சூரியன்

உதயமாகி மக்களுக்கும் மாக்களுக்குமிடையிலுள்ள வித்தியா சங்களை நீங்கள் உணரக்கூடிய நாளும் என்றுதான் வருமோ?

மெய்ப்பொருளாகிய இறைவன் சோதனைகளை உண்டாக்கும் போது அதுகண்டு வெருண்டோடாதீர்கள். நீங்கள் காரணப் பொருளின் பக்கமே முற்றிலும் சார்ந்துவிடுகிறீர்களா, அல்லது மெய்ப்பொருளின் பக்கம் சாய்கிறீர்களா என அவன் பரீட்சிக்கிறான். காணக்கூடிய பொருளை–வெளிரங்கமான பொருளைப் பற்றிப்பிடிக்கிறீர்களா அல்லது காணக்கூடாத பொருளை அகமியப்பொருளை பற்றிப் பிடிக்கிறீர்களா என பரீட்சிக்கிறான்.

யா அல்லாஹ், எங்கள் அனைவரையும் கடும் சோதனைகளுக்கு ஆளாக்காது, உன் சமீபத்துவத்தையும் அருளின் அகமியங்களையும் அளித்தருள்வாயாக! உன்னை விட்டுத் தூரப்பட்டுக்கிடக்காது. எங்களை ரட்சித்தருள்வாயாக! ஏனெனில் உன்னை விட்டுத் தூரமாய் இருப்பதற்கும் எங்களிடம் பலமில்லை; சோதனைகளைத் தாங்குவதற்கம் எங்களிடம் சக்தி இல்லை. சோதனையெனும் நெருப்பின்றியே உன் சமீபத்துவத்தை வேண்டி நிற்கிறோம்; சோதன ஏற்படுவது–உன் நாட்டத்தில்–அவசியமாய் இருப்பினும், அந்நெருப்பால் எரிக்கப்படக் கூடாதவாகளாக ஆக்கிவிடுவாயாக! இப்ராஹீம் (அலை) அவர்கள் மீது நெருப்பைக் குளிருமாறு செய்ததுபோல எங்களுக்கு வரும் சோதனைகளெனும் அக்கினியும் எங்களைத் தகிக்காது அருள் புரிவாயாக! இப்ராஹீம் (அலை) அவர்கள் அவ்வக்கினிக் குண்டலத்திலும் கூடச் சர்வ சிருஷ்டிகளின் தேவையுமற்றிருந்ததுபோல நாங்களும் தேவையற்றவர்களாகத் திகழுமாறு அருள்புரிவாயாக! அவர்களுக்கு உன் அன்பின் பரவசத்தையும் காரிய சித்திகளையும் பாதுகாப்பையும் அளித்ததுபோல எங்களுக்கும் அளித்தருள்வாயாக!

இப்ராஹீம் (அலை) அவர்கள் வழியில் அடியெடுத்து வைப்பதற்கு முதலாக வழித் தோழனையும், ஏகாந்தத்துக்கு முதலாகப் பக்திப் பரிபூரணத்தையும், வியாதி வருமுன் பத்தியத்தையும், சோதனை வருமுன் பொறுமையையும், விதிவசம் வருமுன் அதைக் கண்டு தலை சாய்க்கச் செய்யும் சித்தப் பொருத்தத்தையும் உண்டாக்கிக் கொண்டவர்

களாக விளங்கினார்கள். உங்கள் மூதாதையாகிய இப்ராஹீம் (அலை) அவர்களின் முன்மாதிரியிலிருந்து படிப்பினைப் பெறுங்கள்! அவர்களுடைய சொல் செயல் முறைகளை லட்சியமாகக் கொள்ளுங்கள்! அவர்கள் மீது சோதனைக் கடலிகுத் எந்த இறைவன் அருள் சொரிந்தானோ, எந்த இறைவன் அவர்களை சோதனையின் கடலில் நீந்தும்படி விதித்து அச்சோதனையிலும் கைகொடுத்தருளினானோ, எந்த இறைவன் பொய்யர்களை எதிர்க்கும்படி அவர்களுக்கு உத்தரவிட்டு அதிலும் பக்கபலமாய் இருந்தருளினானோ, எந்த இறைவன் அவர்களை மஹோன் னதங்களின்பால் ஏறும்படி செய்து அவர்களுக்கு வேண்டிய ஊட்டத்தையும் தந்தருளினானோ, எந்த இறைவன் சிருஷ்டிகளை யழைத்து அள்ளிக் கொடுக்குமாறு அவர்களுக்கு ஆணையிட்டு அதற்குரிய சாதனங்களையும் திரட்டிக் கொடுத்தானோ அந்த இறைவனுக்கே எல்லாப் புகழும்! இதுவே அகமியமான–மறைமுகமான நன்கொடையாகும்.

அன்பர்களே, அல்லாஹ் நிர்ணயித்த தக்தீரும் செயலும் வரும்போது, அவன்முன் அமைதியுடன்–மௌனமாய் இருப்பீர்களாக. அப்போதுதான் அவன் புறத்திலிருந்து அருள் மயங்கள் இறங்குவதை நீங்கள் காணமுடியும். ஜாலினூஸ் எனும் ஞானியின் சிஷ்யனைப்பற்றி நீங்கள் கேள்விப்பட்டதில்லையா? அச்சிஷ்யன் ஊமையன் போல அடக்கத்துடன் இருந்து ஜாலினூஸின் சகல ஞானங்களையும் எப்படிப் படித்துக் கொண்டான் என்று யோசித்துப் பாருங்கள் நீங்கள் அதிகம் வாயாடுவதாலும், எதிர்த்துக் கேள்விகள் போடுவதைக் கொண்டும், கலக மனப்பான்மையைக் கொண்டும் இறைவன் புறத்திலிருந்து வரக்கூடிய மெய்ஞ்ஞானங்களை அடைய முடியாது.

இறைவா, உன் திருச்சித்தத்துக்குப் பொருந்தியவர்களாக வாழும் நிலையை எங்களுக்களித்து, உன்னிடம் எதிர்த்து வாதாடும் மனப் பான்மையை விட்டொழிக்கும் சக்தியைக் கொடுத்து, இம்மையின் நலங் களையும், மறுமையின் நலன்களையும், நரகவேதனையிலிருந்து பாதுகாப்பையும் தந்தருள்வாயாக!

பதினோராவது பிரசங்கம்

ஹிஜ்ரி 545 ஷவ்வால் பிறை 26 செவ்வாய் அன்று ஆண்டகை அவர்கள் நிகழ்த்தியது:

சமூகத்தவர்களே, இறைவனை அறிய முற்படுங்கள். அவனை அறியாதவர்களாய் இருக்கத் துணிய வேண்டாம். அல்லாஹ்வுக்கே கீழ்ப் படியுங்கள்; அவனுக்கு மாற்றம் செய்யாதீர்கள். அவனுக்கு ஏற்றவர் களாகுங்கள். முரண்பட்டவர்களாகாதீர்கள். அவன் நாட்டம் நடப்பது கொண்டு பொருந்திக் கொள்ளுங்கள்; வாதாடாதீர்கள். இவ்வாறு அவனை, அவன் சிருஷ்டிகளைக் கொண்டு அறிந்துக் கொள்ளுங்கள்! அவனே சிருஷ்டிகளின் தோற்றத்தை நிர்ணயித்தவன்; அவனே சிருஷ்டிகளை சம்ரட்சிப்பவன். ஆதியும் அவனே; அந்தமும் அவனே. வெளிரங்கமும் அவனே; உள்ரங்கமும் அவனே. ஆதி நித்யனும் அவனே; என்றும் நித்யனாய் இருப்பவனும் அவனே; நாடியதை நடத்துபவனும் அவனே, "அவன் செய்வதுப் பற்றி பிறரால் கேள்வி கேட்கப்படமாட்டான்; சிருஷ்டிகளே கேள்வி கேட்கப்படுபவையாகும்" (திருகுர்ஆன்). செல்வந்தனாக்குபவனும் அவனே; தரித்திரனாக ஆக்குபவனும் அவனே; நலன் செய்பவனும் அவனே; உயிர்ப்பிப்பவனும் இறப்பிப்பவனும் அவனே; தண்டிக்க வல்லவனும் அவனே. பயத்துக்கும் எதிர்பார்த்து நிற்றலுக்கும் உரியவனும் அவனே. ஆகையால், அவனுக்கே பயப் படுங்கள்; ஏனையவற்றுக்குப் பயப்படாதீர்கள். அவனையே எதிர்பாருங்கள்; ஏனையவற்றை எதிர்பாராதீர்கள்.

அவனுடைய சக்தியையும் சட்டத்தையும் தொடர்ந்து அலை யுங்கள்; இறுதியில் சட்டத்தைச் சக்தி மிகைத்து விடுவதைக் காணலாம். வெள்ளையின் மீது பதிக்கப்பட்டிருக்கும் கறுப்புடன் (வெள்ளைத் தாளில் எழுதப்பட்ட திரு குர்ஆனுடன்) இணைந்த ஒழுக்க முடன் நடவுங்கள்; இறுதியில் அவனுக்கும் உங்களுக்குமிடையில் எந்நிலையிருக்க வேண்டுமோ, அந்நிலை ஏற்பட்டுவிடும். ஷரீஅத்தின் வரையறைகளைக் காப்பாற்றுங்கள். ஷரீஅத் என்றால், அதன் வெளிமுகத்தையும் மறைமுகத்தையும் ஒருங்கே எடுத்துக் கொள்வது இன்றியமையாதது

என்று சுட்டிக் காட்டுகிறேன். இத்தகைய (ஷரீஅத் தைக் கொண்டே அடையப்பெறும்) மஹோன்னத நிலைமையை நல் லோர்களில் ஒரு சிலரே அடைகிறார்கள். ஷரீஅத்தின் எல்லைக் கோட் டுக்குப் புறம்பான ஒன்றும் நமக்குத் தேவையில்லை. இக்கட்டடத்தினுள் செல்வனே புகுந்திருப்பவர்களே இதன் அகமியத்தை அறிய முடியும். இந்நிலை வெறும் வியாக்கியானம் கொண்டு அறிந்து கொள்ளக்கூடியதன்று.

உங்களுடைய சர்வ காரியங்களிலும் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர் களை முன்னிறுத்திக் கொண்டு–அவர்களுடைய ஏவல், விலக்கல், உபதேசம் ஆகியவற்றைப் பின்பற்றியொழுகுங்கள்! இத்தகைய வழிபடுதலில் ஸ்திரமாய் இருந்தால் ரப்புல் ஆலமீன் உங்களைத் தன் பால் அழைப்பான். அச்சமயம் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் அனுமதி பெற்றுக்கொண்டு அவன் சந்நிதானத்துக்கு ஏகுங்கள்!

'அப்தால்' என்ற நாமம் (பெரியார்களுக்கு) ஏன் ஏற்பட்டதெனின், 'அப்தால்' என்ற பதத்தின் அர்த்தம், மாறுதல் அடைந்தவர்கள் என்ப தாகும்.) அவர்கள் இறைவன் நாட்டத்தின் முன் தாமாக ஒரு நாட்டமும் வைக்காதிருப்பதனாலாகும்; இறைவனின் ஆதிக்கம் நடக்கையில் தம் ஆதிக்கத்தை ஒரு சிறிதும் பிரயோகிக்காதிருப்பதனாலாகும். (அவர்க ளுடைய மனோ நிலைமை சுய நிர்ணயம்–சுய ஆதிக்கம் என்ப திலிருந்து மாறி, தெய்வ நிர்ணயம்–தெய்வ ஆதிக்கமே குடிகொண்டதாகி விடுகிறது.) இத்தகைய பெரியார்கள் வெளிரங்கமான முடிவுகளைக் கொண்டு தீர்ப்புகள் செய்வார்கள்; வெளிரங்கமான அனுஷ்டானச் சட்டங்களின்படியே அனுஷ்டானமும் செய்வார்கள். அத்துடன் அவர்களுக்கென்று விசேஷமாக உள்ள அனுஷ்டான முறைகளிலும் ஈடுபட்டு வருவார்கள். இவ்வாறு அடக்கத்துடன் அவர்கள் பதவிகளில் உயர்வு பெற்றுக்கொண்டு செல்லச்செல்ல, அவர்களுக்குரிய ஏவல் விலக்கல்களும் அதிகரித்துக்கொண்டு போகின்றன. இறுதியில், ஷரீஅத்தே குடிகொண்டவர்களாய் – உருவானவர்களாய் ஆகிவிடு வதால் இக்கருத்தில், ஏவல் விலக்கல் தேவையற்றவர்களாகி விடுகிறார்கள். இத்தகையோர்கள் எந்நேரமும் அல்லாஹ்வுடன் இருப்பவர்களாய் வாழ்ந்தாலும், ஏவல் விலக்கலின்படி நடக்கும்நேரம்

வரும்போது, சுபாவமாகவே ஏவலைக் கடைபிடித்து விலக்கலை புறக் கணித்து விடுபவர்களாகிவிடுகின்றனர். ஏவல் விலக்கல் சம்பந்தப் பட்டவரை (முழுமனமும் அல்லாஹ் இடம் லயித்துவிடுவதால்) இவர் களைத் தெய்வீகச் சக்தியே பாதுகாத்து வர ஆரம்பித்து விடுகிறது. ஆகையால், இவர்கள் ஷரீஅத்தின் ஒரு நிபந்தனையையும் கூடக் கை நழுவ விடாத நிலைமையில் ஆகிவிடுகின்றனர். ஏனென்றால், பர்லான வணக்கங்களை (தொழுகையை) விடுவது மார்க்க முரணாகும்; விலக்கப்பட்டதுக்கு ஆளாகி விடுவது பாவமாகும்; பர்லான நிபந்தனைகள் எந்நிலையிலும் எடுபடமாட்டா.

அன்பர்களே, இறைவனின் உத்தரவின்படியும் ஞானத்தின்படியும் அனுஷ்டான முறைகளில் ஈடுபடுங்கள்! ஒருக்காலும் வரம்பு மீறாதீர்கள்; உங்கள்மீது விதிக்கப்பட்டுள்ள கடமைகளை ஒருக்காலும் மறக் காதீர்கள்! உங்களுடைய 'தான்' என்பதுடனும் போர் தொடுத்து வாருங் கள்! இறைவன் உதவி கிடைக்குமென்பதில் சந்தேகத்துக்கு இடமே கொடுக்க வேண்டாம். உங்கள் விடாமுயற்சியில் அவன் ஆதரவு அவசியம் வந்தே தீரும். அல்லாஹுத் தஆலா அருளுகிறான்: "நிச்சயமாக, அல்லாஹ் பொறுமையாளர்களுடன் இருக்கிறான்" என்று, மேலும் அவன் கூறுகிறான். "நமது வழியில் போர் தொடுப்பவர்களுக்கு (முயற்சி செய்பவர்களுக்கு) அவசியம் நாம் நம் வழியைக் காட்டுவோம்" என்று.

உங்களுடைய நப்ஸின் நாவு மெய்ப்பொருளின் மீது குறை கூறாமல் அதைத் தடுத்துக் கொள்ளுங்கள். அப்படிக் குறைகூறுபவர்களுக் கெதிராக, மெய்ப்பொருளின் பக்கத்து ஆளாக நடந்து, அவர்களும் அவனுடைய கட்டளைக்குக் கீழ்ப்படிந்து, விலக்கலைத் தவிர்க்குமாறு தூண்டுங்கள்; வழிகேடு, ஷரீஅத்தில் ஆகாத நவீனங்கள், இச்சை யையும் அகங்காரத்தையும் பின்பற்றல் ஆகியவற்றைவிட்டுத் தடுத்து வாருங்கள்; அல்லாஹ்வின் வேதத்துக்கும் ரஸூலுல்லாஹ்வின் ஸுன்னத்துக்கும் முரண்படாது நடக்குமாறு உபதேசியுங்கள்.

சமூகத்தவர்களே, அல்லாஹ்வின் வேதப் புஸ்தகத்தைச் சங்கை செய்யுங்கள். அதன் முன் ஒழுக்கத்துடனிருங்கள். உங்களுக்கும்

அல்லாஹ்வுக்குமிடையில் சம்பந்தம் உண்டாக்குவதாய் இருப்பது அதுவே. தெய்வ மொழியை ஒரு சிருஷ்டிப் பொருள் என்றழைக் காதீர்கள். "இது என் மொழி" என்று அல்லாஹ் அருளியுள்ளான்; அப்படியில்லை என்று நீங்கள் கூறினால், அல்லாஹ்வின் சொல்லுக்கு நீங்கள் மாற்ற மாய் திருகுர்ஆனை ஒரு சிருஷ்டிப் பொருள் என்றுரைத்தால், அல்லாஹ் வின்மீது குபுர் செய்தவர்களாவீர்கள்; திருக்குர்ஆன் உங்களிடமிருந்து தூரமாகிவிடும் நிலைமையை அடைந்துவிடுவீர்கள்.

நம்மால் படிக்கப்படும் இதே திருக்குர்ஆன், நம்மால் உச்சரிக்கப் படும் இதே திருகுர்ஆன். காதால் கேட்கப்படுவதும் கண்கொண்டு பார்க்கப்படுவதுமான இதே திருக்குர்ஆன், நமது மஸ்ஹப்களில் (பிரதி களில்) எழுதப்பட்டிருக்கும் இதே திருக்குர்ஆன் அல்லாஹ் ஜல்லஜலா லுஹுவின் (கலாம்) மொழியாகும். இமாம் ஷாபி (ரலி) அவர்களும், இமாம் அஹ்மது (ரலி) அவர்களும், "(கலம்) எழுதுகோல் சிருஷ்டிப் பொருளானாலும், எழுதப்பட்டிருப்பது (திருக்குர்ஆன்) சிருஷ்டிப் பொரு ளன்று" என்று கூறியுள்ளார்கள். இருதயம் சிருஷ்டிப் பொருளானாலும், அதனால் பாதுகாக்கப்படுவது (திருக்குர்ஆன்) சிருஷ்டிப் பொருளாகாது.

சமூகத்தவர்களே, திருக்குர்ஆன் விஷயத்தில் வாதாடுவது கொண்டன்று, அதன்படி ஒழுகுவது கொண்டு அதன் அபிமானிகளா குங்கள். கொள்கை சம்பந்தமாய் சில விஷயங்களேயுள்ளன. அனுஷ்டா னங்கள் ஏராளமாய் இருக்கின்றன. திருக்குர்ஆன்மீது நம்பிக்கை வைப்பது அத்தியாவசியமென்பதை உணருங்கள். உள்ளத்தைக் கொண்டு திருகுர்ஆனை உண்மையெனக் கண்டு உறுப்புக்களைக் கொண்டு அதன்படியுள்ள அனுஷ்டானத்தில் ஈடுபடுங்கள். இதிலேயே உங்களுக்கு நன்மையிருப்பதால் இதன்படியே ஒழுகுங்கள். 'முஃதஸிலா' (பகுத்தறிவு வாதிகளின்) கோஷ்டியின் குறைவுற்ற–ஊற்றுக்கு நிற்காத ஆதாரங்களைக் கண்டு ஏமாற்றமடைந்துவிடாதீர்கள்.

சமூகத்தவர்களே, மறைமொழி பகுத்தறிவினால் ஒருக்காலும் பொய்ப்படுத்தப்பட முடியாது. தெளிவான சத்தியத்தை மனோ அனுமானங்களின் வேறுபாட்டால் மாற்றிவிடுவது இயலாத காரியம்.

ஆதாரத்தைக் கைவிட்டுவிட்டு வெறும் கூற்றைப் பற்றிப்பிடிக் காதீர்கள். ஒரு சொத்து உங்களுக்கு உரியதென்று வெறுமனே வாயால் மட்டும் வாதாடுவது போதாது. அதற்குரிய ஆதாரங்களும் இருக்க வேண்டும். நபி (ஸல்) அவர்கள் "உரிமை பாராட்டுதல் என்றால் சாட்சி வேண்டும்" எனக் கூறியுள்ளார்கள்.

நாவில் மட்டும் திறமை இருந்து உள்ளம் அஞ்ஞானத்திலிருப்பின் யாது பயன்? "என் உம்மத்தில் உள்ள (உள்ளொன்று புறமொன்றான) முனாபிக்குகளில், நாவன்மையுள்ளவர்களின் விஷமத்திற்கே பெரிதும் பயப்படுகிறேன்" என்று நபி (ஸல்) அவர்கள் மொழிந்துள்ளார்களே!

அறிஞர்களே, அறிவீனர்களே, இங்குச் சமூகங் கொடுத்திருப் பவர்களே, அனைவரும் அல்லாஹ்வின்முன் நாணுபவர்களாய், அவனை அகக்கண் கொண்டு பார்ப்பவர்களாய், அவன்முன் அடிபணி பவர்களாய் ஆகுமாறு உபதேசிக்கிறேன். அவனது தக்தீருக்கு அடியில் உங்கள் நப்ஸ்களை வைத்துவிடுங்கள்; அவனது அருட்கொடைகளுக்கு நன்றியறிதலுள்ளவர்களாய்த் திகழுங்கள், அவனை அடிபணி தல் எனும் ஜோதி கொண்டு இருளை அகற்றி விடுங்கள். அப்படிச் செய்தால் அவன் சங்கையும் சிறப்பும் இம்மையிலும் மறுமையிலும் உங்களுக்கு உரித்தாவதைக் காண்பீர்கள்.

அன்பர்களே, உலகிலுள்ள எவ்வஸ்துவின் மீதும் பற்றற்றவர்களா குங்கள். இதர சகல பற்றுக்களும் அற்ற பக்தர்களானால் ஒரு வினாடி யேனும் நப்ஸுடன் இருந்து கெட்டலையாதவர்களாகி விடுவீர்கள்; நீங்கள் மறந்தாலும் ஞாபக மூட்டப்படுபவர்களாகிவிடுவீர்கள்; அயர்ந் தாலும் தூண்டப்படுபவர்களாகிவிடுவீர்கள்; அந்நிலையில் மற்றதை நீங்கள் பார்க்கக்கூட அல்லாஹ் விடமாட்டான்; அந்நிலையின் அருமையை அனுபவித்துப் பார்த்தவர்களே உணர்வார்கள். இவ்விதம் சிருஷ்டிகளின் புறத்திலிருந்து நிம்மதியை நாடாது அவன் புறத்தே அடைய நாடும் நல்லடியார்கள் வெகு சிலரே உளர்.

உள்ளொன்று வைத்துப் புறமொன்றானவர்களே, (முனாபிக்கு களே,) உங்களுடைய உள்ளங்களில் பேராபத்துக்களும் பெரும் துன்பங்

களுமே குவிந்து கிடக்கின்றன. அல்லாஹ்வுக்குகந்த அடியார் களோ அல்லாஹ் அல்லாத எப்பொருளின்மீதும் தங்கள் மனம் பாய்ந்துவிடும் போது, அப்பொருளை எடுத்தெறிந்து விடுகிறார்கள். அவர்கள் என்றும் நிம்மதியிலும் கார்மானத்திலும் இருந்து வருவதற்கு காரணம் ஒன்றே. அவர்கள் மெய்ப்பொருளினின்றே நிம்மதியை எதிர்பார்ப்பவர்களாய் அவன் முன்னிலையிலேயே விழுந்து கிடப்பார்கள்; அவன் அல்லாத சகல பொருள்கள் சம்பந்தப்பட்டவரை அந்தகர்களாகவே இருப்பார்கள், தங்கள் நாவு மெய்ப்பொருளைக் குறை கூறாவண்ணம் நாவை அறுத் தவர்களாய் வாழ்வார்கள். மாதங்களென்ன, வருடங்களானாலும் ஒரே நிலையில் மாறுபடாதிருப்பார்கள். அவர்களின்பால் மெய்ப்பொருள் நடந்து கொள்ளும் (அருள்) முறையிலும் மாறுதல் ஏற்படுவதில்லை. அவர்களே சிருஷ்டிகளுள் புத்திமான்களாவர். நீங்கள் அவர்களை பைத்தியக்காரர்கள் எனக் கூறலாம்; உங்களை அவர்கள் கூலி கிடைக்கும் நாளை நம்பாதவர்கள் எனக் கூறுவார்கள். அவர்கள் மெய்ப் பொருளின் முன் இளகிய மனதுடன் இருப்பார்கள்; தெய்வ பயம் நிறைந்த வர்களாய்த் திகழுவார்கள்; மெய்ப்பொருளின் சக்திச்சுடர் மீதுள்ள திரைகள் அவர்களுக்கு நீக்கப்படும் போதெல்லாம், பயத்தால் அவர்கள் நெஞ்சம் துண்டு துண்டாகப் பிளந்து போவதாய் இருக்கும். இந்நிலைமை யில் அவர்களைக் கண்ட இறைவன் உடனே தன் அன்புப் பெருக்கையும் அருட்கொடையையும் சொரிந்துவிடுகிறான்; அது கொண்டு பேரானந்தத்துடன் மீண்டும் நிம்மதியைப் பெறுவார்கள்.

என் மனோ நிலையை எடுத்துக் கூறுவதென்றால், மறுமையையும் மெய்யையும் தேடாதவனை முகம் கொடுத்துப் பார்க்கக்கூடப் பிரியமில் லாதவனாய் இருக்கிறேன். உலகம், சிருஷ்டி, அகங்காரம், இச்சை ஆகியவற்றின் தோட்டத்தில் கிடப்பவர்களை என்னென்பேன்! ஆம், அவர்கள் சுகமடைய வேண்டுவதை விரும்புகிறேன். அவர்கள் நோயாளிகளெனக் கொள்கிறேன்; வைத்தியன் நோயாளிகளுடன் பொறுமையையே கடைப் பிடிக்க வேண்டியதிருக்கிறதல்லவா!

உங்கள் நிலைமைகளை என்னிடம் மறைக்க முயல்கிறீர்கள். அது முடிவதெப்படி? மறுமையின் தேட்டவாளிகளாக நடித்தாலும், இம்மை

யையே உண்மையில் தேடுகிறவர்களாக இருக்கிறீர்கள். உங்கள் இதயங களில் எது பதிப்பிக்கப்பட்டிருக்கிறதோ அஃது உங்கள் நெற்றியிலும், பார்ப்பதற்கு கிடைப்பதாகத்தான் இருக்கிறது. எதை ரகசியமென்று நீங்கள் கருதுகிறீர்களோ அஃது உண்மையில் பகிரங் கமான விஷய மாகவே இருக்கிறது; நீங்கள் கையில் வைத்திருப்பதில் தங்கம் கொஞ்சமே இருக்கிறது. மற்றதெல்லாம் கலப்பேயாகும். என்னிடம் செல்லாக் காசுகளைக் காண்பித்து ஏமாற்ற நினைக்காதீர்கள். ஏனெனில், நான் ஏராளமான கலப்பற்ற தங்க நாணயங்களைப் பார்த் தவன். பகட்டுக் காட்டுவதற்குப் பதிலாக உங்களிடமுள்ள நாணயத்தை என்வசம் ஒப்படையுங்கள். ஏனெனில், அதன் மூலம், அதை உருக்கி எடுத்து கலப்பை எறிந்துவிட்டுச் சுத்தமான பொன்னை உங்களிடம் ஒப்படைக்க என்னால் இயலும். ஏராளமான கலப்பு இருப்பதைவிட கொஞ்சமேனும் சுத்தப்பொன் இருப்பது, விசேஷமானதல்லவா? உங்கள் நாணயத்தை என்னிடம் ஒப்படைத்துவிடுங்கள்; ஏனெனில், அதைச் சுத்தப்படுத்தி மீண்டும் உண்மையின் முத்திரை அடித்துக் கொடுக்கக் கூடிய யந்திரம் என்னிடம் உள்ளது. தற்புகழ்ச்சி, மாசுள்ள உள்ள நிலை ஆகியவற்றை விட்டொழித்து மீட்சி பெறுங்கள். அவை உங்களிட மிருப்பதை ஒப்புக்கொண்டு திருந்த வெட்கப்படாதீர்கள். ஏனெனில், இப்போது சுத்தமாய் இருக்கும் பலர், ஒரு காலத்தில் அசுத்தமாய் இருந்த வர்களேயாவர். இதனாலேயே ஓர் அறிஞர், "உண்மையானவர்களின் உண்மையை தற்பெருமையுள்ளவர்களே எளிதில் உணர்ந்து கொள் வார்கள்" என்றார். (உணர்ந்தும், தற்பெருமையால் ஒப்புக்கொள்ள மாட்டார்கள் என்பது பொருள்.) ஆரம்பத்திலிருந்தே சுத்தமாய் இருக்கக் கூடியவர்கள் அரிதினும் அரிதாவார். சற்று யோசித்துப் பாருங்கள். சிறுபிள்ளை ஆரம்பத்தில் பொய்யும் சொல்லிவிடுகிறது; அசுத்தத்திலும் மண்ணிலும் விளையாடிவிடுகிறது; ஆபத்தான காரியங்களையும் செய்து விடுகிறது. திருடவும் செய்துவிடுகிறது. ஆனால், அறிவு வளர்ச்சி ஏற்பட ஏற்பட, சிறுகச்சிறுக, இவற்றையெல்லாம்விட ஆரம்பித்து விடுகிறது; தன் தாய் தந்தையரின் முன்மாதிரியைப் பின்பற்ற ஆரம்பித்து விடுகிறது.

அதுபோலவே அல்லாஹ்வால் நன்மையருளப்படுபவர்கள் ஒழுக்கம் பயிலுகின்றனர்; பழைய நிலைகளை விட்டொழிக்கின்றனர். அல்லாஹ்வால் நன்மை யருளப்படாதவர்கள் தீமையையே நாடுகின் றனர்; தமது நிலைமையில் மாறுதல் காண முற்படாதிருக்கின்றனர்; அதன் பயனாய் இம்மையிலும் மறுமையிலும் நாசமடைகின்றனர்.

அல்லாஹ் வியாதியையும் அதற்குரிய மருந்தையும் ஒருங்கே சிருஷ்டித்துள்ளான். பாவங்கள் வியாதிகளாகும்; நற்கருமங்கள் ஒளடதங்களாகும். மெய்ப்பொருளுக்கு முரண் செய்வது நோயாகும்; பாவத்தின் போதையை விட்டொழிப்பது ஒளடதமாகும். இம்மருந்து களால் முழுப்பயன்களும் விளைவதென்றால், உங்கள் இதயத்தில் சிருஷ்டியின் பாசங்கள் அறுபட்டு, இறைவனின் பாசம் நிலவ வேண்டும். அவன் பக்கம் மனம் கொண்டு செல்லப்பட்டுத் தேகம் பூமியிலிருந் தாலும் மனம் வானலோகத்தில் வசிப்பதாய் இருக்கவேண்டும். இதய அளவில் அவன் ஞானத்தின்முன் தனிப்பட்ட பொருளாய் இருந்து ஷரீஅத்தின் சட்டங்களை நிறைவேற்றும் விஷயத்தில் மட்டும் இதர சிருஷ்டிகளின் சகவாசத்தில் இருந்துவர வேண்டும். அந்நிலையிலே நீங்கள் எக்குறைக்கும் ஆளாகாதிருக்கமுடியும். அப்போதே சிருஷ்டி கர்த்தாவுக்கும் சிருஷ்டிக்கும் ஒருங்கே குறைவற்றவர்களாய் விளங்கு வீர்கள். சுருங்கச் சொல்லின் அகமியத்தில் மெய்ப்பொருளின் சகவாசத் தில் மட்டுமிருந்து, பகிரங்கத்தில் சிருஷ்டிகளின் சகவாசத்திலிருப் பவர்களாக ஆகுதல் வேண்டும்.

உங்கள் நப்ஸை தலைவிரித்தாடித் திரியவிட்டு விடாதீர்கள். உங்கள் நப்ஸின் மீது நீங்கள் சவாரி செய்யாவிட்டால், உங்களின் நப்ஸ் உங்கள் மீது சவாரி செய்ய ஆரம்பித்துவிடும். நப்ஸை நீங்கள் பிற்படுத்தி வைக்காவிடில், அது உங்களைப் பிற்படுத்தி வைத்துவிடும். மெய்ப் பொருளுக்குக் கீழ்ப்படிவதில், நப்ஸ் உங்களுக்குக் கீழ்ப்படி யாவிட்டால், அதைத் தண்டனைக்கு ஆளாக்குங்கள். பசி, தாகம், அவமானம், ஜன சஞ்சாரமற்ற இடத்தில் ஏகாந்தம் ஆகியவற்றைக் கொண்டு அதைத் தண்டியுங்கள். உங்கள் நப்ஸ் சாந்தியும் சம்பூர்ண ஒழுக்கமும் (முத்ம யின்னா) அடையும்வரை நான் குறிப்பிட்ட சவுக்கடிகளை நிறுத்தாதீர்

கள். நீங்கள் சாந்தியும் சம்பூர்ண ஒழுக்கமும் அடைந்த பின்னரும் கூட, நப்ஸ் ஒழுங்காக நடந்து வருகிறதா என்ற விசாரணையை விட்டு விடாதீர்கள். எப்பொழுதும் அடிபணிந்து கிடக்கும் நிலைமைக்கு நப்ஸ் வரும்வரை, அதை ஒழுங்காக்கும் முயற்சி யில் சளைக்க வேண்டாம். இக்காரியங்களில் உதவி வேண்டுமாயின், அல்லாஹ்வின் தேட்ட முள்ளவர்களாகி, அவனின் ஏவல், விலக்கலின் படி ஒழுகிவர வேண்டும். இதற்கு உங்கள் உள்ளும் புறமும் ஒன்றாகுதல் வேண்டும். உங்களுடைய வாழ்விலும் ஜீவனிலும் சர்வமும் முரணின்றி ஒழுக்கமாகிவிடுதல் வேண்டும். எதிர்ப்பின்றிக் கீழ்ப்படிதலே ஆகிவிடுதல் வேண்டும்; அவநம்பிக்கை என்பதில்லாத, நன்றியறிதல் நிறைதல் வேண்டும்; சோம்பல் மறதி என்பதின்றிச் சுறுசுறுப்பும் உணர்ச்சியும் ஆகிவிடுதல் வேண்டும்; தீமையின்றி, நன்மையே நிறைதல் வேண்டும். உங்களுடைய உள்ளத்தில் அல்லாஹ்வன்றி வேறு எதற்கும் இடமிருப்பின், அதனால் ஈடேற்றம் ஏற்பட முடியாது. ஆயிரம் ஆண்டுகள் வரையிலும் சடங்கான ஸஜ்தாச் செய்தாலும், உங்கள் உள்ளம் அல்லாஹ் அல்லாத சகலவற்றினின்றும் முகம் திரும்பாதவரை அதனால் உங்களுக்குப் பயன் ஒன்றும் ஏற்பட முடியாது. இறைவனைத் தவிர வேறு எதையும் பக்திக்கும் அன்புக்கும் உரித்தாகப் பாராட்டி வரும்வரை நலனில்லை என்பேன். இறைவனுக்கு இணையாக உள்ளத்தில் இடம் பெறுபவைகளை இல்லாது செய்யும்வரை, அவன் மெய்ப் பக்தியை இழந்தவர்களாகவே இருப்பீர்கள். உங்கள் உள்ளம் உலகப்பொருட்களின் பற்றில் ஆழ்ந்து கிடக்க, வெளிக்கு மட்டும் அவற்றைத் துறந்தவர்களாய் இருப்பதில் யாது பயன்? "நெஞ்சங்களில் உள்ளவை யாவற்றையும் அல்லாஹ் அறிவான்" என்பதை நீங்கள் உணரவில்லையா? வாயால் அல்லாஹ்வின் மீதே நம்பிக்கை வைத்திருப் பதாகக் கூறிக் கொண்டு, உள்ளத்தில் அல்லாஹ் அல்லாத பொருட் களுக்கு இடம் கொடுப்பதில் உங்களுக்கு வெட்கமில்லையா?

அன்பர்களே, அல்லாஹ்வின் தயாளத்தைக் கண்டு ஏமாற்ற மடைந்து விடாதீர்கள்; விட்டுக் கொடுத்து பின்னால் அவன் பிடி ஏற்பட்டால், அது மகாகொடியதாக இருக்குமென்பதை மறந்துவிடா

தீர்கள். மெய்ப்பொருள் பற்றிய ஞானமற்ற புரோகிதர்களைக் கொண்டும் ஏமாற்றமடைந்து விடாதீர்கள். ஏனெனில், அவர்களின் கல்வி முழுவதும் அவர்களுக்குத் தீங்கு விளைவிக்குமேயன்றி நன்மை விளைவிப்பதன்று. அவர்கள் அல்லாஹ்வின் ஏவல்களை அறிந்திருந் தாலும் அல்லாஹ்வை அறியாதவர்களாய் இருக்கிறார்கள். மக்களை ஒரு காரியம் செய்ய ஏவுகிறார்கள்; அதை அவர்களே அனுஷ்டிப்ப தில்லை. மக்களை ஒரு காரியத்தை விட்டு ஒதுங்கும்படி உபதேசிக்கி றார்கள்; ஆனால் அவர்கள் அதை விட்டும் ஒதுங்குவதில்லை. பிறரை அல்லாஹ்வின்பால் அழைக் கிறார்கள்; அவர்களோ அவனை விட்டு ஒடுபவர்களாய் இருக்கிறார்கள். பாவங்களைக் கொண்டும் உத்தரவு மீறுதல்களைக் கொண்டும் அல்லாஹ்வுக்கு எதிரிடை செய்கிறார்கள். அவர்களின் எண்ணிக்கை விபரங்கள் யாவும் என்னிடமுள்ளன.

இறைவனே, எங்களுக்கும் அவர்களுக்கும் மீட்சியைக் கொடுத் தருள்வாயாக! எங்கள் அனைவரையும் முஹம்மது (ஸல்) அவர்களின் தொண்டர்களாக்குவாயாக; இறைவனே எங்களுள் ஒருவர் மீது மற்றவர் மோதாமலிருக்கவும், ஒருவரைக் கொண்டு மற்றவர் பயன் பெறவும், நாங்கள் அனைவரும் உன் கருணையில் இடம் பெறவும் அருள் புரிவாயாக! ஆமீன்.

பன்னிரண்டாவது பிரசங்கம்

ஹிஜ்ரி 545, துல்கஃதா பிறை 2 ஞாயிற்றுக்கிழமை காலையில் ஆண்டகை அவர்கள் நிகழ்த்தியது:

அன்பர்களே, நீங்கள் மெய்ப்பொருளை விரும்புவதாகச் சொல் வதும் சரியாய் இருப்பதில்லை; நீங்கள் உண்மையிலேயே அவனை விரும்புபவர்களாய் இருப்பதுமில்லை. ஏனெனில், அல்லாஹ்வை விரும்புவதாகக் கூறிக்கொண்டு இதரவற்றைத் தேடி அலைபவனுடைய கூற்று பொய்க்கூற்றேயாகும்.

இம்மையைத் தேடுவோர் எண்ணிறந்தோர்; மறுமையை நாடு வோர் வெகு சிலரே. உண்மையிலேயே அல்லாஹ்வை நாடுபவர்களோ அதிலும் சிலரே. சாதாரணமாகக் கிடைப்பதற்கரிதாய் இருப்பது அபூர்வ

மானதாகிவிடுகிறது. குடும்பவழிகளில், வம்ச பரம்பரைகளில் இத் தகைய மெய்ப்பக்தர்கள் ஒன்றிரண்டுபேர்களே காணுவதற்குக் கிடைக்கின்றனர். (இத்தகைய பக்தர்கள் உண்மையில் பூமியின் உயிர்ச் சத்தாக, மன்னர்களைபோல் இருக்கின்றனர்.) அவர்கள் நகரங் களினதும் நகரவாசிகளினதும் பொறுப்பாளர்களாகக் (ஆண்டவனால்) கருதப்படுகிறார்கள். அவர்களைக் கொண்டு மக்களை வந்தணுகும் துயர்கள் தூரமாகிவிடுகின்றன; அவர்களை முன்னிட்டு மழையும் வருஷிக்கிறது; அவர்களுடைய புண்ணியத்தால் வானத்திலிருந்து இறைவன் மழைத்தாரைகளைக் கீழ்நோக்கி விழச்செய்து பூமியைப் பசுமைப்படுத்துகிறான்.

இத்தகைய பக்தர்கள் தம் ஆரம்ப நிலையில் ஒரு மலையிலிருந்து மறு மலைக்கு, ஒரு நகரிலிருந்து மறு நகருக்கு, ஒரு காட்டிலிருந்து மறு காட்டுக்கு ஓடமுயற்சிப்பார்கள். எந்த இடத்தில் தம்மைப் பிறர் கண்டு கொள்ள நேரிட்டாலும் உடனே தம் இடத்தை மாற்றிவிடுவார்கள். சகல வற்றையும் தமக்குப்பின் விட்டெறிந்துவிட்டு, உலகத்தின் திறவுகோல் களை உலகத்தவரிடம் ஒப்படைத்து விடுவார்கள். இவ்வாறு நிரந்தரமற்ற நிலையில் இவர்கள் இருந்து வருவது மாற்றப்பட்டு, கோட்டையால் சூழப் பட்டவர்கள் போல் எங்கும் நகர முடியாதவர்களாக ஒரிடத்தில் தரிபட்டு விடுமாறு செய்யப்படுவார்கள். அருட்கள் யாவும் இவர்கள் உள்ளங்களை நோக்கிப் பாய ஆரம்பிக்கும். மறைமுகமான சாதனங்களால் சூழப்பட்டவர்களாக விளங்குவார்கள். விசேஷப் பாதுகாப்புக்குரியவர் களாகிவிடுவார்கள். சங்கையும் செய்யப்படுவார்கள்; கவனிக்கப்பட்டும் வருவார்கள்; சிருஷ்டிகளின்மீது அதிகாரிகளாக ஆக்கப்படுவார்கள். இவைகளெல்லாம் பகுத்தறிவுக்கு எட்டாதவை எனலாம். அந்நிலையில் இந்தப் பக்தர்கள் சிருஷ்டிகளின் மீது கவனம் செலுத்தக் கடமைப்பட்டு விடுகிறார்கள். அவர்கள் வைத்தியர்கள் போலாகி விடுவதால், அவர்கள் முன் சிருஷ்டிகள் நோயாளிகள்போலவே இருக்கின்றன.

இத்தகைய பக்தர்களுள் நீங்களும் சேர்ந்தவர்களென்று வாயால் கூறிக் கொள்வதால் பயனென்ன? இத்தகையோருக்கு இருக்க வேண்டிய அடையாளங்களில் ஏதேனும் ஒன்று உங்களிடம் உள்ளதா?

மெய்ப்பொருளின் சமீபத்துவத்துக்கும் அருள் பயத்துக்கும் அடையா ளங்கள் யாவை? அல்லாஹ்வின் சமுகத்தில் நீங்கள் அடைந்திருக்கும் பதவி யாது? உயர்வான ஆத்மீக ஆட்சி உலகில் உங்கள் பதவி யாது? ஒவ்வோர் இரவிலும் எந்நிலையில் உங்கள் கதவுகள் அடைக்கப் படுகின்றன? நீங்கள் அருந்துவதும் குடிப்பதும் சந்தேகப்பொருளா? அல்லது சுத்தமான ஹலால்ஆன பொருளா? நீங்கள் இம்மையின் பற்றுதலுடன் இருப்பவர்களா? மறுமையின் பற்றுதலுடன் இருப்பவர் களா? மெய்ப்பொருளின் பற்றுதலுடன் இருப்பவர்களா? ஏகாந்தத்தில் உங்களின் தோழனும் அன்பனும் யார்?

பொய்யர்களே, ஏகாந்தத்தில் உங்கள் தோழர்களாய் இருப்பவை உங்கள் நப்ஸும், ஷைத்தானும், இச்சைகளும் உலகக் கவலைகளுமே யாம். பகிரங்கத்தில் உங்கள் தோழர்களாய் இருப்பவர்கள் மார்க்கத் துக்கு முரண்பட்டவர்களும் வீண்பேச்சுக்காரர்களுமான மனித ஷைத்தான்களேயாம். நான் குறிப்பிட்ட பக்தி நிலை வெறும் பேச்சால் உண்டாகி விடுவதன்று. இது பற்றிய வாயாடுதல்கள் வீணே; அவற்றால் பயனொன்றுமில்லை.

அல்லாஹ்வின் சமுகத்தில், அமைதியும் அகந்தையற்ற நிலையு முடையவர்களாகி, ஒழுக்கமின்மையிலிருந்து ஒதுங்கி இருங்கள். பேசுவதென்றால், அல்லாஹ்வையும் அவனுக்குரியவர்களையும் பற்றிப் பேசி, அதன் மூலம் புண்ணியம் பெறுங்கள். அதுவும் வெளிரங்கமாய் மட்டும் உரிமை பாராட்டிக் கொண்டு உள்ரங்கத்தில் ஒன்றுமில்லா திருப்பதில் பயனில்லை. ஏனெனில் அகம் ஒத்திராத புறம் என்றுமே வீணானதுதான்.

ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், "நாள் முழுவதும் பிறரின் மாமிசத் தைப் புசிப்பவனுடைய (புறம்பேசித் திரிபவனுடைய) நோன்பு, நோன்பா காது என்றுரைத்திருப்பதை நீங்கள் அறிவீர்களா? மேலும், வெறுமனே உண்ணுவதாலும், குடிப்பதாலும், நோன்பு, திறப்பதாலும் மட்டும் நோன்பு முற்றுப் பெறாதென்றும், அவர்கள் போதித்துள்ளார்கள். புறம் பேசுவதைக் கைக் கழுவுங்கள். புறம் பேசுதல், நெருப்பு காய்ந்த விறகுகளை சாப்பிடுவதுபோல் நன்மைகளைச் சாப்பிட்டு விடுகிறது. நேர்மையாள

னாக ஆகிவிட்டவனிடம் புறம் பேசுதல் எனும் குணம் இருக்கமுடியாது. புறம் பேசுபவன் என்று பேரெடுப்பவனுடைய பெயர் மக்களிடையில் மதிப்பிழந்துவிடும்.

மேலும், காமப் பார்வையைவிட்டுப் பேணிக்கொள்ளும்படியும் உங்களை எச்சரிக்கிறேன். ஏனெனில், அப்பார்வை உங்களுள்ளங்களில் பாவங்களின் வித்துகளை விதைத்துவிடும். அதன் பலாபலன் இம்மையிலும் மறுமையிலும் நல்லதாய் இருக்காது.

பொய்ச் சத்தியம் செய்வதை விட்டும் பேணிக்கொள்வதும் அவசியமாகும். ஏனெனில், அது வாழ்மனைகளைப் பாழும் குட்டிச் சுவர்களாக்கி விடுகிறது; சொத்தினதும் மதத்தினதும் புண்ணியங்களை (பரக்கத்தை) இல்லாமலாக்கி விடுகிறது. உங்களுள் வியாபாரத்தைப் பொய்ச் சத்தியம் கொண்டு நடத்தி தீனை நஷ்டத்துக்குள்ளாக்குபவர்களின் நிலையும் கைசேதத்துக்குரியதேயாகும். உங்களுக்கு உண்மையில் அறிவிருப்பின், அதிலுள்ள நஷ்டத்தின் பாரதூரத்தை உணரத் தவறமாட்டீர்கள். "இச்சரக்கு சத்தியமாக வேறு எக்கடையிலும் இல்லை" என்கிறீர்கள்; "சத்தியமாக இவ்வளவு அடக்கவில்லை" என்று சொல்கிறீர்கள். சொல்வதெல்லாம் பொய்யென்று தெரிந்திருந்தும் சொல்கிறீர்கள்; உங்களுடைய பொய்க்கு ஆதாரமாய் அல்லாஹ்வின் நாமத்தையும் சந்தியில் இழுக்கிறீர்கள். ஆனால், விரைவில் அந்தகர்களாயும் வீழ்ச்சியடைந்தவர்களாயும் ஆகிவிடுவீர்கள். அல்லாஹ்தான் உங்கள்மீது கருணை புரிந்து காப்பாற்றவேண்டும்.

மெய்ப்பொருளான இறைவன் முன் ஒழுக்கத்துடன் நடவுங்கள். ஷரீஅத்தின் ஒழுக்கங்களிலிருந்து ஒழுக்கம் பயிலாதவனுக்குக் கியாம நாளில் ஒழுக்கத்தின் பயிற்சி நெருப்பால் (நரகத்தால்) அளிக்கப்படும் என்பதை ஞாபகத்திலிருத்துங்கள்.

(ஹஜ்ரத் அவர்கள் உபந்நியாசித்துக் கொண்டிருந்த இச்சந்தர்ப்பத்தில், சபையினரில் ஒருவர், "நீங்கள் எச்சரித்த தீய குணங்களைக் கையாளுபவனுடைய நோன்பும் ஒலுவும் செல்லுபடியற்றவை என்று உத்தரவு பிறப்பிக்குமாறு பிரார்த்திக்கிறேன்" என்றார். இக்கேள்வி

யைச் செவியில் வாங்கிக் கொண்டு, ஹஜ்ரத் அவர்கள் தொடர்ந்து பேசியதாவது:)

அன்று; இதனால் நோன்பும் ஒலுவும் செல்லுபடியற்றதாகி விடமாட்டா. ஆனால், அவை சிறப்புப் பெறுவதற்கு வேண்டிய லட்சணங்களைப் பற்றித் தான் நான் நல்லுபதேசம் செய்கிறேன் என்பதை மறந்து விடவேண்டாம்! (குறிப்பு: ஹஜ்ரத் அவர்களே ஷரீஅத்துக்கு மீறி உத்தரவு கொடுக்கப் பின்வாங்கியிருக்கையில், சில போலி ஞானிகள் வாய்கூசாது இடும் உத்தரவுகள் பற்றி என்னென்பது! மொழி பெயர்ப்பாளன்)

அன்பர்களே, நாளை வருங்கால பூமியின் தரைமட்டத்திலிருந்து மறைந்து, சமாதியில் இடம் பெறப்போவதில் உங்களுக்குச் சந்தேகமா? நாளை என்பது இருக்கட்டும்; அடுத்த கணத்திலேயே நீங்கள் அவ்விதம் மறைந்துவிடவும் கூடுமல்லவா அப்படியிருந்தும் நீங்கள் மறதிக்கு ஆளாகியிருப்பது முறையா? உங்கள் உள்ளங்கள் ஏன் கடினமாகவே இருக்கின்றன? உச்சியிலிருந்து உள்ளங்கால்வரை கல்லே போல் சமைந்து கிடக்கிறீர்களே! நானும் போதிக்கிறேன்; இன்னும் பலரும் போதிக்கத்தான் செய்கிறார்கள். அப்படியிருந்தும் நீங்கள் பழைய பிற்போக்கு நிலையிலேயே தானே நிற்கிறீர்கள். திருகூர்ஆனின் மொழிகள் உங்களுக்கு ஓதிக் காண்பிக்கப்படுகின்றன; நபியின் உபதேசங்களும் முன்னவர்களின் வரலாறுகளும் உங்களுக்கு எடுத்தோதப்படுகின்றன; அப்படியிருந்தும் அவற்றால் நீங்கள் கண் விழிக்கக் காணோம். வெட்கப்படவோ, உங்கள் நடைமுறையில் மாறுதல் ஏற்படவோ காணோம். நல்லுபதேசம் செய்யப்படும் இடத்தை அடுத்தும், படிப்பினை பெறாதவனோ மானிடரில் கேடு கெட்டவனாவான்.

அன்பர்களே, அல்லாஹ்வின் அவ்லியாக் (நண்பர்)களை அலட்சியம் செய்வதானது மெய்ஞ்ஞானம் குறைவதற்குரிய வழியாகும். அத்தகைய நல்லோர்கள்மீது குறைகூற முற்பட்டு விடுகிறீர்கள். "இவர்கள் ஏன் எங்களுடன் நெருங்கிப் பழகாதிருக்கிறார்கள், ஏன் எங்கள் சகவாசத்தில் அமரப் பின்வாங்குகிறார்கள்" என்று கூறுகிறீர்கள், இவ்வாறெல்லாம் நீங்கள் கூறுவதற்குக் காரணம், நீங்கள் உங்களையே அறியா

திருப்பதுதான். தன்னையறியாதிருந்தால், பதவிகளின் தரா தரங்களும் தெரியாதே இருக்குமெனலாம்.

உங்கள் உலகையும் அதன் பலாபலனையும் மெய்காணாதிருக்கும் அளவுக்கு உங்களுடைய மறுமைபற்றியும் அறியாதிருப்பீர்கள்; மறுமை பற்றிய அறியாமை இருக்குமளவுக்கு மெய்ப்பொருள் பற்றிய ஞானமும் இல்லாமலேயே இருக்கும்.

உலக மாயையில் மூழ்கிக் கிடப்பவர்களே, விரைவிலேயே இம்மை யிலும் மறுமையிலும் நஷ்டங்களின் வாயில்கள் உங்கள் முன் திறக்கப் படவிருக்கின்றன வென்பதை உணருங்கள். உங்கள் கேடுகெட்ட நிலைமை கியாம நாளில் பகிரங்கமாக வெளியாக விருக்கிறதென் பதையும் உணருங்கள். கியாமநாளோ உங்களுக்கு நஷ்ட நாளாக– அவமான நாளாக இருக்குமென்பதை உணருங்கள். மறுமை வருமுன் உங்கள் நப்ஸிடம் கணக்குக் கேளுங்கள். உலகில் காணப்படும் தெய்வ அன்பையும் இரக்கத்தையும் கண்டு ஏமாற்றமடைய வேண்டாம். பாவங்களிலும் கலகங்களிலும் அநியாயங்களிலும் கேடுகெட்டவர் களாய்த் தரிபட்டு நிற்கிறீர்கள். சிலருக்கு மரணத்துக்கு முன் ஜுரம் வந்து மரணத்தின் முன்னறிவிப்பாக இருப்பதுபோலப் பாவங்கள் 'குபிரு'க்குரிய முன்னறிவிப்புகளாய் இருக்கின்றன. மரணம் வருமுன், ஆத்மாக்களைக் கைப்பற்றும் 'மலக்கு' வருமுன் பாவங்களிலிருந்து மீட்சி பெற்றுக் கொள்ளுங்கள்.

வாலிபர்களே, (பாவங்களிலிருந்து) மீட்சி(தவ்பா) பெறுங்கள். மெய்ப்பொருளாகிய இறைவன், நீங்கள் மீட்சிப் பெறுவதற்குத் தூண்டுதல் பெறுமாறு உங்களைச் சோதனைக்கு ஆளாக்குவதை நோட்டமிடுங்கள். தீமைகளிலேயே மீண்டும் தரிபாடாக வேண்டாம்.

விசேஷமான நல்லடியார்களன்றி, மற்றோர்க்கு வரும் சோத னைகள் யாவும் இக்காலத்தில் தண்டனைகளாகவே இருக்கின்றன; அச்சோதனைகள் அவர்களுக்கு நன்மையாக முடிவதில்லை; பாவங் களின் பகரமான தண்டனையாகவே இருக்கின்றன. அதுபோலவே பெரும்பான்மையானவர்களுக்கு உண்டாகும் பேறுகளோ, பதவிகளோ, தெய்வ சங்கையோ குறிப்பிடத்தக்கவையாய் இருப்பதுமில்லை.

ஆயினும், அல்லாஹ்வுக்குரியவர்கள் சோதனைகளுக்கு உட்படுத் தப்படுவது, அவர்கள் மன்னனின் முன் அவர்களின் பதவி உயர்வதற் காகவேயல்லாது வேறன்று; இத்தகைய சோதனையான நேரத்தில் அவர்கள் பொறுமையைக் கடைப்பிடிப்பார்கள். ஏனெனில், அவர்க ளுக்குத் தேட்டமாய் இருப்பது இறைவன் ஒருவன் தான். இவ்வாறு சோதனையான சமயத்தில் பொறுமையுடனிருக்கும் நிலை யில் அவர்கள் குறைவற்றிருந்தால் அவர்கள் அரசை அடைகிறார்கள். குறைவிருந்தால், தாம் இன்னும் அழிவின் நிலையிலேயே இருப்பதாக அவர்கள் நினைப் பார்கள்.

எனது அல்லாஹ்வே, அவர்களை அழிவுக்கு ஆளாக்காதிருக்கப் பிரார்த்திக்கிறேன், உன் சமீபத்துவத்தையும், இம்மையிலும், மறுமை யிலும். இம்மையில் அகக்கண் கொண்டும், மறுமையில் புறக்கண் கொண்டும் உன் தரிசனம் பெறுவதையும் அவர்களுக்கு அருள்வாயாக!

சமூகத்தவர்களே, அல்லாஹ்வின் அருளும் கருணையும் வருமோ வராதோ என்று நம்பிக்கை இழந்து விடாதீர்கள்; ஏனெனில், அவன் சமீபமாகவே இருக்கிறான். நம்பிக்கையை இழந்து விடாதீர்கள்; ஏனெனில், அல்லாஹ்வே சிருஷ்டிகர்த்தன், புதிய நிலையை அவன் சிருஷ்டித்துக் கொடுத்துவிடில் அதில் ஆச்சரியம் என்ன இருக்க முடியும்!

சோதனை யினின்றும் வெருண்டோடாதீர்கள். பொறுமையைக் கொண்டு ஏற்கப்படும் சோதனையே சர்வ நன்மைகளினதும் அஸ்திவார மாகும். நபித்துவத்தினதும், தெய்வத் தோழமையினதும் (விலாயத்), தெய்வ ஞானத்தினதும் (மஃரிபத்), தெய்வ அன்பினதும் அஸ்திவாரமாய் இருப்பது சோதனையேயாகும். ஆகவே, சோதனையில் பொறுமை யில்லாது போகும்போது அஸ்திவாரமே இல்லாத நிலையாகிவிடுகிறது. அஸ்திவாரமின்றிக் கட்டடம் அந்தரத்தில் நிற்பதெப்படி?

சோதனையினின்றும் ஆபத்தினின்றும் பயந்தோடுகிறீர்கள். காரணம் ஞானத்தினதும், தெய்வத் தோழமையினதும், தெய்வ சமீபத்து வத்தினதும் தேவையை நீங்கள் அறியாதிருக்கிறீர்கள். இதை விடுத்து, பொறுமையைக் கைக்கொள்ளுங்கள்; நடைமுறை அனுஷ்டானங்களைக்

கடைப்பிடியுங்கள். இதயமும், உள்ளமும், ஆத்மாவும் கொண்டு தெய்வ சமீபத்துவத்தின் தலை வாயிலின் பக்கம் செல்லும்வரை இவ்விதமிருந்து வாருங்கள்.

அறிஞர்களும் (உலமா), தெய்வத் தோழர்களும் (அவ்லியா), புதிய ஜீவன் பெற்றவர்களும் (அப்தால்) நபிமார்களின் வாரிசுதாரர்களாவர். நபிமார்கள் வியாபாரத்தின் பொறுப்பாளர்களெனின், இவர்கள் முன் சென்று விலை கூறுபவர்களாவர்.

மூமின்கள் அல்லாஹ்வன்றி வேறெதற்கும் பயப்படவுமாட்டார்கள்; வேறெதையும் பொருட்படுத்தி எதையும் அதனின்று எதிர்பார்க்க வுமாட்டார்கள். அதற்கான சக்தி அவர்கள் இதயத்திலும் உள்ளத்திலும் அளிக்கப்பட்டிருக்கிறது. அல்லாஹுத் தஆலா அவர்களைத் தன் பக்கம் உயர்த்திக் கொள்ளும்போது, அவர்களுடைய உள்ளங்கள் அவனிடமிருந்து சக்தியை அடைவதில் அதிசயமென்னவிருக்கிறது! அவர்களோ என்றும் அவன் சந்நிதானத்திலேயே இருப்பவர்களாவார்கள். அவர்களுடைய உடல் பூமியிலிருப்பினும் உள்ளம் மெய்ப்பொருளின் சந்நிதானத்திலேயே இருக்கும். அல்லாஹுத் தஆலா அருளியிருப்பதாவது: "நிச்சயமாக, அவர்கள் நம் சந்நிதியில் விசேஷ மானவர்களாவார்கள்; நன்மையாளர்களாவார்கள்; அவர்கள் தம்தம் காலத்தில் பொறுக்கி எடுக்கப்படுகிறார்கள்." அவர்களின் உள்ளங்கள் விசேஷச் சிறப்புப் பெற்றுள்ளன; அவர்களின் வெளிரங்கம் ஜோதி பெற்றதாக விளங்குகிறது. இதனாலேயே சிருஷ்டிகளிலிருந்து அவர்கள் தனிப்பட்ட வர்களாகிவிடுகிறார்கள்; பிறர் விரும்புவன அவர்களால் விரும்பப்படாது போய்விடுகின்றன. அவர்கள்முன் செல்லச் செல்ல, வந்த வழிகளில் புல்லடைந்து போய்விடுகிறது; பிறகு அவர்கள் வந்தவழியே திரும்ப நேரிடுவதில்லை. அவர்களோ ஏகாந்தத்தை உவந்தவர்களாயும் ஜன சஞ்சாரமற்ற வனாந்தரங்களையும் சமுத்திரக்கரைகளையும் விரும்புபவர்களாயும் இருக்கின்றனர். காட்டுச் செடிகொடிகளை உணவாய்ப் பெற்று ஏரி குளங்களில் குடிப்பைப் பெற ஆரம்பித்துவிடுகின்றனர். காட்டுப் பிராணிபோல் ஆகிவிடும் அவர்களின் இந்நிலைமையிடை, மெய்ப்பொருளான இறைவன் அவர்களைத் தன் சமீபத்துவத்துக்கும்

அன்புக்கும் உரித்தானவர்களாக்குகிறான். அவர்களின் உடல்களை நபிமார்களினதும், சத்தியசீலர்களினதும் (சித்தீக்), தியாகிகளினதும் (ஷஹீது) உடல்களுடன் சேர்த்து எழுப்பப்படுமாறு செய்கிறான்; அவர்களின் அகத்தைத் தன்னிடம் தரிபடச் செய்கிறான். அவர் களும் இரவும் பகலும் ஏகாந்த நிலையில் அவன் தொண்டிலேயே தரிபட்டு நிற்பார்கள். பக்தர்களின் இன்பம், அன்பை நாடுபவர்களின் மனமகிழ்ச்சி மெய்ப் பொருளான இறைவனாகவே இருக்கிறான்.

அன்பர்களே, (இப்புவியில்) இனிப்பும் கசப்பும், சீரும் கேடும், சுத்தமும், அசுத்தமும் ஒருங்கே இருப்பது அவசியமே. இந்நிலையில் நீங்கள் பரிபூரண சுத்தத்தை நாடினால் உங்கள் உள்ளத்தில் சிருஷ்டிகளின் தொடர்பற்றவர்களாய் மெய்ப்பொருள் சம்பந்தமுள்ளவர்களாய் ஆகுங்கள். உலகிலிருந்து அப்புறப்பட்டவர்களாகி உற்றார், உறவினரை விட்டுவிட்டு, அவர்களை இறைவன் பொறுப்பில் சாட்டிவிட்டு, அனைவரை விட்டும் உள்ளம் நிர்வாணம் பெற்று வெளியாகி விடுமாறு செய்து மறுமையின் வாயிலண்டை வாருங்கள். மறுமை மயத்திலேயே குடி கொண்டிருக்கும் அங்கும் தன் இறைவனை அடையாத நிலைமையில் அங்கிருந்தும் வெருண்டோடி மெய்யின் சமீபத்துவத்தைத் தேடியவர்களாய் வெளியேறுங்கள். அவனை நீங்கள் அடைந்து விடின் அப்போது தான் அவன் புறத்திலிருந்து பூரணப் பரிசுத்தமென்பது உங்களுக்கு உரித்தாகக்கூடியதாய் இருக்கும்.

அல்லாஹ்வின் அன்பன் பிறவற்றை கையிலேந்தி என்ன செய்யப் போகிறான்? சுவர்க்கமென்பது பதவிதேடுபவர்களுடைய இடமேயா கும்; வியாபாரிகளின் நிலையாகும். அவர்கள் உலகத்தைத் துறந்து சுவர்க்கத்தைப் பெறுகிறார்கள். இதனாலேயே மெய்ப்பொருளான இறைவன் "நப்ஸ் நாடுபவற்றைக் கொண்டு கண்கள் குளிர்ச்சி அடையும் யாவும் சுவர்க்கத்தில் உள்ளன" என்றுரைத்துள்ளான். இந்த ஆயத்தில் இறைவன் இதயத்தை (கல்பை)க் குறிப்பிட்டிருக்கிறானாவென்று பாருங்கள். உள்ளத்தை (பாத்தின்)க் குறிப்பிட்டிருக்கிறானாவென்றும் நோக்குங்கள். மறைமுகத்தை (ஸிர்)க் குறிப்பிட்டிருக்கிறானாவென்றும் பாருங்கள், அன்று! ஏனெனில், சுவர்க்கமென்பது நோன்பு

நோற்றவர்கள், 'தஹஜ்ஜத்' என்னும் இரவு விழித்துப்புரியும் தொழுகை யாளர்கள், இச்சைகளையும் இன்பங்களையும் துறந்தவர்கள் ஆகிய நல்லடியார்களுக்கு அவர்கள் இம்மையில் துறந்த உணவு, பூங்காவனம், இல்லம் ஆகியவற்றிற்குப் பகரமாகக் கிடைக்கும் பேறேயொழிய வேறன்று.

ஆனால், இதயம் பொங்கி உள்ளம் விழித்தவர்களான இறைவனின் அன்பர்கள் வேண்டி நிற்கும் பதில் மெய்ப்பொருளின் சமீபத்துவமும் தரிசனமுமேயாகும்.

உங்களிடமிருந்து நான் எதிர்பார்ப்பது வெறும் வாய்ப்பேச்சையன்று; அனுஷ்டானத்தைத்தான். ஏனெனில், அல்லாஹ்வுக்கென்று மட்டும் அனுஷ்டானங்களில் ஈடுபடக்கூடிய அறிஞர்கள் அடிபட்டும் வாய் திறக்காத மான்களைபோல், மிதிபட்டும் வெட்டப்பட்டும் மௌனமாகவே இருக்கும் பூமியைபோல் மௌனத்தைக் கையாளுபவர்களாய் இருப்பார்கள்.

அல்லாஹ்வுக்குரியவர்கள் அல்லாஹ்வல்லாதவற்றைக் கண் கொண்டு பார்ப்பதுமில்லை; அவற்றுக்குச் செவி சாய்ப்பதுமில்லை. அவர்களுக்கு நாவில்லை; இதயமுண்டு. அவர்கள் தம்மையும் பிறரையும் அழித்தவர்களாவார்கள்; சதா அதே நிலைமையிலேயே இருப் பார்கள், பிறகு அல்லாஹ் நாடும்போதும் அவர்களை உயிர்ப்பிக்கிறான்; அவர்களின் நாவை அசையச் செய்கிறான். அன்பில் மதி இழந்தவர்கள் போல் அவர்கள் ஆகிவிடுகின்றனர். மன்னாதி மன்னனான ரப்பு அவர்களைத்தன் பக்கம் இழுத்ததும் கருணையின் கரத்தால் அவைகளை அசைவுறச் செய்கிறான். தனக்காகவென்றே இவ்வாறு அவர்களுக்குப் புத்துயிரூட்டுகிறான். அவர்களைத் தனக்கென்று விசேஷமாக இருப் பவர்களாக்கி விடுகிறான். மூஸா நபியை நோக்கி "உம்மை என் சொந்தத்துக்கென்றே சிருஷ்டித்தேன்" என்றருளியதுபோல் அவர்களையும் ஆகுமாறு செய்து விடுகிறான். இத்தகைய இறைவனோ எந்த ஒப்புவமையுமற்றவன்; சகலவற்றையும் கேட்டுக் கொண்டிருப்பவன்; அறிபவன், கஷ்டமின்றியே சுகத்தையும், மதிமயக்கமின்றியே அன்பையும், குறைவின்றியே அருட்கொடைகளையும், துயரமின்றியே

இன்பத்தையும், கசப்பில்லாத இனிப்பையும், அழிவில்லாத ஆட்சியையும் உண்டாக்கிக் கொடுக்கக் கூடியவன். "இவன் ஆதிக்கமென்பது மெய்ப் பொருளான அல்லாஹ்வுக்கே உரியது" (திருகுர்ஆன்) என்பது இறைவனின் ஒரு வாக்கியம். அவனையடைபவர்களுக்கு இப் புவியிலேயே பேரின்பம் உண்டாகிவிடுகிறது. இது தவிர உள்ள எந்நிலை மையிலும் உலகில் பூரண இன்பத்தை அடைவது முடியாத விஷயம். ஏனெனில் இவ்வுலகமானது ஆபத்துக்கள், துயரங்கள் என்பவற்றின் ஸ்தலமாகும்; ஒரு நாள் வெளியேறிவிட வேண்டிய இடமாகும்.

ஆகையால், உங்கள் உள்ளத்திலிருந்தும், கரங்களிலிருந்தும் உலகத்தை எடுத்தெறிந்துவிடுங்கள். அது முடியாது போய்விடின், கரங்களில் உலகம் இருக்கவிட்டு விட்டு, உள்ளத்திலிருந்தாவது அதை அப்புறப்படுத்திவிடுங்கள். பிறகு, சக்தி அதிகரித்தபின் கரங்களிலிருந்தும் அதை எடுத்தெறிந்து, அல்லாஹ்வுக்குரியவர்களான ஏழைகளுக்குக் கொடுத்துவிடுங்கள். அப்படிக் கொடுத்து விட்டாலும், உலகில் உங்களின் பங்கு எதுவோ அஃது எங்கும் சென்றுவிடப் போவதில்லை நீங்கள் செல்வர்களாய் இருப்பினும், ஏழைகளாயிருப்பினும், துறந்தவர்களாயிருப்பினும், ஆசைப்படுபவர்களாயிருப்பினும் வரவேண்டிய விதிப் பயன்கள் வந்தே தீரும். (இம்மை மறுமையின் நலன்களின்) அஸ்திவாரம், இதயம், உள்ளம் ஆகியவை சீருடன்–சுத்தமுடன் இருப்பதுவேயாகும். அறிந்து அதன்படி கடைப்பிடித்து கடைப்பிடிப்பதில் உறுதியுடன் இருந்து அனுஷ்டானம் செய்து, அனுஷ்டானத்தில் நிஷ்களங்க நிர்ணயம் பெற்றிருந்து, மெய்ப்பொருளை மெய்யாகவே தேடுவது கொண்டே இச்சுத்தம் ஏற்படுவதாய் இருக்கிறது.

அன்பர்களே, முதலில் மார்க்க ஞானம் பெற்று, பிறகே துறவறத்தை அனுஷ்டிக்க வேண்டுமென்று நீங்கள் உபதேசிக்கப்பட்டதில்லையா? முதலில் வெளிரங்கமான கல்விகளைக் கொண்டு ஞானம் பெற்று, பிறகே மறைவான ஞானம் பெறுவதற்காகத் துறவறம் பூண வேண்டும். பகிரங்கமான ஷரீஅத் சட்டங்களின்படி ஒழுகி வாருங்கள். அதுவே இறுதியில், நீங்கள் கற்றறியமுடியா ஞானத்தளவில் உங்களைக் கொண்டு சேர்க்கக்கூடியதாகும். ஜோதி இரு திறப்பட்டதாகும்;

வெளிரங்கத்தின் ஜோதி ஷரீஅத் ஆகும்; மறைமுகத்தின் ஜோதி மெஞ்ஞானம் ஆகும். (இரண்டும் ஒருங்கே இன்றியமையாதவையாகும்.) மறைமுக ஜோதியே உங்களுக்கும் உங்கள் இறைவனுக்குமிடையே நிலவவேண்டிய ஜோதியாகும். நீங்கள் கற்ற ஞானத்தை அனுஷ்டானத்துக்குக் கொண்டுவரும் அளவுக்கே மெய்ப்பொருளான இறைவனளவில் செல்லும் வழி நெருங்கிக் கொண்டு வரும்; விசாலமாகிக் கொண்டு வரும். அவனளவில் செல்லும் வழியின் கதவு திறந்துவிடும்; அக்கதவு உங்களுக்கென பிரத்தியேகமானதாகிவிடும்.

எங்கள் இறைவனே, இம்மையின் நன்மையையும், மறுமையின் நன்மையையும், நரக வேதனையினின்று விமோசனத்தையும், ஒருங்கே எங்களுக்கு அளித்தருள்வாயாக!

பதிமூன்றாவது பிரசங்கம்

ஹிஜ்ரி 545 துல்கஃதா பிறை 4 செவ்வாயன்று ஆண்டகை அவர்கள் நிகழ்த்தியது:

அன்பர்களே, இம்மையைவிட மறுமையை மேலானதாகக் கொள்ளுங்கள். அதனால் இம்மையிலும் மறுமையிலும் உங்களுக்கு ஒருங்கே நற்பயன் உண்டாகும். மறுமையைவிட இம்மையையே பெரிதெனக் கொண்டால், இரண்டிலுமே நஷ்டவாளிகளாவீர்கள். இறைவன் நாட்டத்துக்கு எதிரிடையாய் நடந்தால் தண்டனை ஏற்படாது என் செய்யும்?

இம்மையில் ஆழ்ந்துவிடாதிருக்கும் நிலைமையில், மெய்ப்பொருளாகிய இறைவன் உங்கள் மீது அனுக்கிரகம் செய்வான்; உலகத்தை எடுக்கும் சந்தர்ப்பத்திலும் ஆதரவளித்தருளுவான். அவ்வாறு கையிலெடுக்கப்படும் உலகச் சம்பத்தும் பேறு (பரக்கத்) நிறைந்ததாகவே இருக்கும்.

மூமினாகிய நல்லடியான் தன் இம்மைக்கும் மறுமைக்கும் ஒருங்கே பிரயாசைப்படுபவனாவான். அதாவது, இம்மைக்குத் தேவை யுள்ள அளவுக்குத்தான் தேடுவான். தன் ஜீவியத்துக்கு எவ்வளவு அவசியமோ அவ்வளவையே தேடும் நாட்டமுள்ளவனாய் இருப்பான். அதிகம் திரட்ட

வேண்டுமெனும் அபிலாஷை அவன் உள்ளத்தில் இருப்பதில்லை. உலகத்தையே தன் முழு லட்சியமாகக் கொள்பவன் அறிவீனனேயாவான். முதலில் மறுமையையும், இறுதியில் இறைவனையும் லட்சியமாகக் கொண்டிருப்பான் அறிஞன்.

உலக ஜீவனாம்ச முயற்சியில் ஒரு ரொட்டித் துண்டு உங்கள் முன் வந்து, உங்களுடைய நப்ஸ், அதிகம் இல்லையே என்று கலகம் செய்ய முற்படும்போது, அந்த ரொட்டித் துண்டுகூட இல்லாதவர்களின் நிலையை ஞாபகப்படுத்திப் பாருங்கள்!

மெய்ப்பொருளின் வழியில் உங்கள் நப்ஸை உங்கள் வெறுப்புக் குரித்தானதாயும் எதிரியாயும் பாவிக்காத வரை நீங்கள் ஈடேற்றமடைய முடியாது.

மெய்யன்பர்கள் பரஸ்பரம் ஒருவரையொருவர் அறிந்து கொள்வர்; ஒவ்வொரு மெய்யன்பனும் தன்னைப் போன்றே மெய்யன்பனைக் காணும்போது அவனிடம் கமழும் மெய்யின் மணத்தை நுகரத் தவறான்.

மெய்ப்பொருளையும் மெய்யன்பர்களையும் விட்டொதுங்கிச் சிருஷ்டிகளை இறைவனுக்கு இணையாகக் கொண்டு அவற்றை நோக்கித் திரிபவர்களே, இச்சிருஷ்டிகளின்பாலுள்ள உங்கள் நோக்கு எத்தனை காலம் நீடிக்கமுடியுமென்பது பற்றி நீங்கள் சிந்திக்க வில்லையா? உங்களுக்கு உண்மையிலேயே அவற்றால் நன்மை ஏற்படுமென்று நினைக்கிறீர்களா? அவற்றின் கரங்களில் உங்களுடைய நன்மையுமில்லை; தீமையுமில்லை; கொடையுமில்லை; கருமித்தனமுமில்லை; நன்மை தருபவன் ஒருவனேயாவான். அசையச் செய்பவனும் ஒருவனேயாவான். அவிழ்த்துவிடுபவனும் அடக்கிவைப்பவனும் அமரச் செய்பவனும் ஒருவனேயாவான். கொடுப்பவனும் கொடாதவனும் ஒருவனேயாவான். அமரச்செய்பவனும் சிருஷ்டித்தவனும் சம்ரட்சிப்பவனும் அல்லாஹ் ஜல்லஜலாலுஹு ஆன ஒருவனே ஆவான். அவன் நித்யன்; நிரந்தரமாய் இருப்பவன்; என்றுமிருப்பவன்; அவனே சிருஷ்டிகளுக்கு முன்னவன்; உங்கள் பெற்றோர் மூதாதையர்களின் சிருஷ்டிக்கு முன்னரானவன்; வானங்களையும் பூமியையும் அவற்றில் உள்ளவை